

# சமூகக்கல்வி

சமுதாயத் தலைவர்கள் மற்றும்
உறுப்பினர்களுக்கான
பயிற்சிக் கையேடு

SCINDeA
Yelagiri Hills

# சமூகக்கல்வி

## சமுதாயத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சிகையேடு

## உள் செல்வதற்கு முன்:

இந்தப் பயிற்சிக்கையேடு, சமூகப்பணியில் ஆர்வமுள்ள சமுதாய உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்காக தயாரிக்கப்பட்டது. சமூகக் கல்வி பற்றிய அறிமுகத்தோடு சமூக பொருளாதார, அரசியல் கட்டமைப்புகள் பற்றியும், குடிமக்களுக்கான அரசமைப்புக் கல்வியையும் இக்கையேடு உள்ளடக்கியுள்ளது. சமூகவியல் தத்துவங்கள், இந்திய அரசியலமைப்புச்சட்டம், விளக்கும் உரிமைகள், அரசாங்க அமைப்புகள் குறித்த விதிமுறைகள் ஆகியவற்றை மையமாக்கொண்டு இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மக்களாட்சி அமைப்பின் முக்கிய அங்கங்கள், பங்கேற்புஜனநாயகம், சமுதாய முன்னேற்றத்திக்கான மக்கள் பங்கேற்பு எவ்வாறு அமைய வேண்டும், அதற்கான குடிமக்களுக்கான உரிமைகள், கடமைகள், தலைமைத்துவ பண்புகள் பற்றியும் இக்கையேடு வழிநடத்துகிறது.

பயிற்சிக்கையேடு, சமூகக் கல்விசார் தகவல்களை அளிப்பதோடு, பிற சட்டபூர்வமான தகவல்களையும் அளிக்கிறது. சமூகப்பணியில் ஆர்வமுள்ள பயிற்சியாளர்கள் இக்கையேட்டினைப் பயன்படுத்தும்போது தங்களுடைய கள அனுபவங்களையும் பங்கேற்பாளர்களின் அனுபவங்களையும் இணைத்து அமர்வுகளை நடத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **அத்தியாயம் 1: சமூகக்கல்வி மூலம் சமுதாயக் குழுக்களை அதிகாரப்படுத்தல்** | |
| 1. | சமூகக்கல்வி – அறிமுகம் | |
| 2. | சமூகக் கட்டமைப்புகள், அவற்றினை நிலைப்பெறச்செய்யும் நிறுவனங்கள் குறித்த புரிதல். | |
| 3. | சமூகக்கட்டமைப்பில் அக்கம்பக்க சமூதாயக் குழுக்களின் பங்கு | |
| 4 | சமூக மற்றும் குடிமைப்பணிகளில் மக்கள் பங்கேற்பு | |
| | **அத்தியாயம் 2 : சமுதாய உறுப்பினர்களை அதிகாரப்படுத்தலின் மூலம் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குதல்.** | |
| 5 | குடியுரிமைக்கல்வி குறித்த அறிமுகம் | |
| 6 | ஜனநாயக ஆட்சிமுறையின் கூறுகள் | |
| 7 | பங்கேற்பு ஜனநாயகம் - வாய்ப்பு எங்குள்ளது | |
| 8 | சமத்துவமும் சமூகநீதியும் | |
| | **அத்தியாம் 3 : சமூகநியாயங்களை உணரும் திறன்கொண்ட குடிமக்களும், தலைமையையும் உருவாக்குதல்** | |
| 9 | சமூகநியாகங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்களும், தலைமையும் அறிமுகம் | |
| 10 | மனிதஉரிமை விழிப்புணர்வே, குடிமைசமூக செயல்பாட்டிற்கான அடிப்படை | |
| 11 | சமூகத்தின் கூட்டுஉரிமைகள் குறித்த விழிப்புணர்வும், அதனை நிலைநிறுத்துவதற்கான தலைமைத்துவமும். | |
| 12 | அரசியல் உரிமைகளும், சமூகப்பங்கேற்பும் | |
| | **அத்தியாயம் 4: சமூகப்பார்மையுடன்கூடிய ஆளுமைத்திறன் வளர்ச்சியும், தலைமைத்துவமும்** | |
| 13 | ஆளுமைத்திறன்வளர்ச்சியும், தலைமைத்துவமும் -ஓர் அறிமுகம் | |
| 14 | அனைவரையும் உள்ளடக்கும் தலைமைத்துவம் | |
| 15 | பெண்களின் தலைமைத்துவம் - சிறப்பு கவனம் அவசியம் ஏன்? | |
| 16 | சமத்துவ சமூகத்திற்கான செயல்பாட்டில் - சமூக அதிகார ஆட்சிமுறை (sociocracy) | |

## முகவுரை (**Preface)**

நாம் ஒரு நேர்மையான சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அங்குதான் அனைவருக்கும் முழு திறனுடன் பங்காற்றும் வாய்ப்பும் இருக்கும் - ஜவஹர்லால் நேரு

சிந்தியா (SCINDeA) தொண்டு நிறுவனம் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தென் இந்திய அளவில் குறிப்பாக தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா ஆகிய 3 மாநிலங்களில் 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் விளிம்புநிலை சமூகமக்கள் (தலீத், மீனவர், கல்லுடைக்கும் தொழிலாளர்கள், சிறு குறு விவசாயிகள், நிலமற்ற விவசாய கூலி தொழிலாளர்கள், தினசரி கூலி தொழிலாளர்கள், சுரங்க தொழிலாளர்கள்) இவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக பணியாற்றி வருகின்றது.

சிந்தியாவின் தொலைநோக்கு பார்வையானது அனைவருக்குமான நிலையான சமத்துவ சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அப்படியானால் அனைத்து தரப்பு மக்களும் (விளிம்புநிலை சமூக மக்கள்) சேர்ந்து பாகுபாடின்றி நியாமான முறையில் அதாவது சமூகநீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய ஜனநாயக கோட்பாடுகள் அடிப்படையில் அனைவரும் முழு திறனுடன் பங்காற்றும் வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சமூக கல்வியானது மக்களிடையே பொதுவான பிணைப்பை உருவாக்கி மொழியியல் குழுக்கள், மதக் குழுக்கள், கிராமபுற, நகர்புறகுழுக்கள், படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்கள், உயரடுக்கு மற்றும் வெகு ஜனங்கள் மூலதனம் மற்றும் தொழிலாளர்கள், இளைஞர்கள், வயதானவர்கள், பணக்காரர்கள் மற்றும் ஏழைகளுக்கிடையே உள்ள தடைகளை உடைத்து சமூக ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும். சமூக கல்வி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சமூக கல்வி மூலம் தேசிய பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதன் அடிப்படையில் சிந்தியா முன்னெடுக்கும் முயற்சிகளில் ஒன்றுதான் சமூக மக்களுக்கு சமூக கல்வி வழங்கப்பட வேண்டும் என்பது. இதனை சமூக செயல்பாட்டாளர்கள் மக்கள் மத்தியில் எடுத்துரைப்பதற்கு ஏதுவாக இவர்களுக்கான பயிற்சி தேவை என்பதை உணர்ந்து இப்பயிற்சி கையேட்டினை சிந்தியா நிறுவனம் தயாரித்து இருக்கிறது. இப்பயிற்சி கையேடு குறிப்பாக சமுதாய முன்னேற்றத்திற்கான மக்கள் பங்கேற்புபற்றியும், உரிமைகள், கடமைகள், தலைமைத்துவ பண்புகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறது. சிந்தியா இப்பயிற்சியினை அதன் பணிதள கிராமங்கள் தோறும் சமூக உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும் என்பதற்காக சிந்தியா கள பணியாளர்களுக்கு இப்பயிற்சியினை முழுமையாக வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது. சிந்தியாவின் கள பணியாளர்கள் அவர்தத்தம் பணிபுரியும் கிராமங்களில் சமூக உறுப்பினர்கள், இளைஞர் குழு உறுப்பினர்கள், மாணவ குழு உறுப்பினர்கள், பெண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் இப்பயிற்சியினை வழங்குவார்கள்.

இப்பயிற்சி கையேடு முனைவர். திருமதி. கல்பனா அவர்களின் முனைப்போடு உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு சிந்தியாவின் சார்பாக எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

ஆபிரகாம் சந்தானம்
செயல் இயக்குனர், சிந்தியா

## முதல் அத்தியாயம் :

## ‘‘சமூகக்கல்வி மூலம் சமுதாயக்குழுக்களை அதிகாரப்படுத்தல்’’

### அமர்வு 1 : சமூகக்கல்வி – அறிமுகம்.

நமது பயிற்சிக்கையேட்டின் முதல் அத்தியாயம்:
சமூகக்கல்வி மூலம் சமுதாயக்குழுக்களை அதிகாரப்படுத்தல்’’.

சமுதாயமேம்பாட்டில், சமூககல்வியின் அடிப்படைக்கோட்பாடுகள், கருத்தாக்கங்கள் மூலம் மக்கள் குழுக்களின் பங்கு பற்றிய சிறந்தபுரிதலைக்கட்டமைக்க இந்த முதல் அத்தியாயம் விழைகிறது.

**சமூகக்கல்வியின் முக்கிய நோக்கங்கள்:**

1. **அதிகாரப்படுத்தல்** : சமூக்கல்வி மூலம், மக்கள்குழுக்களில் உள்ள தனிநபர் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள், தங்கள் வாழ்வில் சிறந்த முடிவுகளை மேற்கொள்ளவும், தாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளைச்சுலபமாக கையாளவும் கற்றுக்கொள்வார்கள். மிகச்சிக்கலான, உடனுக்குடன் மாறிவரும் உலக சூழலில் தங்கள் திறமைகளையும், அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதே சமூகக்கல்வி.
2. **அனைவரையும் உள்ளடக்கியகல்வி** : சமூகத்தில் நிலவும் பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் பற்றிய தெளிந்த புரிதலை வழங்கும். சமூகத்தில் வேற்றுமைகள் பல இருப்பினும், அவற்றில் உள்ள மக்களுக்கு பயன்படும் கூறுகளைக்கண்டறியவும், அதனைவளப்படுத்தி சமூக ஒருங்கிணப்பினை நோக்கி செலுத்துவதற்கு சமூகக் கல்வி உதவும்.
3. **மக்கள் குழுக்களை கட்டமைத்தல்** : மக்கள் குழுக்களுக்குள், தற்சார்பு மற்றும் நம்பகத்தன்மை உருவாக சமூக்கல்வி முக்கிய பங்காற்றுகிறது. பொதுநலனுக்காக அனைவரும் சேர்ந்து செயல்படுவதன் அவசியம், சமூகம் சார்ந்த கூட்டமைப்புகளை உருவாக்கவும் சமூகக்கல்வி அவசியம்.
4. **குடியுரிமை மற்றும் குடிமைப்பணிகளில் மக்கள் பங்கேற்பு** : குடிமக்களின் அடிப்படைத்தேவைகள் குறித்த முடிவெடுத்தலில் தனிநபர் பங்கேற்பின் அவசியத்தை இக்கல்வி முறை வலியுறுத்துகிறது. சமூகக்கல்வி பெற்ற தனிநபர்கள்/குழுஉறுப்பினர்கள்/தலைவர்களால் மட்டுமே அனைவருக்குமான நியாயமான, சிறந்த முன்னேற்றகரமாக சமுதாயப்பணிகளை மேற்கொள்ள முடியும்.

**சமுதாயக்குழுக்களின் தலைவர்களின் பங்கு:**

சமுதாயக்குழுக்களின் தலைவர்கள் /உறுப்பினர்களாகிய நீங்கள்தான் சமூகக் கல்வியினை வெகுமக்கள் கல்வியாக பரப்ப செய்ய தகுதிபடைத்தவர்கள்.
சமூகக்கல்வியின் அடிப்படைக்கோட்டுபாடுகள் பற்றிய புரிதலை நீங்கள் ஏற்படுத்திக் கொள்வதனின் மூலமே, சமுதாயத்தில் உள்ள மக்களின் மனநிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கமுடியும். இதன்மூலம், சமுதாயமாற்றத்தினை உண்டாக்குவதற்கான உங்களது தனித்திறன்கள் வலுப்படும்.

## செயற்பாடு :

**யார்சமூகம்! எது சமூகம்!**

**நோக்கம்** : பங்கேற்பாளர்களுக்கு யார்சமூகம், எது சமூகம் என்பது குறித்த அடிப்படை கோட்பாட்டுப்புரிதலையும், அவற்றில் எந்தெந்த கூறுகள் அவர்கள் சார்ந்த சமுதாயகுழுவினை உருவாக்குகிறது என்பது குறித்த புரிதலையும் ஏற்படுத்துதல்.

குறிப்புகள் :

1. **அறிமுகம் (15 நிமிடங்கள்):** இந்த அத்தியாத்தில் மேலே குறிப்பிட்டபடி, சமூகம் பற்றிய விளக்கத்தினை அளிக்கவும், சமூகம் என்பது பொதுவான பண்புகள், விதிமுறைகள் மற்றும் உறவுமுறைகளைக் கொண்ட தனிநபர்களின் தொகுப்பு. பெரும்சமூகங்கள்,உதாரணமாக, இந்தியசமூகம், ஆசியசமூகம், மேற்கத்தியசமூகம் எவ்வாறு கருதப்படுகின்றன. அவற்றுக்கிடையே நிலவும் வேறுபாடுகள், கலாச்சார, பண்பாட்டுக்கூறுகள் பற்றி விளக்கவும். இந்த பெரும் சமூகங்களுக்குள் எவ்வாறு சிறு சமூதாயக்குழுக்கள் (communities) இடம் பெறுகின்றன என்பது குறித்தும் கலந்துரையாடவும்.

2. **குழுஉருவாக்குதல் (5 நிமிடங்கள்):** 3-5 நபர்கள் கொண்ட சிறுகுழுக்களை ஏற்படுத்தவும்.

3. **சமூகத்தினை வரைதல்(30 நிமிடங்கள்):**
   பங்கேற்க்கும் குழு ஒவ்வொன்றிற்கும் ஒரு அட்டைதாள், எழுதுகோல் கொடுக்கவும். அவர்கள் சார்ந்த சமூகம் பற்றிய ஒரு வரைபடத்தினை உருவாக்க வழிநடத்தவும், கீழ்வரும் அம்சங்கள் அதில் இடம் பெறவேண்டும்.
   a. பங்கேற்பாளர்களின் சமூகம் எது, யார் அதில் இடம் பெறுகிறார்கள் என்ற ஒரு வரைபடம் அல்லது சின்னங்கள் (symbols) கொண்ட படம் தயாரித்தல்.
   b. அவர்கள் சமூகத்தில் உள்ள சமுதாயக்குழுக்கள் யார், யார்,எங்குள்ளனர் என்று குறிப்பிடல்.
   c. சமுதாயக்குழுக்கள், ஒரு பெரும் சமூகத்தில் அங்கம் வகிக்க என்னென்ன மதிப்பீடுகள், நடைமுறைகள், விதிமுறைகள் உள்ளன என்று பட்டியலிடுதல்.
   d. அனைத்து சமுதாயக்குழுக்களும் பங்கேற்க்கும் இடங்களை கண்டறிதல்(உதாரணம், பள்ளிகள்,நூலகம், பூங்காக்கள், சந்தைகள் போன்றவை).
   e. சமுதாயத்திற்குள் உள்ள பல்வேறுகுழுக்கள் அல்லது நிறுவனங்களை பட்டியலிடுதல்.

**விளக்கங்களும், விவாதங்களும் (15 நிமிடங்கள்)**

ஒவ்வொருகுழுவும் தாங்கள் வரைந்த வரைபடத்தினை அனைவருக்கும் விளக்க வேண்டும். அதில் குறிப்பிட்ட தகவல்களை அவர்கள் எவ்வாறு பெற்றார்கள், அவற்றைக் குறிப்பிட வேண்டியதன் அவசியம் என்ன, சமூகம் என்றால் என்னஎன்று அவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பது குறித்து விளக்கவேண்டும்.

**மற்றவர் கருத்துக்களும்,குழுவிவாதமும்(15 நிமிடங்கள்)**

ஒவ்வொருகுழுவும் தங்களது வரைபடத்தினை விளக்கியபிறகு பங்கேற்பாளர் அனைவரும் அவரவரது தனிப்பட்ட கருத்துகளை பகிர்ந்து கொள்ளவேண்டும். அவரவர் அறிந்த தகவல்களைக் கொண்டு சமூகம் என்றால் யார், சமூகம் என்பதுஎது, சமுதாயம் என்றால் என்ன? அதில் உள்ள விதிமுறைகள், வழக்கங்கள், நடைமுறைகள் இன்றைய சூழலுக்கு ஏற்றதா? மாற்றவேண்டியவை எவை? போற்ற வேண்டியவை எவை? பாதுகாக்கப்பட வேண்டியவை எவை? தடை செய்யப்படவேண்டியவை எவை பற்றிய விவாதங்களை ஆரோக்கியமான முறையில் வழிநடத்தலாம்.

**இறுதியாக**

சமுதாய முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு மக்கள் குழுக்களின் புரிதலில் ஒற்றுமை அவசியம் என்பதையும், அவரவர்சார்ந்த சமுதாயக்குழுக்கள் ஒவ்வொன்றும் சமூகக்கல்வியினைப் பெற்றால் மட்டுமே சமுதாயமுன்னேற்றம் ஏற்படும் என்ற புரிதல் உண்டாகும்.

| | |
|---|---|
| சமூகம் (society) | உணவு,உடை,இருப்பிடம் ஆகியவற்றுக்கான தேவைகளை பகிர்ந்து இணைந்து வாழ்வதற்கான சூழல்கொண்ட அமைப்பே சமூகம், மொழி, பிராந்தியம்,தேசம், நாடு ஆகிய கூறுகளையும் இது உள்ளடக்கும். |
| சமுதாயம்(Community) | அக்கம்பக்கம் வாழும் மக்கள், அவர்களது அடிப்படைத் தேவைகளை சிக்கலின்றி நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான விதிமுறைகள், வழக்கங்கள், நடைமுறைகளை பின்பற்றி இணைந்து வாழும் குழவினராக இருப்பது. |

## அமர்வு 2 – சமூகக்கட்டமைப்புகள்

## அவற்றினை நிலைபெறச்செய்யும் நிறுவனங்கள் குறித்த புரிதல்

நோக்கம் : இந்திய சமூகத்தில் நிலவும் சமூகக்கட்டமைப்புகள் மற்றும் அவற்றை தொடர்ந்து நிலை பெறச்செய்யும் நிறுவனங்கள் பற்றிய பார்வை அளித்தல். இவை, ஒரு தேசத்தின் சமூக, பண்பாடு, பொருளாதாரசூழலை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பது குறித்தபுரிதலை உருவாக்குதல்.

**இந்தியசமூகம் குறித்த அறிமுகம்:**

130 கோடி மக்களுக்கு தாயகமாக விளங்கும் இந்தியசமூகம் பன்முகத்தன்மை கொண்டது. இங்கு 415 மொழிகள் இன்றும் பேசப்பட்டு வருவதாக சர்வதேசமொழி ஆய்வுநிறுவன அறிக்கை கூறுகிறது. எனினும் 22 மொழிகள் மட்டுமே அரசியல் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் பல்வேறு சமயங்கள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் கடைபிடிக்கப்படுகின்றன. இவையும், நவீனத்துவகண்டுபிடிப்புகள், கல்வி, ஊடகம், அரசின்சட்டங்கள் ஆகிய காரணிகளால் மாற்றமடைந்து வருகின்றன.

இந்தியசமூகத்தில் இன்றளவும் நிலவும் அடிப்படை சமூகக்கட்டமைப்புகளைப் பற்றி பார்ப்போமா?

1. **சாதிய அமைப்புமுறை:**
   இந்திய வரலாற்றில் மிகஆழமாக வேரூன்றியுள்ளது சாதிஅமைப்பு. இந்த கட்டமைப்பு பலநூற்றாண்டுகளாக செயல்பட்டுவருகிறது. இந்த அமைப்புமுறை இந்திய சமூக மக்களுக்குள், பல்வேறு ஏற்றத்தாழ்வுநடைமுறைகள், குலவழக்கங்கள், சமூக அடையாளங்களை அளிப்பதோடு, சமூகத்தில் ஒவ்வொரு சாதிக்குழுவிற்க்குமான பங்கு பற்றியும் தீர்மானித்து வருகிறது. இந்திய அரசியலைம்பில் தீண்டாமை தடைசெய்யப்பட்டுள்ளது. சாதித்தீண்டாமை கடைபிடிப்போர் மீது கடுமையான தண்டனைச்சட்டங்கள்பாயும். பட்டியலின/பழங்குடியினபிரிவினர், பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் ஆகியோருக்கான கல்வி/வேலைவாய்ப்பு முன்னுரிமைகள் /இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இருப்பினும், சாதியின்மூலம் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இன்றளவும் களையப்படவேண்டிள்ளது. மேற்கூறிய கருத்துக்களை பங்கேற்பாளர்களிடன் கலந்துரையாடி, சாதியபாகுபாடுகள் / ஏற்றத்தாழ்வுகளை களைய மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் இந்திய சமூகத்தில் நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்கவும்.

2. **சமயங்களும், ஆன்மீகமும் :**
   இந்திய சமூகத்தில் பலவேறு சமயங்கள், சமயகுழுக்கள் நடைமுறையில் இருந்தாலும், அதிகாரபூர்வமாக அங்கீரிக்கப்பட்ட சமயங்களாக, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம், ஜெயினிசம் ஆகிய பெரும்மதங்கள் உள்ளன. இருப்பினும்,

இந்தியஅரசியல் சட்டத்தின் கொள்கைப்படி, இந்தியா சமயசார்பற்ற அரசாகச் செயல்படவேண்டும். குடிமக்கள் அனைவருக்கும் அவரவர் சமயநம்பிக்கைகளைப் பின்பற்ற உரிமைஉண்டு.

**மதம் என்பது சமூகநிறுவனம், ஆன்மீகம் என்பது தனிநபர் தேர்வு.**

ஆன்மீகம் ஒவ்வொரு மனிதரின் தனியுரிமை, அவரவர் ஆன்மீக வழக்கங்களை பின்பற்றவும், அதுகுறித்து பிரச்சாரம் செய்யவும் உரிமை உள்ளது. ஆன்மீக செயல்பாடுகள், மதஅடையாளங்களாக, சமுதாயசடங்குளாக மாறும்பொழுது அங்கு சமத்துவம் கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றி கலந்துரையாடலாம்.

3. **குடும்பம் மற்றும் சொந்தபந்தம் :**

இந்தியாவில் குடும்பம் என்பதே அடிப்படைக்கட்டமைப்பு. இங்கு சொந்தபந்தங்கள் இணைந்த கூட்டுக்குடும்பங்களும் உண்டு. நவீன இந்தியாவில் தனிக்குடும்பங்கள் அதிகரித்துவருகின்றன.

குடும்ப அமைப்பில் பெரும்பாலும் ஆண் தலைமையிலான அமைப்புகளாகவே உள்ளது. ஆண் இறந்துவிட்டால் / அல்லது இயலாதநிலையில் இருக்கும்போது பெண் தலைமை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆண் / பெண் என்ற இனபாகுபாடு உருவாகும் இடமும் குடும்பங்கள்தான். இவையே சமூகத்திலும் பிரதிபலிக்கின்றன.

குடும்ப உறுப்பினர்கள் / உறவினர்கள் ஆகியோர் உருவாக்கும் சமுதாயகுழுக்கள், அவர்களது பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவைபற்றியும் அதனால் சமூகத்திற்கு என்ன பங்களிக்கிறார்கள் என்பது குறித்தும் கலந்துரையாடலாம்.

4. **பொருளாதார கட்டமைப்பு :**

பொருளாதாரம் என்பது சமூகத்தால் கட்டமைக்கப்படுவது. சமூகம் ஏற்றத்தாழ்வுடன் இருக்குமானால் அதனைக்கட்டுப்படுத்தும் அல்லது முறைப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்தினைச் சார்ந்து மிகப்பெரும் மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் வறுமையில் அல்லது பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே அதிக மக்கள் வாழ்கின்றனர்.

**வறுமையை பற்றிய புரிதல் :**

வறுமை உண்மையில் ஒரு விளைவே தவிர காரணமாகாது. நியாமில்லா கொள்கைகள், நிலம், சொத்து, பொது வளங்களின் சமமற்ற விநியோகம், அனைத்துப்பிரிவினருக்கும் பொது மற்றும் தனியார் நிர்வாகத்தில் பங்களிக்கும் வாய்ப்புகள் மறுக்கப்படுவதே வறுமைக்கான முக்கிய காரணங்களாகும். வரலாற்றுரீதியாக உருவாகக்கூடிய சமூகமும் திட்டவட்டமான பல்வேறு தொடர்புவலைகளுடைய சமூகமும், அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் கைகளில் இருக்கிறது. இவர்கள் பாரம்பரியமாக பின்பற்றும் கட்டுக்கதைகளையும், நவீனகட்டுக்கதைகளையும் தங்களது அடிமைமுறைகளுக்கு ஆயுதமாகப்பயன்படுத்துகின்றனர். தங்கள் அதிகாரத்தை அறிவு, ஆள்பலம், மற்றும் பணத்தைபயன்படுத்தி உருவாக்குகிறார்கள் அல்லது முற்றிலும் மாற்றி அமைக்க முறப்படுகிறார்கள்.

**கட்டுக்கதை:**ஏழைமக்கள், சோம்பேறிகள், படிப்பறிவில்லாதவர்கள், முன்னேறும் மனப்பான்மையில்லாதவர்கள், திறனற்றவர்கள், நவீன மாற்றங்களிக்கேற்ப ஈடுகொடுக்க முடியாதவர்கள், மற்றும் அவர்களின் தலைவிதிதான் அவர்களது வறுமைக்கான காரணங்கள் என கருதப்படுகிறது. பணக்காரர்கள் என்றால் புத்திசாலிகள், கடின உழைப்பாளிகள், சூழலுக்கேற்ப தங்களை மாற்றக்கூடியவர்கள், போட்டியிட

தகுதியானவர்கள், பரந்தஎண்ணம், திட்டமிடல் மற்றும் கொடுத்துவைத்தவர்கள் என்பவைகளே அவர்களின் வளர்ச்சிக்கான காரணங்கள் என கருதப்படுகிறது.

**உண்மை:** ஏழை மக்களே கடுமையாக உழைத்து வருகின்றனர். விவசாயம் மற்றும் அமைப்புசாரா வேலைகளில் இருக்கும் தொழிலாளர்கள் ஒரு நாளிற்கு சராசரியாக 10 மணி நேரத்திற்கு மேல் உழைக்கின்றனர். கிராமப்புற மற்றும் பொதுமக்களுக்கே,பூமியையும், அதன் வளங்கள் பற்றிய கூர்மையான அறிவும் உள்ளது. கிராமப்புற தலித்மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குகின்றனர். ஏற்றத்தாழ்வை உருவாக்க மென்-திறன்கள் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்தியும், உடல் உழைப்பினை குறைத்து மதிப்பிடுவதும் நிகழ்ந்துவருகிறது. வேலை நிரந்திரமின்மை, அரசாங்க கொள்கைகள் மற்றும் திட்டங்களில் திறன் கொண்ட தொழிலாளருக்கு மட்டுமே உரிமை போன்ற நடைமுறைகளும், ஊழலின் மூலம் பெரும் இழப்புக்களை ஏற்படுத்துவதும் படித்த பணக்காரர்களால் நிகழ்த்தப்படுவதே. கடந்த 75ஆண்டுகால சுதந்திர இந்தியாவில், தேசிய கொள்கைகள், திட்டம் மற்றும் ஆணையம் முதவியவைகள் படித்த மற்றும் பணக்காரர்களின் தலைமையில்தான் இருந்தன. இதனால் ஆதிக்க சமூகங்கத்தினரால், வறுமை கவனத்துடன் திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது.

**தாய்வழி அமைப்பிலிருந்து தந்தைவழி அமைப்பு :** கட்டமைப்பு பற்றிபுரிந்து கொள்ள, முதலில் எப்படி சமூகத்தலைமை பெண்களிடமிருந்து ஆண்களுக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பதை புரிந்துகொள்வதே ஏற்புடையது. இந்த அண்டத்தை தாயாக கருதுகிறோம். மண்ணை, நாட்டை, மொழியை தாயாக கொண்டாடுவது என்பது மனிதகுல வளர்ச்சியில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இதற்கு முதன்மையான காரணம்,மனிதகலாச்சாரம் மதிப்பீடுகளின் அடிப்படையிலும், விவசாய அறுவடையின் அடிப்படையிலும் உயிர்பெற்றது பெண்கள் மூலம்தான் உடைமைகளைக்கொள்வதிலும், பகிர்தலிலும் சமத்துவம் இருந்தது. அறக்கொள்கைகள் நீதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. நலிந்தோர், குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது, உழைப்பு மதிக்கப்பட்டது. குடும்பம், தனிச்சொத்து, ஆட்சி என்ற அதிகார எல்லை விரிவடைந்து, ஆண்கள் தலைமையையும், அதிகாரத்தையும் கைப்பற்றியப்பிறகுதான் நமக்கு அனைத்து பிரச்சனைகளும் துவங்கியது. பெண்களும் அடிமைப்படுத்தப்பட்டனர். வலுவானனே வாழமுடியும் எனவும், பயன்பாட்டிற்கு பின்தூக்கியெறிதல் என்பது இன்றைய உலகின் நியதியாகிவிட்டது.

**வறுமைக்கும் அது நிலைப்பெறுதற்குமான முக்கிய காரணங்கள்:**

**காலனித்துவ மற்றும் நவகாலனித்துவ வரலாறுகள் :** இந்திய துணைக்கண்டத்தில், முகலாயப்பேரரசின் இறுதிகாலத்தில், கிழக்கு இந்திய கம்பெனி போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் செய்த வணிகத்தின் மூலம் காலணியாதிக்கம் தொடங்கியது. பின்னர், அவர்கள் இந்தியாவை படிப்படியாக முழுமையாகக் கைப்பற்றினர், அதுவே பிரிட்டிஷ் இந்தியா என்று அழைக்கப்பட்டது. பிரிட்டிசார் வெளியேறிய பின்பும், நமது நாட்டின் பொருளாதாரம் அவர்களின் பெருநிறுவனம் மற்றும் நிறுவனங்களின்கூட்டு சங்கங்களையே சார்ந்திருந்தது. தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகளின் மூலம் இந்தியா இப்போது நவ-காலனித்துவத்தின்கீழ் உள்ளது. நாம் என்ன சாப்பிடவேண்டும், என்ன உடை உடுத்தவேண்டும், என்ன படிக்கவேண்டும், எப்பொழுதுஎன்ன வேலை செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதை உலகபெரும் முதலாளிகளே முடிவு செய்கின்றனர்.

5. **அரசியல்கட்டமைப்பு :**

உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடாக இந்தியா அறியப்படுகிறது. இங்குதான், வலுவான ஒன்றிய அரசு, அந்தந்த மொழி பேசும் மக்களுக்கு உண்டான மாநில அரசுகள்,

உள்ளூரளவில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற உள்ளாட்சி அரசு என்ற மூன்றடுக்கு அரசாங்க அமைப்பு உள்ளது. 1947 இந்தியா சுதந்திரமடைந்தபொழுது, புதிய இந்தியா உருவாக்குவதற்கான அரசியல் அமைப்பினை உருவாக்கும் பொறுப்பு டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான அரசியல் நிர்ணயசபைக்கு வழங்கப்பட்டது. 1950, ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியல் சட்டத்தினை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் நாட்டிற்கு அர்பணித்தார். அதில் 18வயது நிறைந்த ஒவ்வொரு குடிமகன்/குடிமகளுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டதோடு, அடிப்படை உரிமைகளான, பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கமாகும் உரிமை உள்ளிட்ட பல தனிநபர் உரிமைகள் உறுதிசெய்யப்பட்டது. குழந்தைகள்/பெண்களுக்கான சிறப்புமுன்னுரிமைகள், பட்டியலின/ பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்வி, வேலைவாய்புகளின் இடஒதுக்கீடு ஆகியவையும் தரப்பட்டது.

**மக்களாட்சி :** இந்திய அரசியல் சட்டம் மக்களுக்கே அதிகாரம் வழங்குகிறது. ஒவ்வொரு தனிநபரும் தனது அரசியல் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தின வாக்குரிமை மூலம் பெறுகிறார்.

ஒவ்வொரு தனிநபரும் பிறருடன் இணைந்து சங்கம் அமைக்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கங்கள் மக்கள் பிரதிநிதித்துவசட்டம் 1951ன்படி, குறைந்தது 100 நபர்களை உறுப்பினர்களாக கொண்டிருந்தால் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படலாம். இந்த கட்சிகள், மாநில தேசியகட்சிகளாக அங்கீரிக்கப்பட்டு அவர்கள் விரும்பும் சின்னத்தைப் பெறவேண்டுமானால், கடந்த தேர்தல்களில் அவர்கள் கணிசமான ஓட்டு பெற்றிக்கவேண்டும். இதற்கான நடைமுறைகளை மத்திய தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும். இவ்வாறாகத்தான் அரசியல் கட்சிகள் உருவாகின்றன.

**மையப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் :**தனிநபர் வருமானவரி, பொதுவிற்பனைவரி ஆகிய பெரும் வரியினங்கள் மத்திய அரசின் கட்டுபாட்டில் உள்ளன. 100 நாள் வேலைத்திட்டம், பிரதமமந்திரி வீடுகட்டும் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிதிட்டம், குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம் என பல முக்கிய திட்டங்கள் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அரசுகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. 130 கோடி மக்களின் தேவைகளை, பாராளுமன்ற அமைப்பின் கீழ் உள்ள மக்கள்சபையில் 543 எம்.பிக்களும், மாநிலங்களவையில 245 எம்.பிக்களும் தீர்மானிக்கின்றனர். அவர்கள்தான் சட்டங்களையும், திட்டக் கொள்கைகளையும் இயற்றுகின்றனர்.

**மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பில் உள்ள சிக்கல்** : வாக்குகளின் அடிப்படையிலான ஜனநாயக அமைப்பில், அரசியல்வாதிகள் மற்றும் தனியார் நிர்வாகிகளும் மக்களை பொருட்படுத்துவதில்லை. ஊழல், வளங்களைக்கொள்ளையிட்டு அதிக லாபம் சம்பாதித்து தேர்தலில் வெற்றி பெறுகிறார்கள். அரசியலமைப்பின் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை செயல்படுத்தாத அரசியல் கட்சிகளால், பொதுமக்கள் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். மக்கள்நலன் சார்ந்த கொள்கையும், மக்களுக்கு பதில்சொல்லும் பொறுப்பும் உள்ள அரசியல்கட்சிகள் ஆட்சி அமைக்கமுடியும். அதற்கு அரசியல்அமைப்பில் மக்கள் பங்கேற்பு அவசியம்.

# செயற்பாடு (15 நிமிடங்கள்)

**குழு கலந்துரையாடல் :**

- பயிற்சியாளர்கள், கிராமபுறங்களில் வறுமை, நோய் போன்றவைக்கு காரணமாக விளங்கும் வழக்கமான கதைகள், கூற்றுகள் மற்றும் மத நடைமுறைகள், எப்படி பெரும்பாலான பெண்கள் வீட்டின் வறுமை நிலை காரணமாக பலியாடாக ஆக்கப்படுகின்றனர். பெண் குழந்தைகளின் கல்வி மறுக்கப்படுவது ஆகியவையின் காரணங்களை கண்டறிய விவாதங்களளை துவக்கலாம்.

- எப்படி,குறைந்தஊதியம், வேலை தளங்களில் உள்ள பாகுபாடு மற்றும் துன்புறுத்தல், நீண்டநேர வேலைச்சுமை ஆகியவை பெண்களை பலவீனமானவர்களாக உணரவைக்கிறது. அந்த பிரச்சனைகளை அவர்கள் எவ்வாறு சமாளிக்கிறார்கள், எப்படி அவர்கள் அந்த உணர்வை வெளிக்காட்டுகின்றனர், மற்றும் அதனைத்தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் பற்றியும் கலந்துரையாடலாம்.

- பயிற்சியாளர்களின் வழிநடத்துதலின்படி, பங்கேற்பாளர்களில் பெண்களின் அன்றாட உள்ளூர் அனுபவங்களை கொண்டு ஒரு சிக்கல் மரம் வரையமுடியும்.
- மேற்கூறிய பயிற்சிக்கு பிறகு பங்கேற்பாளர்களால், வறுமைக்கான காரணங்களுக்கும், அநீதியின் விளைவாகவரும் வறுமையின் விளைவுகளுக்கும் இடையேயான வித்தியாசத்தை கண்டறியமுடியும்.

**6. கல்விக்கட்டமைப்பு :**

இந்தியக்கல்வி முறை சிக்கலானதும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டும் வருகின்றன.
சமூகசெயல்பாடுகளில் கல்வி அமைப்புகளின் பங்கு பற்றிய கலந்துரையாடலாம்.

**இறுதியாக :**

மேற்கூறப்பட்டுள்ள கட்டமைப்புகளும், அதனைநிர்வகிக்கும் நிறுவனங்களும் இந்தியசமூகத்தில், சமூகஒற்றுமையுடன், அனைவருக்குமான வாய்ப்புகள் உருவாக்குதல், ஆண்/பெண்பாகுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகளில் எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பது குறித்த கலந்துரையாடி புரிதல் உருவாக்கலாம்.

**சவால்களும் வாய்ப்புகளும் :**வறுமைஒழிப்பு,ஆரோக்கியம், அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுதல், பெண்உரிமை, ஜனநாயத்தில் பங்கேற்பு ஆகியவை உள்ளிட்டு, இந்தியசமூகத்தில் உள்ள சவால்கள், வாய்ப்புகளைப்பற்றி விவாதிக்கலாம்.

## அமர்வு 3–சமூகக்கட்டமைப்பில் அக்கம்பக்க சமுதாயக்குழுக்களின் பங்கு :

**நோக்கம்:** அக்கம்பக்க அளவில், நிகழும் சமூக ஏற்றத்தாழ்வுகள், சமூகபிரச்சனைகளைக் கையாள்வதில் சமுதாய உறுப்பினர்களின் பங்கு பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல்.

**சமுதாயத்தைகட்டமைத்தல் குறித்த புரிதல்**

சமூகத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருப்பது சமுதாய குழுக்களின் உறுப்பினர்களே. முக்கிய பிரச்சனைகளில்அவர்களது ஆக்கபூர்வமான பங்களிப்பு நேர்மறையான நிலைத்த

மாற்றத்தினை உருவாக்கும். முறையான சமூகப்புரிதலுடன் நிகழ்த்தப்படும் சமூக செயல்பாடானது, தனிநபரின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் வித்திடும்.

**முக்கியபிரச்சனைகளைக் கண்டறிதல்:**



ஒரு பிரச்சனையைச் சரிசெய்வதற்கு முன்பு அதற்கான காரண,காரியங்களை அலசி ஆராய்வது அவசியம். முக்கிய பிரச்சனைகள், சமுதாயத்திற்கு சமுதாயம் வேறுபடும். அவை, கல்வி, உடல்நலம், வேலையின்மை, சுற்றுச்சூழல் சீர்கேடு,தீண்டாமைக்கொடுமை அல்லது சமூகநீதி பற்றிய பிரச்சனைகளாக இருக்கலாம். உள்ளூர், பிராந்திய, மாநில அல்லது உலகளாவிய பிரச்சனைகளாகவும் இருக்கலாம். இவை அனைத்திலும், அந்தந்தமட்டங்களில், சமுதாயம் குழுவாக செயல்படும்போது, தீர்வுகாண்பது எளிதாகஅமையும்.

**சமுதாயஉறுப்பினர்களின் பங்கு:**

- தாம் சந்திக்கும் சவால்கள் பற்றி சமுதாய உறுப்பினர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட பார்வை இருக்கும். ஒரு நேர்மறையான மாற்றத்தினை உண்டாக்க உள்ளூர் அறிவும், புரிதல்களும் அவசியம்.
  பின்வரும் சில அம்சங்களில் சமுதாய உறுப்பினர்களுக்கு பங்கு உண்டு.
- **பிரச்சனையை சரிசெய்ய ஆதரவு திரட்டுதல்:** ஒரு பிரச்சனை எழும்பொழுது அது குறித்த விழிப்புணர்வுடன் கூடிய விவாதங்களை மேற்கொள்ளுதல்.
  சமுதாய உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களையும், கதைகளையும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வது பிரச்சனைகான காரணங்கள், தீர்வுகள்பற்றிய தெளிவு கிடைக்கும்.
- **இணைந்து செயல்படுதல்** : தீர்வுகளை செயல்படுத்த உள்ளூர் நிறுவனங்கள், அரசுத்துறைகள் மற்றும் பிறபங்காளர்களுடன் இணைந்து திட்டம் உருவாக்கி செயல்படுத்தல்.
  சமுதாயத்தின் முயற்சிகளில் கூட்டுத்தாக்கத்தனை இணைந்து செயல்படுவதன் மூலம் சாதிக்கமுடியும்.
- **தன்னார்வ பங்கேற்பு** : உள்ளூர் முயற்சிகளில் தனது நேரம், திறன்கள், வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல். தன்னார்வ பங்கேற்பானது. பொறுப்புகளை பகிர்ந்து கொள்வதன்மூலம், சமுதாய ஒருங்கிணைப்பை வளப்படுத்தும்.
- **கல்வி :** ஒரு பிரச்சனையை எடுத்து தீர்வுகண்டதன் அனுபவங்களையும், தகவல்களையும், அறிவையும் பகிர்ந்து கொள்வதே கல்வி.
  ஆக்கபூர்வமாக பங்கேற்பு செய்யும் சமுதாயஉறுப்பினர்களே மாற்றத்தை சிறப்பாக வழிநடத்த முடியும்.

## செயற்பாடு (15 நிமிடங்கள்)

கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைச்சம்பவத்தை பங்கேற்பாளர்களிடம் விளக்கி, இந்த சம்பவத்தில் சமுதாய உறுப்பினர்களின் பங்கு பற்றி விவாதிக்கவும். மேலும், சுற்றுச்சூழல், சுகாதாரம்,நீர்மேலாண்மை ஆகியவற்றில் சமூக உறுப்பினர்கள் அறிந்து கொள்ளவேண்டியவை பற்றியும் கலந்துரையாடலாம்.

**கலந்துரையாடலுக்கான ஒரு உண்மைச்சம்பவம்.**

இலுப்பையூர் கிராமத்தில், கண்ணன் என்பவரது வீட்டிலிருந்து குளியலறைக் கழிவுநீரை வெளியேற்ற ஒரு பைப் போடப்பட்டது. அந்த கிராமத்தில் கழிவுநீர்வாய்க்கால் எதுவும் இல்லாதால், ஒரு குழாய் மூலம் கழிவுநீரை தனது வீட்டிலிருந்து 3 வீடுகள் தள்ளி இருந்த ஒரு நூலகத்தின் வாயிலில் உள்ள மழைநீர்வாய்க்காலில் பைப் போட்டு வெளியேற்றினார். அந்த நூலகத்தின் பொறுப்பாளர், நூலகத்தை திறக்கவரும்போது வாயிலில் நீர்வடிகாலில் கழிவுநீர்கலப்பதைக்கண்டு கோபமடைந்தார். அந்தகழிவு நீர் கண்ணன் வீட்டிலிருந்து வரும் பைப்பிலிருந்து வருவதைக்கண்டு அவரிடம் கேட்டார். அவரோ, இது பொதுவாய்க்கால்தானே, அங்கு குளியலறை நீரை வெளியேற்றுவது ஒன்றும் தவறல்ல என்று வாதிட்டார். உன்னால் முடிந்தைப்பார் என்று சவால்விட்டார். முதலில் கோபம் கொண்டநூலகர், சிறிது நிதானித்து. அந்த தெருவின் வரிசையில் உள்ள அனைத்துவீடுகளிலும் எவ்வாறு கழிவுநீரை வெளியேற்றுகிறார்கள் என்று விசாரித்தார். அதோடு, கண்ணன் வீட்டுமுன்னும், பிறர்வீடுகள் முன்பும் இருந்த மழை நீர்வடிகால் வழி என்ன ஆனது என்று கேட்டார். அப்போதுதான் தெரிந்தது, பெரும்பாலான வீடுகளுக்கு முன்புள்ள மழை நீர்வாய்க்கால் மூடப்பட்டுள்ளது அல்லது கழிவுநீர்த்தொட்டியாக மாறியுள்ளது. கண்ணன் வீட்டுமுன்பான வாய்க்கால் நிரம்பிவழிந்துள்ளது. உபரிகழிவு நீரைவெளியேற்றவே அவர் பைப் போட்டு நூலகவாயிலில் உள்ள மழை நீர்வாய்க்காலில் வெளியேற்றியுள்ளார்.

நூலகர் இந்த பிரச்சனையை மக்களிடம் எடுத்துக்கூறியும், எவரும் கண்ணனை எதிர்த்து கேட்க துணியவில்லை. ஊரிலேயே ஆதிக்கம் செய்யும் குடும்பம் கண்ணனுடையது. யாரவது கேட்டால் அவர்கள்மீதே பாய்வார்கள் என்றனர். நூலகர், ஊராட்சி அலுவலகத்தில் புகார் செய்தபோது அங்கும் கழிவுநீர்க்கால்வாய்த் திட்டம் கிராமப்பகுதிகளில் தோல்வியே கண்டுள்ளது என்றும், கழிவுநீரை சேகரித்து, சுத்திகரிக்கவும், திட,திரவக்கழிவுகளைப் பிரித்துக் கையாளவும் அதிக பொருட்செலவு, இடச்செலவு தேவைப்படும். அதற்கான நிதி ஊராட்சியிடம் இல்லை என்று கைவிரித்துவிட்டனர். நூலகருக்கோ ஒரே கவலையாகிவிட்டது. அவர் சோர்வுடன் திரும்பும்போது 100 நாள் வேலைத்திட்டத்தில் வேலைசெய்ய பெண்கள் கூடியிருந்தனர். அவர்களிடையே அமர்ந்து இந்தப் பிரச்சனையை நூலகர் பேசும்போது கூட்டத்தில் இருந்த அனைவரும் கண்ணன் குடும்பத்தை எதிர்த்து போராடுவது கடினம் என்றனர்.

தலைவிதங்கம் என்பவரோ பிரச்சனையின் காரணத்தைப்பற்றி பேசினார். முன்பு, குடிசைவீடுகளாகவும், பொதுக்கழிப்பிடம் பயன்படுத்துபவர்களாகவும் நாம் இருந்தோம். இப்போது வீட்டிற்கு வீடு கழிவறை, குளியலறை வந்துவிட்டது என்றார். கழிவறைக்கழிவை உறிஞ்சுகுழியில் வெளியேற்றுகிறோம். அதேபோல் ஏன் குளியறை கழிவுநீரை உறிஞ்சுகுழி வைத்து நமது நிலத்திற்குள்ளேயே வெளிற்றேலாமே என்றார். ஆனால், எல்லோராலும் அதை செய்ய முடியுமா என்று கேட்டார் ஜெயா. கழிவுநீர் வெளியே தேங்கும் எல்லோர் வீடுகளிலும், குழந்தைகளும் பெரியவர்களும் தொடர் காய்ச்சலால் அவதிப்படுவதை விளக்கினார் சசிகலா. பக்கத்து வீட்டு கழிவுநீர் தன் வீட்டில் தேங்கி கொசுத்தொல்லையால் அவதிப்படுவதை சொன்னார் கங்கம்மா.

உடனே, பணித்தளப் பொறுப்பாளர் எழுந்து 100 நாள் வேலைத்திட்டத்தில் தனிநபர் வீடுகளில் உறிஞ்சுகுழி அமைக்க நிதிஉள்ளது. நீங்கள் ஒவ்வொரு வீட்டிலும் உங்கள் உழைப்பில் உறிஞ்சு குழி அமைத்தால், இத்திட்டத்தில் அதற்கான கூலிகிடைப்பதோடு,

உறை இறக்குவதற்கான செலவையும் நீங்கள் திரும்பபெறமுடியும் என்றார். நூலகருக்கோ பிரச்சனை தீர்வுகண்டதில் மகிழ்ச்சி. ஆனாலும், அந்ததிட்டம் நிறைவேறும்வரை, நூலகவாயில் சாக்கடையாகிவிடக்கூடாதே என்ற கவலையில் வீடு திரும்பினார்.

திடீரென்று, கண்ணனின் சகோதரி நூலகர் வீட்டிற்குவந்து, கண்ணன் செய்தது தவறு என்றும், உடனடியாக கழிவுநீர் பைப்பை நூலகவாயிலிருந்து அகற்றிவிடுவதாகவும் வாக்களித்தார். நூலகருக்கு ஒரே ஆச்சரியம். இது எப்படி நிகழ்ந்தது என்று. பிறகுதான் தெரிந்தது 100 நாள் வேலைத்திட்ட பணியிலிருந்த பெண்கள் அங்கு பேசியதை தங்கள் வீடுகளில், குடும்பங்களில் உள்ள ஆண்களிடம்பேச, அவர்கள் அப்பிரச்சனை குறித்து கடைத்தெருவிலும், வயல்வெளிகளிலும் பேச அதுஊர் பிரச்சனையாகிவிட்டது.

கண்ணன் குடும்பத்தால் அந்த அவமானத்தை தாங்க முடியாமல் தாமாக முன்வந்து பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். அவரவர் வீடுகளில் உறிஞ்சுக்குழி அமைக்கும் பணி தீவிரமாக நடந்தது.

**இறுதியாக :**

உள்ளூர்பிரச்சனையாக இருந்தாலும், நாட்டின் பிரச்சனையாக இருந்தாலும், சமுதாய அளவிலான செயல்பாடு என்பதே அடிப்படை சமுதாய உறுப்பினர்கள், தாங்கள் சார்ந்த சமுதாயத்துடன் மட்டுமல்லாது, மாநில தேசபிரச்சனைகள் குறித்தும் தங்களுக்குள் விவாதிப்பது அவசியம்.

சமூகப்பொறுப்புள்ள சமுதாயங்களைக் கட்டமைப்பதே இன்றைய தேவையாக உள்ளது.

சொர்ணத்தாய்* ஊராட்சி மன்றத்தலைவர், கரியமாணிக்கபுரம் ஊராட்சி, அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், கன்னியாகுமரி மாவட்டம்.

எங்கள் ஊராட்சியின், குளத்தூர், சபாயார்குளம் என்ற இரண்டு குக்கிராமத்தில் தன்னார்வ அமைப்பு ஒன்றின் உதவியுடன் குழந்தைகள் பாராளுமன்றம் உள்ளது. இங்கு குழந்தைகளுக்கான திறன் வளர்ப்புபயிற்சிகள் வழங்கப்படுவதோடு, கிராமத்தைப் பற்றிய கல்வியும், பொது அறிவும் போதிக்கப்படுகிறது. குழந்தைகளே என்னிடம் வந்து இங்கு லைட் எரியவில்லை, அங்கு தண்ணீர் வரவில்லை, சாக்கடை சுத்தம் இல்லை என்று குறைகளைத் தெரிவிப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பெரியவர்களே தங்கள் சுற்றுப்புறத்தைப்பற்றி கவலைப்படாதபோது குழந்தைகள் அதில் அக்கறை காட்டுவது எதிர்காலத்தில் அவர்கள் தங்கள் கிராமத்தை திறம்பட நிர்வகிக்க உதவியாக இருக்கும். இது போன்ற குழந்தைகள் பாராளுமன்றம் அமைப்பதை, மாநில அரசு கொள்கையாக ஏற்று ஊராட்சிகள் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக தனியாக ஒரு குழந்தைகள் நல அலுவலர் ஒவ்வொரு ஊராட்சியிலும் நியமிக்க வேண்டும். குழந்தைகளுக்கான, விளையாட்டு, கலை, பொதுஅறிவு வளர்ப்பு, பாலியல் கல்வி, ஆண்,பெண் சமத்துவம்மற்றும் நல்லகுடிமக்களாக வளர்வதற்கான கல்வி அளிக்க நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஊராட்சிக்கும் வழங்கினால் சிறப்பாக இருக்கும். தனியார் அமைப்புகள் மட்டுமே அங்கொன்றும், இங்கொன்றுமாக செய்தால் எல்லா குழந்தைகளுக்கும் இதன் பலன் போகாது. மேலிருந்து கீழான அரசியல் கட்டமைப்பு இருக்கும் வரை மக்களது அடிப்படை பிரச்சனைகள் தீரப்போவதில்லை. சிறந்த மனிதப் பண்புகளைக் கொண்ட கல்வியும்(ஏட்டுக்கல்வியுடன் கூடிய), ஆளுமை திறன்களும் குழந்தைப் பருவத்திலேயே வளர்த்தெடுக்கப்பட்டால், நாளைய சமூகம், தன்னைத்தானே ஆண்டு கொள்ளும் திறன்படைத்தாக அமையும் என்பது என் கருத்து.

## அமர்வு 4: சமூக மற்றும் குடிமைப்பணிகளில் மக்கள் பங்கேற்பு

**நோக்கம்:** சமூகப்பிரச்சனைகளிலும், குடிமைப்பணிகளிலிலும் மக்கள் பங்கேற்பின் மூலம், சமுதாய உறுப்பினர்கள் / தலைவர்கள் திறன்களை மேம்படுத்துதல்.

**பங்கேற்பின் அவசியம் :**

ஒரு ஆரோக்கியமான சமூகத்திற்கு அடிப்படைத் தேவைகள் அனைத்தும் முறையாக பூர்த்தி செய்ப்பட்டிருக்க வேண்டும். உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் என அனைத்து அடிப்படை உரிமைகளும் உறுதி செய்ப்பட்டால்தான் அந்த சமூகம் ஆரோக்கியமான சமூகம் எனக் கருதப்படமுடியும்.

இந்த அடிப்படைத்தேவைகளை நிறைவேற்ற சமூகத்தில் பங்கேற்பு அவசியம். ஒரு தனிநபர் அல்லது ஒரு சமுதாயக்குழு தொடந்து அடிப்படைத் தேவைகளுக்காக போராடிக்கொண்டிருந்தால் அங்கு சமூகப்பங்கேற்பு இல்லை என்பது தெரியவரும்.

நம்மைச்சுற்றி நடக்கும் எந்த ஒரு பிரச்சனையையும் மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒன்று அல்லது சிலகாரணங்கள் தெரியலாம். ஆனால் அதன் மூலகாரணம் மற்றும் அதனுடன தொடர்புள்ள மற்ற காரணங்களை ஆராயும்போதுதான் தெரியும் அது ஒரு தனிநபர் சார்ந்த அல்லது ஒரு தனி குடும்பம் அல்லது ஊர்சார்ந்த பிரச்சனையாக மட்டும் இருக்காது. ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அதனால் உடனடி அல்லது நீண்டகால பாதிப்பகளை ஏற்படுத்தும்.

குறகியகால மற்றும் நீண்டகால பாதிப்புகளைக் கணக்கில்கொண்டே சமூக செயல்பாடு இருக்கமுடியும். எந்த ஒரு தனி நபர் பிரச்சனையாக இருந்தாலும், அது ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிப்பதோடு, குடிமைப்பிரச்சனையாகவும் மாறக்கூடிய சூழல் உருவாகும். அவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அகற்றுவதுதான் நாகரிக சமூகத்திற்கான அடையாளமாக இருக்கமுடியும். சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பிரச்சனை | சமூகப்பிரச்சனை | | குடிமைப்பிரச்சனை |
|---|---|---|---|
| | உடனடி பாதிப்பு | நீண்டகால பாதிப்பு | |
| குடிநோய் | தனிநபர், அவரது குடும்பம் / அக்கம்பக்கத்தவர் பாதிப்படைதல் | ஆரோக்கியமற்ற அக்கம்பக்க சமுதாயம் | பொறுப்பற்ற குடிமக்கள், ஊர்முன்னேற்றம் தடைபடுதல். |
| இளம்வயது திருமணம் | பெண்கல்வி பாதிப்பு / ஆரோக்கியமற்ற குழந்தைப்பேறு / குழந்தை வளர்ப்பு | குடும்பம்/சமுதாய முன்னேற்றம் பாதிக்கப்படுதல் பெண்ணடிமைத்தனம் | ஆளுகையில் பெண்கள் பங்கேற்பு தடைபடுதல். |
| சுற்றுச்சூழல் சீர்கேடு | உடல்நல பாதிப்புகள் | நோயுள்ள சமுதாயம் | சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்கள் பங்கேற்பின்மை |
| கலவரம் | சாதி/மதமோதல்கள், உடமைகள்/தனிநபர் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கை/முன்னேற்றம் பாதிப்படைதல். | சமுதாயங்களுக்கிடையே பகை வளர்தல், ஆரோக்கியமற்ற/மகிழ்ச்சியற்ற சமூகம். | சமூக நீதியின்மை |

எனவே,சமூகத்தில் நிலவும் எந்த ஒரு பிரச்சனையையும் தனிநபர் பிரச்சனை என்று ஒதுக்கிவிட முடியாது. அதன் பின்புலம், காரண, காரியங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அரசியல் என முழுமையான பகுப்பாய்வு அவசியம்.

எந்த ஒரு சமூதத்தலையீட்டிற்கும் பகுப்பாய்வு அவசியம். கீழ்வரும் கட்டுரை, மதுபோதையினால் ஏற்படும் பாதிப்புகளை விளக்குவதோடு, அது தொடர்புடைய அரசியல் பின்னணியையும் அலசுகிறது.

**மது ஒழிப்பு கொள்கையின் அரசியலும், மது ஏற்படுத்தும் கேடுகளும்...**

பத்திரிக்கை செய்திகளிலும், நமது அக்கம், பக்க குடும்பங்களிலும் மதுவினால் ஏற்படும் குடும்பவன்முறைகள் பற்றியும், அதனால் குழந்தைகள், பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அதிகம் நாம் தெரிந்து வருகிறோம்.

சத்திஸ்கர் மாநிலம்,ராஜ்நந்தகாவுன் என்ற நகரத்தில் ரெயில்வே நிலம் அருகாமையில் உள்ள ஒரு குடிசையில் மஹிமா என்ற 10வயது மனநலம் பாதிப்படைந்த சிறுமியைக் கண்டோம். அவள் ஒன்றாம் வகுப்பிலேயே பள்ளியை விட்டு நின்றுவிட்டாள். தம்பியை பள்ளியில் சேர்த்திருக்கிறார்கள். மஹிமாவிற்கு மனநலம் பாதிக்கப்பட்டதற்கு காரணம் அவள் தந்தையின் குடிப்பழக்கமும், அவர் குடித்துவிட்டு மஹிமாவின் பள்ளிக்கே சென்று ரகளை செய்ததும்தான். அவள் தாய் தக்சினா பீடித்தொழில் செய்து தன் குழந்தைகளை காப்பாற்றி வருகிறார். இன்றும் மஹிமாவின் தந்தை தனது மனைவியையும், பின்னைகளையும் தொடர்ந்து துன்புறுத்தி வந்து கொண்டிருக்கிறார். அவர் மனைவி ஜீவானாம்சம் கேட்டு நீதிமன்றத்திற்கும்,பாதுகாப்பு வேண்டி காவல்நிலையத்திற்கு நடையாய் நடந்து வருகிறார். இந்த குடும்பம், பிழைப்பிற்காக மகாராஸ்ட்ராவிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள்.

மற்றொரு செய்தி : கணவனின் அதிக குடிப்பழக்கத்தால் பாதிப்படைந்து பிரிந்து வாழ்ந்த ஒரு பெண், கணவன் திருந்தி இனி குடியைத் தொடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்தவுடன் மீண்டும் சேர்ந்து வாழ சம்மதித்ததாக சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் ஒரு வழக்கு வந்துள்ளது. இந்த இரண்டு சம்பங்களும் அடித்தட்டு குடும்பங்களில் மது ஏற்படுத்தும் பிரச்சனைகளுக்கு ஒரு சான்று.

மது அருந்துவது என்பது பண்டைக்காலத்திலிருந்து வழக்கத்தில் இருந்துவந்துள்ளது. மது என்பது ஒரு போதையூட்டும் திரவம், அதனை உட்கொள்வது தனி நபர் சுதந்திரம் என்றும் கூறப்படுகிறது. அதனை அளவோடு உண்பதும், அளவுக்கு மீறி உண்பதும் அந்த தனி நபர் கையிலேயே உள்ளது. மது உட்கொள்ளும் தனிநபர் மற்றவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும்போது தான் குற்றம் என்று கருதப்படுகிறது. ஆனால், இநத்க் குற்றம் சமூகத்தின் பெரும்பான்மை மக்களான, பெண்கள், குழந்தைகளை பாதிக்கும்போது அது பெருங்குற்றம் என்று கருதி அதனை தடைசெய்ய அரசு முன்வருவதில்லை. காரணம், மது விற்பனை செய்யும் தொழிற்சாலை முதலாளிகளின் நெருக்கடி, மதுவிற்பனையால் அரசுக்கு கிடைக்கும் வருவாய் ஆகியவற்றைக் கொண்டு அது தனிநபர் சுதந்திரம் என்ற கருத்தினை போலியாக முன்னிறுத்தி இந்த விற்பனை தொடர்ந்து வருகிறது.

மது வீட்டிற்கும், நாட்டிற்கும் கேடு என்ற வாசகம் மட்டும்தான் மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. அதில் உள்ள உடலுக்கும், மனதிற்கும் கேடு விளைவிக்கும் வேதிப்பொருள் தன்மை பற்றி விளக்குவதே இல்லை.

தமிழ்நாட்டில் அரசே தரமான மது வழங்குவதாக கூறி மதுவிற்பனை செய்கிறது. அரசு மதுவிற்பனை செய்யாவிட்டால், கள்ளச்சாராயம் பெருகி பல உயிர்கள் பலியாகும் நிலை ஏற்படும் என்ற காரணம் சொல்லப்படுகிறது. தென்னை, பனை மரங்களிலிருந்து கிடைக்கும் கள் விற்பனை சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பனைத்தொழிலாளர்கள் கூறுவது, அரசு விற்கும் மதுபானங்களை விட கள் பானத்தில் ஆல்கஹால் அதிகம் இல்லை. இயற்கையாகக் கிடைப்பதால், உடலுக்கு தேவையான சத்துப்பொருட்கள் உள்ளன என்று.

இதற்கு அரசு தரப்பிலிருந்து வரும் பதில், ஒவ்வொரு பனைமரமும், தென்னை மரமும் ஒரு உற்பத்தி தொழற்சாலை போன்றது இதனைக் கண்காணிப்பது கடினம். ஆகவே கள் விற்பனை தடை என்பது நியாயமே என்கிறது. ஆனால் அதே அரசு ஒவ்வொரு தனிநபரும் ஒரு சாராயத்தொட்டியாக மாறிக் கொண்டிருக்கிறார்களே என்பதற்கு எந்த விளக்கமும் அளிக்கவில்லை. இப்படியாக, மது ஒழிப்புபற்றிய அரசியல் விவாதங்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

**மதுவில் என்னதான் உண்டு…பார்ப்போமா…**

மனித குலத்தையே ஆட்டிப் படைக்கும் மதுவின் தன்மைகள் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்த ஆல்கஹால் எனப்படும் சாராயம் என்னவெல்லாம் உடலுக்கு தீங்கு விளைவிக்கிறது என்று சற்று பார்ப்போம்.

மதுவில் பல வகைகள் உள்ளன. கள், உள்ளூர் சாராயம்(சட்டவிரோதமானது). சட்டபூர்வமாக அரசு விற்பனை செய்யும் மதுபானங்கள் (இதிலும் பலவகை உள்ளது). இவை அனைத்திலுமே ஆல்கஹால் எனப்படும் வேதிப்பொருள் உள்ளது.

சாராயம் எனப்படும் மது என்பது ஒரு மனநிலையத்தூண்டும் தன்மையுள்ள ஒரு திரவம் (psychoactive drug). இதில் நமது உடல் அல்லது மூளையின் ஒரு பாகத்தை செயலிழக்கச் செய்யும் ஆற்றல் உள்ள மருந்துப் பொருள் உள்ளது. இந்த வேதியில்தன்மை பிரதானமாக செயல்படுவது நமது மூளையுடன் இணைந்துள்ள இரத்த நாளங்களைக் கடத்திச்செல்லும் மத்திய நரம்பு மண்டலத்தின் மீதுதான்.

இப்படியாக, நேராக மூளையுடன் தொடர்பு கொள்வதால், அது அருந்தியவருடைய கண்ணோட்டம், சிந்தனை, மனநிலை, மனசாட்சி, உணர்ச்சிகள், நடத்தை என அனைத்தையும் மாற்றிவிடுகிறது.

மதுவிற்கு நமது நரம்பு மண்டலம், மூளை, நுரையீரல் ஆகியவற்றை கடுமையாக பாதிக்கும் ஆற்றல் உண்டு. குறகிய காலத்திற்கு உட்கொள்ளும் மதுவினால், உடலில் நச்சுத்தன்மை பரவுவதோடு, செரிமான உறுப்புகள் தடுமாற்றமடையும். நீண்டகாலத்திற்கு மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு, முதலில் நுரையீரல், மூளை ஆகியவை பாதிக்கப்பட்டு, கடுமையான நோய்க்கு உள்ளாவார்கள்.

மதுவின் நச்சுத்தன்மை மூளையை பாதித்து, பேச்சில் தடுமாற்றம், செயல்படுவதில் தாமதத்தை ஏற்படுத்தும். இதனோடுகூட, இன்சுலின்சுரப்பினை அதிகமாக தூண்டிவிட்டு, இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை வேகமாகக் குறைத்துவிடும். இதனால், எரிச்சல் உண்டாகி, சில சமயங்களில் இறப்பிற்கும் ஆளாக்கிவிடும். சாராயம் நஞ்சாகும் போது அதன் பாதிப்பு மிகக்கடுமையாக இருக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன..

மதுப்பழக்கம் என்பதை ஆரம்பகட்டத்திலேயே தடுத்துவிட்டால் அதிலிருந்து தப்பிவிடலாம். பெரும்பாலானவர்களுக்கு மதுப்பழக்கம் இளம் வயதிலேயே ஆரம்பித்துவிடுகிறது.

நண்பர்கள் ஒன்றாக இணைந்து கொண்டாட்ட மனநிலையில இருக்கும்போது, ஓருவா் மிக அதிகமான மனஅழுத்தத்தில் இருக்கும்போது, தான் என்ற கவுரவத்தை வெளிப்படுத்த வழியில்லாதபோது, தன்னிலை மறந்துஇருக்க ஆசைப்படும் போது என பல நிலைகளில் மதுப்பழக்கத்திற்கு ஒருவா் அடிமையாகிறாா். இதில் பெரும்பாலும், பாதிப்பு என்பது, குடும்பத்தில் உள்ள ஆண்கள், தன் மனைவி, பிள்ளைகளை பராமரிக்க, பாதுகாக்க திராணியற்று தனக்கு ஒரு மாற்றுவழி ஏதேனும் இருக்கிறதா என்று தேடும்போது குடிப்பழக்கம் என்ற நிலைக்கு ஆளாகின்றனா் என்று கள ஆய்வுகள் கூறுகின்னறன.

**இறுதியாக**

பங்கேற்பாளா்கள் பலா் ஏற்கனவே பல சமூகப்பிரச்சனைகளில் தலையிட்டு தீா்வுகண்டவா்களாகவோ அல்லது அனுபவம் பெற்றவா்களாகவோ இருப்பா்.

அவர்கள் தங்கள் அனுபவங்களை பொதுவெளியில் பகிர்ந்துகொள்ளவும், அதிலிருந்து அவர்கள் கற்றுக்கொண்ட திறன்கள், அவை அவர்களது வாழ்க்கைக்கு பயன்பட்டவிதத்தினையும் பகிர்வதற்கான அமர்வாக இந்த அமர்வு இருக்கும்.

செயற்பாடு :

**நடித்துக்காட்டுதல்:**

இந்த செயல்பாட்டில் சமுதாய உறுப்பினர்கள் / தலைவர்கள் ஒரு பிரச்சனையைக் கையாளும்போது அவரவர் என்னென் பங்கு வகிக்கிறார்கள் என்பதும், பொறுப்புகளைப்பகிர்வது. குழுவாகசெயல்பட்டு பிரச்சனையை திறமையாக தீர்ப்பது போன்ற திறன்கள் வெளிப்படும்.

**தேவையான தயாரிப்பு**

1. பங்கேற்பாளர்களைக் குழுக்களாக பிரித்தல்
2. ஒவ்வொரு குழுவிற்கு கீழ்கண்ட முக்கியப் பிரச்சனைகளில் ஒன்றைப்பகிர்ந்து அவர்களுக்குள் விவாதிக்கச்செய்தல்.
   - அ. மதுபோதையினால் ஏற்படும் பாதிப்பு. குடும்பம் பாதிப்படைவது மட்டுமல்லாமல், அக்கம்பக்கத்தினரும் பாதிப்படைவது.
   - ஆ. படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மை
   - இ. குடிநீர்ப்பற்றாக்குறை
   - ஈ. சுற்றுச்சூழல் பாதிப்பு–தொழிற்சாலைக் கழிவுகளால் ஏற்படும் காற்று/நீர்மாசுபாடு
   - உ. பொதுநூலகம் பயன்படுத்தப்படாமல் இருப்பது.
   - ஊ. விவசாயத்திற்கு போதிய நீர் கிடைக்காமல் இருப்பது.
   - எ. உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு போதிய விலை இல்லாதது.
   - ஏ. போக்குவரத்து வசதியில்லாதால் மக்கள்படும் அவதி.

இவை போன்று வேறு ஏதேனும் முக்கிய பிரச்சனைகள் இருப்பின் அவற்றையும் இணைத்துக்கொள்ளலாம்.

## குறிப்புகள்:

1. நாடகத்திற்கான முன்தயாரிப்பு (10 நிமிடங்கள்)

   குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், கொடுக்கப்பட்டுள்ள பிரச்சனை சம்மந்தமான கதாபாத்திரம் பற்றி விளக்குதல். ஒருகுறிப்பிட்ட சம்பவம் அல்லது பொது பிரச்சனையாக்கூட இருக்கலாம்.
   ஓவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஒரு பெயர் அடையாள அட்டை அளித்து அவர்களது நாடகத்தில் அவர்களது பங்கு மற்றும் பொறுப்பினை விளக்குதல்.

2. அறிமுகம்(5 நிமிடங்கள்)

   நாடகத்தை வழி நடத்தும் பொறுப்புள்ள நபர்(பங்கேற்பாளரில் ஒருவர்) அனைவரையும் வரவேற்று நாடகத்தின் நோக்கம். அதில் பங்குபெறும் கதாபாத்திரங்களைப் பற்றியும், எடுத்துக்கொண்ட பிரச்சனை பற்றியும் விவரித்தல்.

3. நாடகநடிப்பு தயாரிப்பு (20 நிமிடங்கள்)
   எடுத்துக்கொண்ட பிரச்சனையை தெளிவாக விளக்கி, அந்தந்த கதாபாத்திரங்கள் அப்பிரச்சனையை தீர்க்க / அல்லது தீர்க்காமல் இருக்க என்னென்ன செய்கிறார்கள் என்பதை விளக்கவும்.

ஒவ்வொரு கதாபத்திரத்தின் பங்கு பற்றி தெளிவாக விளக்கி வசனங்கள் தயார் செய்துகொள்ளவும்.
இறுதியில், எவ்வாறு குழுவாக அப்பிரச்சனையைத்தீர்க்கிறார்கள் என்பதையும் விளக்கலாம். ஒருமுறை ஒத்திகை செய்து பார்க்கவும்.

4. நாடக அரகேற்றம் (10 நிமிடங்கள்)

   நடித்துக் காட்டவும். ஒவ்வொரு பங்கேற்பாளரும் நாடகம் குறித்த தனது கருத்துக்களை விவாதிக்கவேண்டும்.

5. இறுதியாக,

அனைத்துப்பங்கேற்பாளர்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல் (5 நிமிடங்கள்)

குடிமைப்பணிகளில் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் திறன்கள் / தகவல்கள் அறிவு எவ்வாறு தமது சொந்த வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பயன்படும் என்பது குறித்தும் கலந்துரையாடலாம்.

# இரண்டாம் அத்தியாயம் : சமுதாய உறுப்பினர்களை அதிகாரப்படுத்தலின் மூலம் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குதல்

## அமர்வு 5: குடியுரிமைக்கல்வி குறித்த அறிமுகம்

**நோக்கம்** : அனைவருக்கும், அனைத்து உரிமைகளும் உறுதிசெய்யப்பட குடியுரிமைக்கல்வியின் அவசியம் குறித்தும், அதற்கான அரசியல் சட்டபாதுகாப்பும், அதனை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் புரிதலை ஏற்படுத்துதல்.

**குடியுரிமை – ஒவ்வொரு தனி நபருக்குமான அரசியல் அடையாளம்.**

இந்திய அரசியல் சட்டத்தில், நாட்டில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் குடியுரிமை (Citizenship) வழங்கப்பட்டுள்ளது. இந்தியக் குடியுரிமை என்பது இந்திய எல்லைக்குள் பிறந்து, வளரும் எவருக்குமான அடிப்படை உரிமையாகும். மேலும் அவர்கள் மற்றவருடன் சமமாக நடத்தப்படுவதற்கும், அரசியலில் பங்கேற்பதற்கும் தகுதி பெற்றவராவர். குறிப்பாக, அனைத்து அடிப்படை உரிமைகளையும்-உயிர் வாழ உரிமை, சட்டத்தின் முன் சமம், வாக்குரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கமாகும் உரிமை, கல்வியுரிமை, தகவல் பெரும் உரிமை என்பன போன்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிக்கக் கடமைப்பட்டவராவர். இந்த உரிமைகள் மீறப்பட்டால் அதனை மீறும் நபர்கள் மற்றும் அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க நீதித்துறையும் - உச்சநீதிமன்றம் மற்றும் உள்ளூர் நீதிமன்றங்கள் (judiciary)ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், யதார்த்ததில் மிகப் பெரும்பான்மையான மக்கள், அடிப்படை வாழ்வுரிமையின்றி, கல்வி வாய்ப்பில்லாமலும், சாதி, பெண்ணடிமைத்தனம் ஆகிய கட்டமைப்புகளாலும் உரிமையிழந்து இருக்கும் சமூக அலவம் இன்றும் இந்தியாவில் நிலவி வருகிறது. இவர்களுக்கு மேற்கூறிய அடிப்படை உரிமைகளும் கூட மறுக்கப்பட்டும் வருகிறது. இந்நிலையில், இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குடியுரிமை என்பது உண்மையில் அனைவருக்கும் சமமாக இல்லை.

அரசியல் சட்டத்தை இயற்றியபின் மாமேதை அம்பேத்கர் அவர்கள் கூறியது "1950, ஜனவரி 26 அன்று நாம், முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கப்போகிறோம். அரசியலில் நமக்கு சமத்துவம் இருந்தாலும் சமூக, பொருளாதார வாழ்வில் சமத்துவமின்மையான நிலையே இருக்கும். அரசியலில் ஒரு நபர், ஒரு ஓட்டு, ஒரே மதிப்பீட்டைக் கொண்டிருப்போம். நமது சமூக, பொருளாதார கட்டமைப்பினால், நம் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு மனிதன், ஒரு மதிப்பு என்ற கொள்கை மறுக்கப்படுவது தொடரும். இத்தகைய முரண்பாடுள்ள வாழ்வை நாம் எத்தனை காலம்தான் தொடர்வது? நமது சமூக, பொருளாதார வாழ்வியலில் சமத்துவமின்மையை எவ்வளவு காலம் தொடர்ந்து மறுக்கப்போகிறோம்? வெகுகாலம் நாம் இதை மறுத்தால், நமது ஆட்சியதிகார ஜனநாயகத்தை படுகுழியில் ஆழ்த்துவதன் மூலமே நாம் அதை செய்வோம். இந்த முரண்பாடுகளை நாம் முடிந்தவரை விரைவில் களையவேண்டும். இல்லையேல்,இந்த அரசியல் சாசனசபை கடுமையாக உழைத்து உருவாக்கிய ஜனநாயகக் கட்டமைப்பை சமத்துவமின்மையால் பாதிப்பிற்கு உள்ளாகும் மக்களே அதனைத் தகர்த்து விடுவார்கள்".

இதனடிப்படையில் பார்த்தால் சமூக சமத்துவம், பொருளாதார சமத்துவம் எட்டப்படாததனாலேயே, அரசியல் சமத்துவம் அனைத்துமக்களுக்கும் எட்டாமல் உள்ளது. அரசியல் சமத்துவம் என்பது 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு வாக்களிக்கும் உரிமையாக மட்டுமே சுருங்கியுள்ளது.(பல பகுதிகளில் இந்த வாக்குரிமை கூட சாதி,மதம்,வர்க்க பேதங்களால் மறுக்கப்படுகிறது).

## சட்டமும் சமூகப்பண்பாடும்

மேற்கூறப்பட்ட குடிஉரிமைகள் சட்டத்தாலோ, சலுகைத்திட்டங்களாலோ மட்டும் காக்கப்படுபவை அல்ல. அவை சமூகத்தில் நிலவும் ஒழுக்க நெறிமுறைகளாலேயே பாதுகாக்கப்படுகின்றன. சட்டத்தில் இயற்ற விழையும் உரிமைகள் குறித்த சமூக பகுத்தறிவு இருக்குமானால் அந்த உரிமைகள் பாதுகாப்பாக உறுதிசெய்யப்படும். ஆனால், நடைமுறை உலகில், அடிப்படை உரிமைகள் சமுதாயத்தால் எதிர்க்கப்படுமானால், எந்த சட்டமோ, பாரளுமன்றமோ. நீதித்துறையோ உத்திரவாதப்படுத்த முடியாது.

இந்நிலையில் சமுதாயக்குழுக்கள் மற்றும் இயக்கங்கள், மக்களின்வாழ்வியல் மாற்றத்தை நோக்கி, சமத்தவசமூகத்தை உருவாக்கும் கொள்கைகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டுத் தளத்திலிருந்து கட்டமைப்புகளைக் உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர்நோக்கும் அடிப்படை மாற்றங்களைக் காண முடியும். அதன் பிறகே, நாட்டின் சட்டங்கள், கொள்கைகள் அனைவருக்கும் சமமான வளர்ச்சிக்கு வழிவகுக்க முடியும்.

ஆக, நடைமுறைப் பண்பாட்டு அரசியல் அமைப்புக் கல்வி என்பது ஒவ்வொரு நபருக்கும் அவசியமாகிறது.

**குழந்தைப் பருவத்திலிருந்தே**:
அது குழந்தைப பருவத்திலிருந்தே அளிக்கப்பட்டால் மிக நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். அப்படியெனில்,18வயது நிரம்பியவுடன் முழுமையான விழிப்புணர்வு கொண்ட வாக்காளர்களாக, திறன்மிக்க குடிமக்களாக உருவாவதற்கான நடைமுறை குடிமைக்கல்வி பெறுவார்கள். சிறார் பருவத்திலிருந்து இளைஞராகும் போது, அனைத்துவித சமூக, பொருளாதார, அரசியல் பாகுபாடுகளை உணர்ந்து அதனை களைந்தெடுக்கும் திறன் பெற்றவர்களாகிவிடுவார்கள். இவர்களில் தலைமைத் திறன் கொண்டவர்கள் அவர்கள் சார்ந்த பகுதி மக்களின் பிரதிநிதிகளாகும் தகுதியையும் கொண்டிருப்பார்கள்.

நமது அரசியல் அமைப்பு முறையை சமத்துவம், சமூக நீதிக் கோட்பாடுகளுடன் செயல்படுத்த சிறந்த சமூக மாற்றக் கொள்கைகளைக் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் வேண்டும். பின்தங்கியவர்களின் நலன் காக்க நகமும் சதையுமாகப் போராடக்கூடிய மக்கள் எழ வேண்டும்.

நமது மக்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளை சரிசெய்யும் மக்கள், அச்சமின்றி நமது குறைகளை எடுத்துரைக்கும் மக்கள், சிந்தித்து, தலைமையேற்று செயல்படுத்துபவர்கள், கொள்கை மற்றும் கோட்பாடுகளைக் கொண்டவர்கள் வேண்டும்.

அத்தகைய நபர்கள் பாரளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் அனுப்பப்படவேண்டும். யாருக்கும் அடிமைப்படாமல், அவர் மனசாட்சிப்படி சுதந்திரமாக நமது குறைகளை நீக்கமுடிந்த நபர்களையே அரசியல் அமைப்பில் ஆட்சிப் பொறுபேற்க வேண்டும். இதற்கு நடைமுறைப் பண்பாட்டு அரசியல் கல்வி உதவும். இக்கல்வி குழந்தைகளுக்கு அவர்கள் வாழிடத்தில் அக்கம்பக்க அளவில் கிடைக்கச் செய்யவேண்டும்.

இந்தவகையில் அக்கம்பக்கத்து அளவில், சமூக்குழுக்கள் இணைந்து ஊர், ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், மாநில என்னும் தளங்களில் இணைத்து, அவர்களுக்கு வெவ்வேறுதுறை பொறுப்புகள் கொடுத்து, இப்போதே அவர்களை இணைந்த சிந்தனையிலும், செயலாக்கத்திலும் ஈடுபடுத்தும் முயற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**இறுதியாக,**

மேற்கூறிய குடியுரிமை பற்றிய வளக்கத்தை பயிற்சியாளர் விளக்கிய பிறகு, பின்வரும் செயல்பாட்டினை பங்கேற்பாளர்களைக் குழுக்களாகப்பிரித்து கலந்துரையாடச்செய்யலாம்.

செயற்பாடு (20 நிமிடங்கள்)

குழுகலந்துரையாடல்
பங்கேற்பாளர்களை 3-4 குழுக்களாகப் பிரிக்கவும்.
ஓவ்வொரு குழுவும் தாங்கள் அனுபவித்துவரும் அடிப்படை உரிமைகள் என்னென்னஎன்று பட்டியலிடச் செய்யவேண்டும்.

| | உரிமைகள் | கடமைகள் |
|---|---|---|
| தனிநபராக(Personal Domain) | | |
| இன்னொரு நபருடன் இணைந்து வாழும்போது (Inter-Personal Domain) (குடும்பத்தில் உள்ள இணையராக இருக்கலாம்) | | |
| வீட்டில் (Private Domain) | | |
| பொதுவெளியில் (public Domin) உ.ம். அக்கம்பக்கம். | | |
| அரசியல்தளத்தில்(Political Domain) | | |

மேற்சொன்ன செயல்பாட்டினை குழுவினர் கலந்துரையாடி தொகுத்த பிறகு, அனைவருக்கும் பகிர்ந்து கொள்ளச்செய்யலாம்.

உரிமைகளும், கடமைகளும் ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், முழுதிறன் உள்ளவர்களுக்கும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் இந்த செயல்பாடு மூலம் பங்கேற்பாளர்கள் பகுத்துணரமுடியும்.

## அமர்வு 6 : ஜனநாயக ஆட்சிமுறையின் கூறுகள் :



**நோக்கம்** : தனிநபர் உரிமைகள் நிலைநாட்டப்பட ஜனநாயக(மக்களாட்சி) நிறுவனங்களின் அமைப்புமுறை குறித்த அறிமுகமும், அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்த புரிதலையும் உருவாக்குதல்.

**ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்றால் என்ன?**

எங்குபாகுபாடு இல்லாமல் அவரவர் தன்மைக்கு ஏற்ப அனைவரும் பங்கேற்கும் உரிமை உள்ளதோ அங்கு ஜனநாயகம் என்கிற மக்களாட்சி நிலவுவதாக அறியலாம். மக்களாட்சிக்கும் விதிமுறைகள் / ஒழுங்குமுறைகள் உண்டு. அவை அரசமைப்புச்சட்டத்தின் மூலம் முறைப்படுத்தப்படும். ஜனநாயகம் இரண்டு வகைப்படும். அவை :

1. பிரதிநிதித்துவ ஜனநாயகம் (பாராளுமன்றம் / சட்டமன்றம்)
2. பங்கேற்பு ஜனநாயகம் (கிராமசபை)

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகிறது. சுதந்திர இந்தியாவில் இயற்றப்பட்ட அரசமைப்புச்சட்டத்தின் முகப்புரையில் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு:

“இந்தியகுடிமக்களாகிய நாம், இந்தியாவை இறையாண்மை கொண்ட சோசலிச(சமூகவுடமை), சமயசார்ப்பற்ற, ஜனநாயக குடியராசாக அமைக்க உறுதிபூண்டுள்ளோம். இதன்மூலம், அனைத்துக்குடிமக்களையும் பாதுகாப்பதுடன்:

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவருக்கும் நீதி
- எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச்சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச்சொல்ல, வழிபாடுசெய்ய சுதந்திரம்.
- தகுதியிலும், வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து அனைவரையும் உயர்வுறச்செய்தல்
- தனிமனிதர்களின் மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவதோடு வாழ்வது என்று உறுதிபூண்டுள்ளோம்.

இந்திய அரசமைபுச்சட்டத்தை 1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் நமது அரசியல் நிர்ணயசபையில் ஏற்றுக்கொண்டு, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்”.

மேற்கூறப்பட்ட இந்திய அரசமைப்புச்சட்டம், 1950,ஜனவரி 26லிருந்து இன்று வரை செயல்பட்டு வருகிறது.

**அரசமைப்புச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகள்:**

விதி 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

விதி 15 – மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் ஆகிய எவற்றின் காரணம் கொண்டும் பாகுபாடு காட்டப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

விதி 16 – பொதுதொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் சமத்துமவம்.

விதி 17 – தீண்டாமை ஒழிக்கப்பட்டது.

விதி 19 – பேச்சுரிமை

விதி 20 – முறைதவறி கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பு (சூரியன் உதிப்பதற்குமுன்பும், மறைந்த பின்பும் பெண்கள் கைது அல்லது விசாரணைக்கு காவல்நிலையம் அழைக்கப்படக்கூடாது)

விதி 21 – சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை

விதி 21A- கல்வி உரிமை

விதி 23- கட்டாய உழைப்பு, கடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு

விதி 24- குழந்தைத் தொழிலாளர் முறை தடை செய்யப்பட்டது.

விதி 25-28 – விரும்பும் சமயத்தை பின்பற்றும் சுதந்திரம்.

விதி 29-30- சிறுபான்மை சமயத்தைப் பின்பற்றுவொருக்கான சிறப்பு பாதுகாப்பு உரிமைகள்.

விதி 32 – மேற்கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எவருக்கேனும் மீறப்பட்டால் நீதிமன்றம் தலையிட்டு சரிசெய்யும் அதிகாரம்.

**மூன்றடுக்கு மக்களாட்சி முறை – பிரதிநிதித்துவ ஜனநாயக நிறுவனங்கள்**

இந்தியாவின் பிரதிநிதித்துவஜனநாயகத்தின்படி, அமைக்கப்பட்ட அரசியல் ஆட்சி அமைப்பு (Political Governance) மூன்றடுக்குமுறையைக் கொண்டுள்ளது. அது, மத்திய அரசு, மாநிலஅரசு, உள்ளாட்சி அமைப்பு ஆகியவையாகும். மத்தியில் உள்ள அரசு என்பது ஒன்றியஅரசு (Union of States) என்று அரசியல் சட்டத்தால் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம், மாநிலங்களை ஒருங்கிணைத்து சட்டங்கள் / திட்டங்கள் உருவாக்குவதே ஒன்றிய அரசின் பணியாக உள்ளது.

மத்தியில், ஜனாதிபதி, பிரதமமந்திரி, அமைச்சரவை ஆகியோரைக் கொண்டும், மாநிலத்தில் மாநில ஆளுநர்,முதலமைச்சர், மாநில அமைச்சரவைக் கொண்டும் செயல் அதிகார அமைப்பு (Executive)உள்ளது.

ஆட்சி அதிகார அமைப்புகளாக, ஒன்றிய அளவில், லோக்சபை, இராஜ்யசபையும் (பாராளுமன்றம்), மாநில அளவில் சட்டமன்றங்களும் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமியற்றும் அதிகார அமைப்புகளாக (Legislature) உள்ளன.

சட்டமியற்றும் மற்றும் செயல் அதிகாரம் கொண்ட இவ்வமைப்புகளின் சட்டங்கள், திட்டங்களை நிறைவேற்றும் மிகப்பெரும் அதிகாரிகள் / அரசுத்துறைகளைக் கொண்ட அரசாங்க அமைப்பையும் மத்திய / மாநிலஅரசுகள் கொண்டுள்ளன.

1992ல், அரசியல் சாசன அங்கீகாரம் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளோ, ஒன்றியமற்றும் மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்றும் அமைப்புகளாகவே பெரும்பாலும் அனைத்து மாநிலங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

**அதிகாரப்பகிர்வு –**

மத்திய,மாநில, அரசுகளின் அதிகாரப் பகிர்வு இந்திய அரசியல் சட்டத்தின அட்டவனை 7ல் 3 பட்டியல்களாக கொடுக்கப்பட்டுள்ளது.

**மத்தியப்பட்டியல்** (இரயில்வே, வெளிநாட்டு உறவுகள், இராணுவம், வருமானவரி(Incometax), பொருட்கள் மற்றும் சேவைவரி (GST), தொலைத்தொடர்பு போன்றவை உள்ளிட்ட).

**மாநிலப்பட்டியல்** (போக்குவரத்து, காவல்துறை, நிலவரி வருவாய், விளம்பரவரி, உள்ளாட்சி நிர்வாகம் போன்றவை உள்ளிட்டவை).

**பொதுப்பட்டியல்:** இரண்டு ஆட்சி அமைப்புகளும் தலையிடக்கூடிய துறைகள்(கல்வி, சுகாதாரம், ஊரகவளர்ச்சி, குற்றவியல் சட்டநடைமுறை, மின்சாரம், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சுநிறுவனங்கள் உள்ளிட்டவை) என விளக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், நிதி நிர்வாகத்திலும், ஆட்சி அதிகாரத்திலும் மத்தியஅரசே பலம் பொருந்தியதாக உள்ளது. 28 மாநிலங்கள், 7யூனியன் பிரதேசங்களைக் கொண்ட மத்திய,மாநில அரசியல் அமைப்பில் கிட்டத்தட்ட 4500 மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி செய்கின்றனர். இந்த மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதிலும், இயக்குவதிலும் அதிகாரம் பெற்ற அமைப்பாக அரசியல் கட்சிகள் உள்ளன.

## செயற்பாடு (15 நிமிடங்கள்)

பங்கேற்பாளர்களுக்கு பின்வரும் கேள்வித்தாளினை அளித்து கலந்துரையாடச் செய்யலாம்.

1. நாம் ஏன் வாக்களிக்க செல்கிறோம்.
2. வாக்களிப்பதால் நமக்கு என்ன நன்மைகள் கிடைக்கின்றன.
3. நாம் வாக்களிப்பதால் மட்டும் இந்தியாவில் மக்களாட்சி நடக்கிறது என்று கூறமுடியுமா? ஆம் என்றால் எப்படி? இல்லை என்றால் ஏன்?
4. சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள்?

## அமர்வு 7 : பங்கேற்பு ஜனநாயகம் - வாய்ப்பு எங்குள்ளது

**நோக்கம்:**அடித்தட்டு மக்களுக்கு நெருக்கமாக உள்ள ஆட்சி அமைப்பு உள்ளாட்சிகளே. அரசியல் சாசனமும், கிராமசபைமூலம் அங்குதான் மக்கள் பங்கேற்பிற்கான தளத்தினை உருவாக்கித்தந்துள்ளது. அதனை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்தபுரிதலை உருவாக்குதல்.



**உள்ளாட்சி அமைப்புகள் - பங்கேற்பு ஜனநாயகத்திற்கான நிறுவனங்கள்**

மூன்றாவது ஆட்சி அமைப்பான உள்ளாட்சி அமைப்புகள் மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், தெருவிளக்கு, கழிவுநீர்அகற்றல், தூய்மைப்பணிகள், கிராமப்புறமக்களுக்கான 100நாள் வேலைவாய்ப்பு, பள்ளிகள் / பொதுவான ஆதாரங்கள் பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மாநில மற்றும் ஒன்றிய அரசின்நிதி உதவியுடன் செயல்படுத்திவருகின்றன.

இங்கும், மக்களால் தேர்தல்மூலம் தேர்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட நகர்புற உள்ளாட்சிகள் கிராமப்புற உள்ளாட்சிகள் என்ற இரண்டு அமைப்புகள் உள்ளன.

| கிராமப்புற உள்ளாட்சிகள் (ஊரகவளர்ச்சிதுறை) | நகர்புற உள்ளாட்சிகள் (நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) |
|---|---|
| கிராம ஊராட்சி | பேரூராட்சி |
| ஊராட்சி ஒன்றியம் | நகராட்சி |
| மாவட்ட ஊராட்சி | மாநகராட்சி |

இந்திய அரசமைப்புச்சட்டத்தில் மேற்கூறப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளும் பங்கேற்பு ஜனநாயக அமைப்பாக செயல்பட கீழ்வரும் முக்கிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

1. தனிமாநில தேர்தல் ஆணையம்
2. கிராமசபை – அனைத்துவாக்காளர்களையும் கொண்டது
3. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயத்தேர்தல்
4. பெண்களுக்கான குறைந்தபட்சம் 33 சதவீதகட்டாய இடஒதுக்கீடு (தமிழ்நாட்டில் 50%ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
5. பட்டியலின / பழங்குடி மக்களுக்கான மக்கள் தொகை அடிப்படையிலான இடஒதுக்கீடு
6. தனிமாநில நிதி ஆணையம்
7. மாவட்ட திட்டமிடல் குழுக்கள்
8. கிராமபுற உள்ளாட்சிகள் தலையிடுவதற்கான, கல்வி, சுகாதாரம், பொதுவிநியோகம், நிலசீர்திருத்தம், நிர்வாகம் உள்ளிட்ட 29 துறைகள் (மாநில அரசு அதிகாரப்பகிர்வுக்குட்பட்டது)
9. நகர்புற உள்ளாட்சிகள் தலையிடுவதற்கான, கல்வி, சுகாதாரம், தீயணைப்பு, கழிவுநீர் மேலாண்மை, நகர்புறத்திட்டமிடல் உள்ளிட்ட 18 துறைகள்(மாநில அரசு அதிகாரப்பகிர்வுக்குட்பட்டது)

மேற்கூறப்பட்டுள்ள, மக்களாட்சிக்கான அரசமைப்புச்சட்டத்தின் வழிவகைகள் பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்படவேண்டும் மக்களின் வாக்குளால் ஆட்சி அதிகாரத்திற்கு செல்லும் பிரதிநிதிகள் மக்களின் தேவைகளையும், பிரச்சனைகளையும் கவனிக்கிறார்களா என்று கண்காணிப்பது ஒவ்வொரு வாக்காளரின் கடமையாகிறது. மிகப்பெரும், அதேநேரத்தில் மிகச்சிக்கலான ஆட்சி அதிகாரநிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்ற பகுப்பாய்வு மக்களால் செய்யப்படவேண்டும்.

## செயற்பாடு (15 நிமிடங்கள்)

பங்கேற்பாளர்களிடம் பின்வரும் கேள்வித்தாளினை அளித்து கலந்துரையடச் செய்யலாம்.

1. வாக்காளர் அடையாள அட்டை ஏன் அவசியம்?
2. ஊள்ளாட்சிப்பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்
3. நம்மில் யார் தேர்தலில் நிற்க விரும்புகிறோம்? ஏன்?எதற்காக?
4. கிராமசபை எதற்காக?
5. இதுவரை கிராமசபையில் என்ன பேசியிருக்கிறோம்.
6. சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர்கள் செயல்பாடுகளுக்கும், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் செயல்பாடுகளுக்கும் என்ன வேறுபாடு?
7. நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளில் யாரிடம் நாம் எளிதில் நெருங்கமுடியும்?
8. நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளில் யாரிடம் அதிக அதிகாரம் இருக்க வேண்டும்.

## அமர்வு 8 : சமத்துவமும் சமூகநீதியும்

**நோக்கம்** : பிறப்பின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் ஏற்றத்தாழ்வினை மாற்றவே சமூக நீதிக் கொள்கை உருவானது என்பதை விளக்குதல்.

**சமூகநீதி – அறிமுகம்**

சமூகத்தில், சமத்துவம் மற்றும் நியாயத்தினை வளர்க்கும் ஒரு கருத்தாக்கமே சமூகநீதி. மனிதாராகப் பிறந்தாலேயே ஒவ்வொருவரும் சமமானவர்கள் என்றும் அனைத்து வளங்கள், வாய்ப்புகள், அடிப்படை மனிதஉரிமைகளை அடைவதில் ஒவ்வொரு தனிநபருக்கும் உரிமையுண்டு என்ற கருத்தினை அடிப்படையாகக்கொண்டது. முக்கியமாக சமூகநீதியானது, நிறபேதம், ஆண் / பெண் வேறுபாடு, சமூக / பொருளாதாரசூழல், பாலியல்தன்மை, மாற்றுத்திறன் போன்ற பிற அடையாளங்கள் அடிப்படையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை களைவதற்காக உருவாக்கப்பட்டது. உலகளாவிய அளவில் மனித உரிமை போற்றும் நாடுகளால் கடைபிடிக்கப்பட்டுவருகிறது.

**சமூகநீதியின் முக்கிய கோட்பாடுகளும் இலக்கும்**

சமபங்கு எந்தப்பிண்ணனியை சேர்ந்தவராக இருப்பினும், ஒவ்வொருக்கும் நியாயமானமுறையில் வெற்றி பெறவாய்ப்புகள் வழங்குவது (இடஒதுக்கீடு கொள்கை இந்தக் கோட்பாட்டிலிருந்தே உருவானது).

சமத்துவம் : ஒவ்வொரு தனிநபரும், எத்தகையவராக இருப்பினும், சட்டத்தின் முன் சரிசமமாக நடத்தப்படுவதை உறுதி செய்தல்.

நியாயம்: கல்வி, வேலைவாய்ப்பு, ஆரோக்கியம் ஆகிய துறைகளில் சமூகக்கட்டமைப்புகளால் நிகழ்த்தப்பட்ட பாகுபாடுகளைக் களையச்செய்தல்.

ஒடுக்கப்பட்டோரை உள்ளடக்குதல் : சமூகத்தால் ஒடுக்கப்பட்டோராகவும், பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டோராகவும் இருக்கும் நபர்களையும், அவர்களது கருத்துக்களையும் கேட்பது, அதற்கான செயல்புரிவது.

வளங்களைப் பகிர்தல் : வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க, வளங்களை அனைத்து தரப்பு மக்களுக்கும் பகிர்ந்தளித்தல்.

மனிதஉரிமைகளுக்காக வாதிடல் : அனைவருக்குமான மனிதஉரிமைகளை, குறிப்பாக, வாழ்வுரிமை, சுதந்திரம், பாதுகாப்பு, பேச்சுரிமை, பாகுபாட்டிலிருந்து விடுபடுவது பற்றிய உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

சமுதாய ஒருங்கிணைப்பு : சமூகப்பிரச்சனைகளைக் களைய அனைத்து பிரிவு மக்களையும் ஒருங்கிணைய அழைப்பது தான் சமூகநீதி.

அதிகாரப்படுத்துதல் : ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் சூழலிலிருந்து மீண்டு வர தேவையான வழிவகைகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருவதே சமூகநீதியின் கோட்பாடு.

**இந்தியாவின் சமூகநீதிக்கான பின்னணி :**

பல்லாயிரம் ஆண்டுகளாக, பிறப்பின் அடிப்படையில் மனிதர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள பிரிவனையே சாதி அமைப்பாகும், சாதி அமைப்பின் அடித்தட்டில் இருக்கும் மக்கள், தனிப்பட்ட வாழ்விலும், பொதுவாழ்விலும் பலவிதமான பாகுபாடுகள், ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். உலகஅளவில், 260 மில்லியன் மக்கள் சாதிசார்ந்த பாகுபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் அதிக சதவீத மக்கள் தெற்காசிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் வாழ்கின்றனர். தமிழகத்தில் 19 சதவீத மக்கள் பட்டியலினத்தை சேர்ந்தவர்களாக உள்ளனர்.

சாதியபாகுபாடு என்பது, தூய்மை மற்றும் அசுத்தம் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் பலவடிவங்களில் மனிதர்களிடையே பிரிவினை ஏற்படுத்தும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக, பட்டியலின மக்கள் வாழ ஊருக்கு ஒதுக்குப்புறமான தனியான குடியிருப்பு, தனிசுடுகாடு / இடுகாடு, சமூகசமத்துவமின்மை, நிலவுரிமை மறுப்பு, உள்ளூர் வேலைவாய்ப்பு, சுயதொழில், பொதுசேவைகள் செய்வதிலும், பெறுவதிலும் உள்ள கட்டுப்பாடுகளும் அடங்கும். மிகமுக்கியமாக, பாரம்பரியமான முறையில் வகைப்படுத்தப்பட்ட பணிகளான பிணம் எரித்தல், தூய்மைப்பணிகளையும், பிற அபாயகரமான தொழில்களையும் செய்ய பட்டியலின மக்கள்

வற்புறுத்தப்படுகின்றனா் தீண்டாமையும், சாதியபாகுபாடும், இந்திய அரசியல் சட்டத்தில் ஒழிக்கப்பட்டிருந்தாலும், இன்றும் சமூக, பொருளாதார நடைமுறையில் சாதிய பிரிவினைகளும், பாகுபாடுகளும், ஒடுக்குமுறைகளும் கொண்டுதான் இருக்கின்றது.

இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள், பட்டியலினமக்களுக்கு சிவில் (குடிமக்கள்), அரசியல் முன்னுரிமைகளை வழங்கியுள்ளது. 73வது அரசியல்சட்டத்தின் 243Dபிரிவின்படி, உள்ளாட்சிப்பிரதிநிதித்துவம் பெற மக்கள்தொகையில் பட்டியலத்தவா்களின் எண்ணிக்கையைஒத்து இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான 50% இடஒதுக்கீட்டிலும், பட்டியலினபெண்களுக்கான இடஒதுக்கீடு அவா்கள் எண்ணிக்கையை ஒத்துவழங்கப்படுகிறது. இதன்மூலம், பட்டியலினவகுப்பை சோ்ந்த பெண்கள் தோ்தலில் போட்டியிட மூன்றுதளங்களில் வாய்ப்பு உள்ளது. 1.தனிஇடஒதுக்கீடு,2.பொது பெண்கள்இடஒதுக்கீடு,3.பொது தொகுதி.

ஐக்கிய நாடுகளின் இனப்பாகுபாடுகளை ஒழிப்பதற்கான ஒப்பந்தத்தில் (Convention against Racial Discrimination – CERD) “தொழில்மற்றும் வம்சாவளியைக் கொண்டு மனிதா்களுடையே பாகுபாடு ஏற்படுத்துவதை நீக்குவதற்கான கோட்பாடுகளும், வழிகாட்டுதல்களும் (UN Guidelines on Discrimination based Work and Descent -2009)வழங்கப்பட்டுள்ளது.

சாதிரீதியிலான பாகுபாடு என்பது மிகமோசமான மனித உரிமைமீறல் மட்டுமல்லாது வளா்ச்சி இலக்குகளை அடைவதில் மிகப்பெரும் தடையாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிபடையாக தெரியக்கூடிய சாதிய பாகுபாடுகள் வலுவான கொள்கைகள் சட்டதிட்டங்களால் முறையாக களையப்படாவிட்டால் அவை மனிதவளா்ச்சியிலும், மனிதநேய திட்டங்களிலிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தும் எனக்கூறப்பட்டுள்ளது. வறுமை, சமூகஒடுக்குமுறையுடன் சாதியப்பாகுபாடு நேரடிதொடா்பு கொண்டுள்ளது. குறிப்பாக, ஒடுக்கப்பட்ட சமூகங்களில் வாழும் பெண்கள் சமூக, பொருளாதாரத்தளங்களில் மிகவும் பின்தங்கியுள்ளனா். அவா்கள், பிறசாதிஆண்கள், பெண்கள் கடைபிடிக்கும் சாதியபாகுபாடுகள், ஒடுக்குமுறைகள், குடும்பங்களில் நிலவும் பெண்ணடிமைத்தனம் என பல்முனைத்தாக்குதலுக்கு ஆளாகின்றனா். கல்வியிலும், பொருளாதாரவளா்ச்சியிலும், பிறசமூகங்களைக்காட்டிலும் மிகவும் பின்தங்கியுள்ளனா்.

பட்டியலினவகுப்பை சோ்ந்த பலபெண்கள் தோ்தலில் போட்டியிடுவதற்கு சாதிரீதியிலான பல தடைகளை சந்தித்து வருவதை பல ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. தோ்ந்தெடுக்கப்பட்ட பிறகும், அவா்களால் சுதந்திரமாக செயல்பட இயலாமல் சாதியசக்திகள் செயல்படுவதும் அவ்வப்போது ஊடகங்களில் வெளிப்பட்டுவருகிறது.

இன்றுவரை இடஒதுக்கீடு தொகுதிகளில் மட்டுமே பட்டியலினபிரதிநிதிகள் வெல்லமுடிகிறது. அங்கும், உயா்சாதி இந்துக்களின் கட்டுப்பாட்டிலேயே அவா்கள் செயல்படும் வண்ணம் சமூகக்கட்டமைப்பு அமைந்துள்ளது.

பல உள்ளாட்சிப்பிரதிநிதிகள் ஊராட்சி அலுவலக இருக்கையில் பிற பிரதிநிதிகளுக்கு சமமாக அமா்வது தடுக்கப்படுவது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பத்தை சோ்ந்த பிரதிநிதிகள் உள்ளாட்சிகளில் சுதந்திரமாக செயல்படமுடியாமல் ஆதிக்கசக்திகளின் கட்டுப்பாட்டில் பினாமிகளாக செயல்படுவது உள்ளாட்சி ஆவணங்கள் பராமரிப்பு,அதிகாரிகளுடனான தகவல் தொடா்புகள், ஆகியவற்றில் சாதியசக்திகளின் குறுக்கீடு என பல சவால்களை சந்தித்துவருகின்றனா்.

**பட்டியலினமக்கள் பிரதிநிதிகள் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகள் வருமாறு:**

- ஒவ்வொரு கிராமஅமைப்பும் பட்டியலினா்களுக்கான தனிகுடியிருப்பைக் கொண்டுள்ளது. பெரும்பாலான கிராமங்களில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பட்டியலினக்குடியிருப்பிலிருந்து

பிற உயர்சாதி இந்துக்கள் உள்ள குடியிருப்புகள்(ஊர்த்தெரு) அனுமதியின்றி நுழைய இயலாது.

- பட்டியலினமக்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள கிராம ஊராட்சிகளில் பட்டியலின பிரதிநிதிகள் சுதந்திரமாக தங்கள் ஊராட்சிக்கடமைகளை நிறைவேற்ற இயலாததன்மை நிலவுகிறது.
- வாழ்வாதாரத்திற்காக பிறசாதி இந்துக்களை சார்ந்து வாழும் பட்டியலின பிரதிநிதிகள் தங்கள் எஜமானர்களின் அனுமதியின்றி செயல்படமுடியாது.
- உள்ளாட்சித்தலைவர் பட்டியலினவகுப்பை சேர்ந்தவராகவும், துணைத்தலைவர் / உள்ளாட்சி உதவியாளர் உயர்சாதியினை சேர்ந்தவராகவும் இருக்கும்பட்சத்தில் இணைந்து செயல்படுவதில் சாதிரீதியிலான தடங்கல்கள் ஏற்படுகிறது.
- பட்டியலினபிரதிநிதி பெண்ணாக இருக்கும்பட்சத்தில், அவருக்கு அரசியல் அங்கீகாரம் இருந்தும் சமூகரீதியிலான அங்கீகாரம் அளிக்கப்படுவதில்லை. அவர் பிறஇனமக்கள் பிரதிநிதிகளுடன் சரிக்குசமமாக விவாதம் செய்யும்போது தவறான பேச்சுக்கும் சாதிரீதியிலான ஏளனப்பேச்சுகளுக்கும் ஆளாக்கபடுகின்றனர். பலநேரங்களில் உயிருக்கு அச்சுறுத்தலான சம்பவங்களும் நிகழ்ந்துவிடுகின்றது.
- இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பட்டியலினதலைவர்களுக்கு அரசு திட்டங்களைப்பெறுவதில் எந்த முன்னுரிமையும் இல்லை. மேலும், அவர்கள் குடியிருப்புகளுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளுக்கும் அவரால் முன்னுரிமை வழங்க இயலாது. அவர் பொதுவான அனைத்துதரப்பினருக்குமான தலைவரானதால் கிராமத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ள மக்கள் பிரிவினருக்கே முன்னுரிமை வழங்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.
- கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள பிரதிநிதிகள் தங்கள் உள்ளாட்சி அதிகாரத்தை செயல்படுத்த ஆதரவின்றி உள்ளனர்.
- உள்ளாட்சிகளில் செயல்பட ஊக்கமும், செயல்திறனும் உள்ள பிரதிநிதிகள் அதிக அளவில் அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களை சந்திக்கின்றனர். ஏனெனில், இவர்கள் சாதியக்கட்டுப்பாட்டிற்கு அடங்க மறுப்பதால் கலகம் செய்பவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களது நியாமான கோரிக்கைகள் புறந்தள்ளப்படுகின்றன.
- தகவல்தொழில்நுட்பவாய்ப்புகள், பிற ஊராட்சிபிரதிநிதிகளுடனான தொடர்பு, அதிகாரிகள், அரசுத்துறைகளை அணுகுதல் ஆகிய செயல்பாடுகளில் அனுபவமின்மை ஆதிக்கசாதிகளை சார்ந்து செயல்படும் தன்மையை தக்கவைக்கிறது.
- பட்டியலின பிரதிநிதிகள் அதிகம் சந்திக்கும் பிரச்சனை நிலத்தகராறுகள், நிலமற்ற மக்களுக்காக நிலம் வழங்க முயற்சி மேற்கொள்ளும்போதும் நிலசீர்திருத்தம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போதும் வன்முறையான சூழலை அவர்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.
- கல்வி, சுகாதாரம், பொதுபணித்துறை என பலகுறைகளை அணுகுவதற்கான தகவல்திறன் வாய்ப்புகள் மிக அரிதாகவே பட்டியலின பிரதிநிதிகளுக்குவாய்கிறது.
- பட்டியலின பெண்பிரதிநிதிகள் குடும்பங்களில் ஆண்களின் கட்டுப்பாட்டிற்கும், பொதுவெளியில் உயர்சாதியினர் கட்டுப்பாட்டிலும் செயல்பட நிர்பந்திக்கப்படுகின்றனர். வன்முறை, சாதியஏளனப் பேச்சுகளுக்கு அஞ்சி அவர்கள் ஊக்கமாக செயல்படுவதிலிருந்து பின் வாங்கிவிடுகின்றனர் அல்லது தங்கள் குடும்ப ஆண்களை தங்கள் சார்பாக செயல்பட அனுமதித்துவிடுகின்றனர்.

**பிரச்சனைகளுக்கான தீர்வு**

- இந்தியஅரசியல் சட்டம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச்சட்டம், குடும்பவன்முறை தடுப்புசட்டம் போன்ற சட்டங்களும், மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளும், திட்டங்களும் குறித்து பட்டியலின பிரதிநிதிகளுக்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

- பட்டியலின பிரதிநிதிகள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் அரசுத்துறைகள் உறுதுணையோடு செயல்படுத்த முடியும். இதற்கான வழிமுறைகள் குறித்த பயிற்சிகளில் அதிகம் பங்கேற்கவேண்டும்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும், இந்திய அரசியல்சட்டத்தின் அடிப்படைஉரிமைகள் குறித்த விளக்கங்கள் சுவரோட்டிகளாக இடம்பெற செய்யவேண்டும்.
- பட்டியலின ஊராட்சிப்பிரதிநிதிகள் தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அந்தந்த பகுதியில் உள்ள தன்னார்வ நிறுவனங்கள், பொதுசேவைக்குழுக்களின் உதவியை நாட வேண்டும்.
- சாதி, ஆண்/பெண் பேதமற்ற சமுதாயம் உருவாக பட்டியிலனபிரதிநிதிகள் துணிச்சலுடன் பள்ளிகள், கல்லூரிகள், கல்விநிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- ஒவ்வொரு குடியிருப்புபகுதியிலும், மக்கள்குழுக்கள், சுயஉதவிக்குழுக்களை சந்தித்து இணைந்து செயல்படுவதற்கான புதியதிட்டங்களை உருவாக்கவேண்டும்.
- ஒவ்வொரு பட்டியலின உள்ளாட்சிப்பிரதிநிதியும் உள்ளாட்சிகள் அதிகாரம், உடமைகள், துறைஅதிகாரிகளின் தொடர்புஎண்கள் கொண்ட கையேட்டினை வைத்திருக்கவேண்டும். அதனை வாசிக்கஇயலாதவர்கள், கிராமத்தில் உள்ள வாசிக்கத்தெரிந்தவர்கள் துணைகொண்டு தகவல்களை தெரிந்து வைத்திருக்கவேண்டும்.
- அச்சுறுத்தலோ, வன்முறையோ நிகழக்கூடிய சூழலில் முன்னதாக காவல்துறை மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு தகவல் தெரிவிக்கவேண்டும். ஊராட்சிகளின் ஆய்வாளர் மாவட்ட ஆட்சியர் ஆதலால் தொடர்ந்து ஊராட்சியில் உள்ள நிலையை அறிக்கையாகத் தயார்செய்து அனுப்பவேண்டும்.
- மாவட்டஅளவில் உள்ளவர்கள் கொடுமைதடுப்புகுழு பற்றி அறிந்துவைத்திருக்க வேண்டும்.
- பட்டியலினமக்களுக்கான கல்வி, நிலம், வாழ்வாதாரத்திட்டங்கள், அரசுவேலை வாய்ப்புகள், இடஓதுக்கீடு வாய்ப்புகள் பற்றிய முழுமையான புரிதல்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- வட்டாரஅளவிலும், மாவட்டஅளவிலும். பிறபட்டியலினபிரதிநிதிகளுடன் நல்ல நட்பினையும், தகவல்பரிமாற்றத்தையும், ஆதரவுதிரட்டலையும் முயற்சிக்கவேண்டும். வட்டார, மாவட்டஅளவில் தன்னார்வநிறுவனங்கள் துணையோடு பட்டியலின ஊராட்சிப்பிரதிநிகளின் கூட்டமைப்புகள் உருவாக்கலாம்.
- பிற இனமக்கள் வாழும் பகுதியில் உள்ள கல்வியாளர்கள், அரசு அதிகாரிகள், தனியார்துறை ஊழியர்கள், முற்போக்கு பண்புள்ள இளைஞர்களுடன் தொடர்பில் இருந்து தகவல்கள், கருத்துக்கள் பரிமாறி ஆதரவு திரட்டலாம்.

**செயற்பாடு (15 நிமிடங்கள்)**

பங்கேற்பாளர்களிடம், அவர்களால் தேர்தெடுக்கப்பட்ட பட்டியலின / பழங்குடியின பிரதிநிதிகளின் செயல்பாடு குறித்து கலந்துரையாடலாம். அவர்கள் சந்திக்கும் சவால்கள் பற்றியும் அதனைத்தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் விளக்கச்சொல்லாம். அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு வெற்றி கண்டு வரும் பட்டியலின பெண் தலைவர்களை/ பிரதிநிதிகளை பங்கேற்பாளர்கிடையே பேச அழைக்கலாம்.

## அத்தியாயம் 3 :

## சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்களும், தலைமையையும் உருவாக்குதல்

### அமர்வு 9 : சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்களும்,தலைமையும்: அறிமுகம்.

**நோக்கம்:**தன்னலமில்லாமல், சமூகத்தில் அனைவரின் நலனுக்காகவும், நியாயங்களுக்காகவும், செயல்படும் தன்மை கொண்ட குடிமக்கள், அவர்களுக்கான தலைமை என்றால்என்ன என்று அறிதல்.

சமூகநியாங்களை உணரும் திறன்கொண்ட குடிமக்கள் மற்றும் தலைமை உருவாக்குவது என்பது, தனிநபர் அல்லது பலரின் கூட்டுசெயல்பாடுகளில் சமூகவிழிப்புணர்வு, பொறுப்பு மற்றும் நெறியுடன்கூடிய செயல் ஆகிய கோட்பாடுகளைக் கொண்டதாகும். இந்தகருத்தாக்கங்கள், சமூகப்பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அதனை சரிசெய்வதற்கு அவசியமானது. மேலும், பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் தன்மையுடன் சமூகம் மேம்படவும் இவை முக்கியமாகும்.

சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்கள் பின்வரும் தன்மைகளைக்கொண்டிருப்பார்கள்.

1. **விழிப்புணர்வுடன் செயல்படும்தன்மை:** சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்கள், அவர்கள்சார்ந்த சமுதாயம் மற்றும் உலகசமுதாயங்களின் சமூக, பொருளாதார, அரசியல்பிரச்சனைகள் பலவற்றைப்பற்றி அறிந்திருப்பார்கள். அப்பிரச்சனைகளில் உள்ள சிக்கல்கள் மற்றும் நுணுக்கங்களைப்பற்றி அறிவதிலும்,அதனை சரிசெய்வதிலும் ஊக்கமாக செயல்புரிவார்கள்.
2. **பொறுப்புடன் செயல்படும்தன்மை :** அவர்களது சமூகத்தின் நலனுக்கான பொறுப்புகளை உணர்வதோடு பிற சமூககுடிமக்களின் நலனுக்கும் பொறுப்பெடுப்பார்கள். சமூகநீதி, சமத்துவம், மனிதஉரிமை உள்ளிட்ட பண்புகளுக்கு மதிப்பளிப்பார்கள்.
3. **அனைவரையும்உள்ளடக்கும்தன்மை :**சமூகநியாங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்கள், வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர்களாகவும், பல்வேறுமொழி, பண்பாடு, நிறம்,சமயம் மற்றும் பிறபிண்ணனி கொண்டவர்களை மதிப்பதோடு, போற்றவும் செய்வார்கள். எந்தபாகுபாடுகள் தோன்றினாலும் அதனை உடனே களையமுற்படுவார்கள்.
4. **சமுதாய ஈடுபாடு :** அவர்கள், சமூகப்பணிகளில் தன்னார்வலர்களாக இருப்பதோடு, உள்ளூர் அளவில் நேர்மறையான விளைவுகள் ஏற்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவார்கள். அவர்கள் கடைபிடிக்கும் நற்பண்புகள் கொண்டோருடன் இணைந்து செயல்படுவார்கள்.
5. **குடிமைப்பணிகளில் பங்கேற்றல்:** ஜனநாயக செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள். குறிப்பாக, தேர்தலில் வாக்களித்தல் மற்றும் அவர்களது சமூகப்பண்புகளை பிரதிபலிக்கும் கொள்கைகளுக்கு ஆதரவுதிரட்டுவதல் ஆகியபணிகளைச் செய்வார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கும் தலைவர்களையும் பதில் சொல்லும் பொறுப்புக்கு உட்படுத்துவார்கள்.

**“சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட தலைமை”**

1. **அறநெறியுடன் கூடிய தலைமைத்துவம்** : ஒழுக்கம் மற்றும் அறநெறிகளைக் கண்டிப்புடன் கடைபிடிப்பவர்களாக இருப்பர். நீதி, நியாயம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கோட்பாடுகளால் வழிநடத்தப்பட்டு, பரந்த சமூகநலனை கருத்தில் கொண்டு முடிவுகள் எடுப்பவர்களாக இருப்பார்கள்.
2. **பிறர்மீது இரக்கமும் கருணையும் கொண்டதன்மை** : அவர்கள் தலைமை தாங்கும் குடிமக்கள் மீது மிகுந்தஇரக்கமும், கருணையும் கொண்டவர்களாக இருப்பர். அவர்கள்

சமுதாயத்தின் தேவைகள், கருத்துகளுக்கு மதிப்பளித்து அதனை செயல்படுத்த முனைவர்.

3. **சமூகப்பொறுப்பு** : சமூகப்பிரச்சனைகளைத் தீர்ப்பதில் இத்தலைவர்கள் முன்நிற்பர்.அனைவருக்கும் நன்மைபயக்கும். நேர்மறையான மாற்றம் மற்றும் சமூக நீதிக்காக அவர்களது தலைமை பதவியை பயன்படுத்துவார்கள்.
4. **பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கும் தன்மை:** பன்முகத்தன்மை மற்றும் அனைவரும் பங்கேற்க்கும்சூழலை உருவாக்குவார்கள். அவர்கள், அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்குவதோடு, பல்வேறு பின்னனி கொண்டமக்களுக்கு பொதுகாரியங்களில் ஈடுபட உதவுவார்கள்.
5. **வெளிப்படைத்தன்மையும், பதில்சொல்லும் பொறுப்பும்** : அவர்கள் எடுக்கும்முடிவுகளில் வெளிப்படைத்தன்மை இருக்கும். மற்றவர் கருத்துக்கள், விமர்சனங்களை திறந்தமனதுடன் கேட்டுக்கொள்வார்கள். அவர்கள் செயலுக்கு பொறுப்பேற்பதோடு, தவறுகளையும் ஏற்றுக்கொள்வார்கள்.

சுருக்கமாக,

சமூகநியாயங்களை உணரும்திறன் கொண்ட குடிமக்கள் மற்றும் தலைமை என்பது, மனிதசமுதாயம் சந்திக்கும்பிரச்சனைகளை விழிப்புணர்வுடன் புரிந்துகையாள்வார்கள். இரக்கம், பொறுப்பு, அனைவரையும் உள்ளடக்கியதன்மை ஆகிய அறநெறிகளுடன் ஒரு நல்ல குடிமக்களாக அல்லது தலைவர்களாக இருப்பார்கள். ஒரு நீதியுள்ள, சமத்துவமான சமூகம் உருவாக வேண்டுமானால் இந்தகருத்தாக்கங்களைக் கொண்டிருப்பது அவசியம்.

பின்வரும்தாளினை பங்கேற்பாளர்களுக்கு அளித்து 1-10க்குள் தங்களைத்தாங்களே மதிப்பிடச்செய்ய வேண்டும். 10 என்றால் அந்தப்பண்பு அவர்களிடம் முழுமையாக உள்ளது. 1 என்றால் அந்தப்பணியினை இனிதான் வளர்த்தெடுக்க வேண்டும். இடையில் ஏதோ ஒரு எண் என்றால், அவர்களிடம் அந்த பண்பு உள்ளது, இன்னும் முன்னேறிச்செல்ல வேண்டியுள்ளதா என அறியலாம்.

| குடிமக்கள் பண்பு | மதிப்பெண்(1லிருந்து 10க்குள்) | தலைமைத்துவபண்பு | மதிப்பெண் (1லிருந்து 10க்குள்) |
|---|---|---|---|
| விழிப்புணர்வுடன் செயல்படும் தன்மை | | அறநெறியுடன் கூடிய தலைமைத்துவம் | |
| பொறுப்புடன் செயல்படும் தன்மை | | பிறர்மீது இரக்கமும் கருணையும் கொண்ட தன்மை | |
| அனைவரையும் உள்ளடக்கும்தன்மை | | பன்முகத்தனமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் தன்மை | |
| குடிமைப்பணிகளில் பங்கேற்றல். | | வெளிப்படைத்தன்மையும், பதில் சொல்லும் பொறுப்பும். | |

## அமர்வு 10 : மனிதஉரிமை விழிப்புணர்வே, குடிமை சமூகசெயல்பாட்டிற்கான அடிப்படை

**நோக்கம்** : சமூகத்தில் மனிதஉரிமைகள் பற்றிய விழிப்புணர்வின் அவசியம் குறித்தும், சமூகசெயல்பாடுகளில் மனிதஉரிமைகளை நிலைபெறச்செய்வதற்கான நெறிமுறைகள் குறித்தும்விளக்குதல்.

**மனிதஇயல்பும், மனிதஉரிமைகளும் :**

நாம் எந்தச் செயலைச் செய்தாலும் நமது விருப்பத்தின்படியே செய்கிறோம். விருப்பமில்லாமல் ஒரு செயலைச் செய்யும்போது கூட அது நமக்கு வெற்றியை தந்தால் அதனையே விருப்பமாக மாற்றிக் கொள்ளவும் செய்வோம். சிலர் வெளிச்சூழலின் காரணமாகவும் செயல்கள் செய்ய வற்புறுத்தப்படுவர். அந்த சூழல் ஒருவர் மற்றொருவரை முற்றிலும் அடிமைப்படுத்துவதாக இருக்கும். இந்த அடிமைச்சூழல் மனிதஉரிமை மீறலாகும். மனித உரிமை பற்றிய விழிப்புணர்வு கொண்டவர்கள் தானும் அடிமையாக மாட்டார்கள், மற்றவரையும் அடிமைப்படுத்தமாட்டார்கள். வேறு எவரும் அடிமைப்பட்டிருப்பதைக் கண்டு பொறுத்திருக்கவும் மாட்டார்கள்.

அப்படியானால், மனிதஉரிமை என்பது சுதந்திரமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையாகும். இந்த மனித உரிமை மனிதராக பிறந்ததினாலேயே ஒருவருக்கு இயல்பாக உள்ள பிறப்புரிமை. அவர் இந்தப் புவியின் எந்தப் பகுதியில், நாட்டில், ஊரில் பிறந்திருந்தாலும் சுதந்திரமனிதராக வாழ உரிமையுண்டு.

பூமியில் உள்ள தாவரங்கள், விலங்கினங்களுக்கு தனித்தனியாக பிறப்பினங்கள் உண்டு(குடும்பம்). உதாரணம், படரும் கொடியினம் வேறு, ஆழமாக வேரூன்றி வளரும் மரத்தின் குடும்பமும் வேறு. விலங்கினங்களில் ஊர்வன, பறப்பன, வேட்டையாடும் விலங்குகள் எனப்பல வகையினங்கள் உண்டு.

மனிதஇனம் ஒன்றுதான் ஆண், பெண் என்ற இரண்டு இனத்தினை மட்டும் கொண்டதாகும். இங்கு தான் குடும்பம் என்பதையும், இனம் என்பதையும் மனிதரே தீர்மானித்துக் கொள்ளவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மனிதருக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி மனிதராலேயே உருவாக்கப்பட்டது தான் குடும்பம், சாதி, சமூகம், நாடு, இனம், மதம், மொழி, பிராந்தியம், கண்டம் போன்ற எல்லைகளெல்லாம். இவையனத்தும் மனிதஉரிமைகளுக்கு எதிராக இருந்தால் அவை தகர்க்கப்படவேண்டும் அல்லது மாற்றியமைக்கப்படவேண்டும். இதுவும் மனிதர்களாலேயே நிகழக்கூடியது. இப்படியாக மனிதஇனம் அதிக அதிகாரங்களையும், திறன்களையும் கொண்டதாக உள்ளது.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இந்த அதிகாரமும், திறன்களும் இயல்பிலேயே உள்ளது. இதனை உணர்ந்து செயல்படுத்தும் துணிச்சல்தான் அவசியம். இந்த துணிச்சல் தனிமனித வாழ்க்கையை சுதந்திரமாக ஆக்கிக்கொள்வதற்கும் பயன்படலாம். தன்னோடு சேர்ந்தவர்கள், தன் கிராமம், நகரம், நாடு, உலகம் என எல்லைகடந்து மனிதர்களின் வாழ்க்கையை சுதந்திரமாக ஆக்குவதற்கும் பயன்படலாம்.

**முதலில் மனிதஉரிமைகளை உணர்வதற்கு அடிப்படையாக சிலநெறிகள் உள்ளன. அவை என்னவென்று பார்ப்போம்.**

1. வறுமையின்பிடியில் சிக்காமல் நம்மைக் காத்துக்கொள்ளுதல்(பசி, பட்டினி. பஞ்சத்திற்கு ஆட்படாமல் இருத்தல்)
2. பிறர்நலன் நாடுதல்
3. நல்ல எண்ணங்களை, விருப்பங்களை வளர்த்துக் கொள்ளுதல்
4. குழுவாக இணைந்து செயல்படுதல்
5. நமக்கு எதிரிகள் என நினைப்பவரின் செயலை வெறுத்தாலும், நபரை வெறுக்காதிருத்தல்.
6. நம்மையும், பிறரையும் துன்பத்தில் ஆழ்த்தும் செயலை செய்யத் துணியாதிருத்தல்.
7. மனிதரின் ஒவ்வொரு செயலும் பிறருடன் தொடர்புடையது என்று அறிந்திருத்தல்.
8. ஓவ்வொருகணமும் புதிதாகக் கற்றுக் கொண்டிருக்கிறோம் என்று உணர்ந்திருத்தல்.

மேற்சொன்ன எட்டு நெறிகளும் நாம் தனியான உயிர்கள் அல்ல. நம் வாழ்க்கை பிறருடனும், புறச்சூழலுடனும் இணைந்தே உள்ளது என்பதைக் காட்டும். அதே சமயம், ஒவ்வொரு நெறியும் நம் கட்டுப்பாட்டில் இயங்குபவை என்பதால் தனி ஒருவரால் கடைபிடிக்கவேண்டியவையாகவையாகவும் இருப்பதையும் காணலாம். மேலோட்டமாகப் பார்த்தால்

நாம் எல்லோரும் இந்த நெறிப்படிதானே நடக்கிறோம் என்று தோன்றும். ஆனால் நம் ஒவ்வொரு செயலையும் இதனுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், நாம் எங்கே தவறு செய்கிறோம் என்பது புரியும்.

நாம் முன்பே பார்த்தபடி, நாம் தனி மனித வாழ்க்கையில், நமது குடும்பத்தில், நாம் சார்ந்த சமூகத்தில் மனித உரிமைகள் நிலவுகின்றதா? உதாரணம், நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, பெறும் கல்வி, பிற தேவைகள், நமது குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கின்றதா. அப்படியில்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன? அவற்றைமாற்ற நாம் என்ன செய்யமுடியும் என்று சிந்திப்பதே மனித உரிமையை உணர்வதற்கான முதல் கட்டமாக இருக்கும். அனைவருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டும் என்று எண்ணுவதும், விரும்புவதுமே நம்மை மனித உரிமையை அடைவதற்கான செயலைச் செய்ய உந்துதலாக அமையும். இதே போன்று உடல் உழைப்பும் நமது குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் சமமாகச் செலுத்துகிறார்களா? நமது குடும்ப பராமரிப்பில் அம்மாவின் பங்கு என்ன, அப்பா என்ன செய்கிறார், சகோதர, சகோதரிகள், நாம் என ஒவ்வொருவரின் உழைப்பு எந்த விதத்தில் அளிக்கப்படுகிறது. இதில் எவரது உழைப்பையும் அதிகமாக சுரண்டுகிறோமா? என்று யோசித்துப் பார்த்து சரிசெய்வதும் மனித உரிமை விழிப்புணர்வின் முக்கிய செயலாக இருக்கும்.

இதனை அடுத்து நமது அக்கம்பக்க அளவில் உள்ள என்னைப் போன்றவர்கள், உடல் ஊனமுற்றோர், மன நலம் குன்றியோர் என மனதராக உள்ள அனைவரும் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ்கிறார்களா?அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? அதற்கான வாய்ப்புகள் தான் இருக்கிறதா என்று சிந்திப்பதும் மனித உரிமையை தனி மனித சூழலில்இருந்து சமூக தளத்திற்கு இட்டுச்செல்வதாக இருக்கும். இங்கும் உரிமைகள் மீறப்பட்டால் அதற்கு எதிர்ப்போ அல்லது அதனை சரி செய்யும்முயற்சியோ நிகழும்போது மனித உரிமை விழிப்புணர்வு நடைமுறைக்கு வரும்.

இப்படியாக மனித உரிமையை, அதாவது சுதந்திரமான, அடிமைத்தனமற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு எந்தவிதமான தடைகளையும் நாம் எதிர்ப்பின்றி சரி செய்ய முடிந்தால் நாம் வெற்றிகரமான மனிதராக வாழ்க்கையை வாழ்வோம். ஆனால் நடைமுறையில் இந்த மனிதஉரிமைப் பாதுகாவல் பணி என்பது ஒவ்வொரு மனிதரும் உணர்ந்தால்தான் சாத்தியம். அப்படியில்லாதபோது, விழிப்புணர்வு பெற்ற சிலர், விழிப்புணர்வில்லாத பலருக்கு வழிகாட்டியாக இருந்து செயல்படுத்தமுடியும். இப்படி வழிகாட்டியாக செயல்படும்போது நமக்கு ஏற்படும் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி காண்பதே அரசியல் தந்திரம் என்பார்கள். இங்கு அரசியல் என்பது மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள ஒன்றாகும். மனித உரிமைக்கான அரசியலே, உன்மையான மக்கள் அரசியல். மற்ற அனைத்தும் சுயநலத்திற்கானதும்,மனிதருக்கும், இயற்க்கைக்கும் மாறானதாகும்.

**உலவகளாவிய அளவில் மனித உரிமை :**

மனித உரிமைகள் என்பது காலம் தொட்டு மனித இனத்தினால் உருவாக்கப்பட்டு செயல்படுத்துப்பட்டு வருபவையே. நாகரிகம் வளர வளர மொழி, இனம், நாடு, அரசாங்கங்கள், ஆட்சி என உருவானபிறகு நாடுகளுக்குள் நடந்த போர்களில் மனிதர்களாலேயே மனிதர்கள் அதிக அளவில் கொல்லப்படும் நிலை உருவானது. அப்போதுதான் மனிதஉரிமை என்பது ஒரு உலகளாவிய நெறியாக, ஆக்கப்பட வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 1948ல் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச சட்டமாகவும் ஆக்கப்பட்டது. இந்தியாவிலும் பிரிட்டீசாரிடமிருந்து சுதந்திரம் பெற்றபிறகு இந்திய அரசியல்சட்டம் மூலம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளபடி தான் அரசியல் கட்சிகள் மனிதஉரிமைக்கான அரசியலை நிகழ்த்த வேண்டும். ஆனால் இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி மட்டுமே நடக்கவில்லை. நமது நாட்டில் சட்டத்தின் ஆட்சியை விட சமூகத்தின் ஆட்சியே மேலோங்கி இருக்கிறது. இங்கு சமூகத்தின் ஆட்சி என்பது, அந்தந்த பகுதி மக்கள், அங்குள்ள சமூகங்கள், அவர்கள் பண்பாடு, கலாச்சாரம், நிலவுடைமை, பொது வளங்கள் மீது மக்களுக்கு இருக்கும்

அதிகாரம் ஆகியவற்றைப் பொறுத்து நிகழ்கிறது. நம்முடைய சமூகம்,கட்டமைப்பிலேயே சமமாக இல்லை. ஆகவே தான் அரசியலும் சமத்துவமாக இல்லை.மனிதா் அனைவரும் சமம். அனைவரும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமென்றால் மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமத்துவத்திற்கான அரசியல் நடக்கவேண்டும். இதற்கு அடிப்படை மனித உரிமையை அனைத்து தரப்பினரும் சரியாக புரிந்திருக்கிறார்களா, அதில் விழிப்புணா்வோடு இருக்கிறார்களா என்பதைப் பொறுத்தே அதற்கான அரசியல் நிகழும். இல்லையென்றால், பலவீனமான நிலையில் உள்ள மான்கள் கூட்டத்தில் சிங்கமோ, ஒநாயோ புகுந்து அவற்றை வேட்டையாடுவது போன்று ஆகிவிடும் இந்த அரசியல்.

மனிதா்களுக்குள் நிகழ வேண்டிய அரசியல் மாண்புடனும், மனிதா்களையும் இயற்கையையும் பாதுகாத்து மனிதத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்காக நிகழவேண்டும். அழிப்பதற்காக அல்ல.

மேற்சொன்ன அடிப்படைப் புரிதல் எந்த ஒரு தனி நபருக்கும், அமைப்பிற்கும் அவசியமான ஒன்று.

செயற்பாடு

பங்கேற்பாளா்களைக் 3-4 குழுக்களாகப்பிரிக்கவும். ஒவ்வொரு குழுவும் தங்கள் பகுதியில் நிகழும் மனிதஉரிமை மீறல் ஒன்றைக்கண்டறிந்து அதனை தங்களுக்குள் விவாதிக்க வேண்டும். அந்த உரிமைமீறல், ஒரு தனி நபா் அல்லது குடும்பம் அல்லது ஊா் அல்லது சுற்றுச்சூழல் அல்லது உலகளாவிய (இஸ்ரேல் - பாலஸ்தீனம் போா் போன்ற) உரிமைமீறலாக இருக்கலாம்.

ஒவ்வொருகுழுவும் தாங்கள் எடுத்துக்கொண்ட மனிதஉரிமைமீறல் குறித்து தங்களுக்குள் கலந்துரையாடி, அந்தப்பிரச்சனையில் எவ்வாறான அறநெறிகள் மீறப்பட்டுள்ளன அதனைக்களைவதற்கான வழிகள் என்னென்ன என்று விவாதிக்கலாம். விவாதித்த கருத்துக்களை அனைத்து பங்கேற்பாளா்களிடம் பகிா்ந்து கொள்ளலாம்.

## அமா்வு 11 : சமூகத்தின் கூட்டுஉரிமைகள் குறித்த விழிப்புணா்வும், அதனை நிலை நிறுத்துவதற்கான தலைமைத்துவமும்

**நோக்கம்** : கூட்டுஉரிமைகள் என்றால் என்ன?



அதனை நடைமுறைப்படுத்த எவ்வகையான தலைமைத்திறன்கள் வேண்டும் என்பது குறித்தபுரிதல் உண்டாக்குவது.

கூட்டுஉரிமை என்பது தனிநபா் உரிமையிலிருந்து வேறுபட்டது. இதுபுவியியல் எல்லையினைச்சாா்ந்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயம் சாா்ந்தோ இயங்குவது, சுற்றுக்சூழலையும் காடு, மலை, கடல், இயற்கை வள ஆதாரங்களை இந்த தலைமுறைக்கும், அடுத்தடுத்ததலைமுறைக்கும் காப்பது, கூட்டு உரிமைகளைக்காப்பதில் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கு உண்டு. சமூகத்தில் பல பிரச்சனைகளைக் கையாண்ட அனுபவம் மிக்கவா்களால் கூட்டுஉரிமைகளை எளிதாகப்பிரித்தரிய முடியும்.

கூட்டு உரிமையின் சில முக்கியவகைகள்

பண்பாடு மற்றும் சமயஉரிமைகள்:

எந்தவொரு சமுதாயமும் பிற சமுதாயத்தை புண்படுத்தாமல் தமது பண்பாட்டு சடங்குகள், சமயநம்பிக்கைகளை மேற்கொள்ள உரிமை உள்ளது.

நிலம் மற்றும் பொதுவான ஆதாரங்கள் மீதான உரிமை : பாரம்பரியமான இனக்குழுக்கள் அவர்கள் வாழும் காடு, கடல்,நிலப்பகுதியில் உள்ள வளங்கள் மீது பிரத்தியோக உரிமை பெற்றிருப்பார்கள். அவர்களுக்கு அந்தநிலப் பகுதியின்மீது சொந்தம் கொண்டாட உரிமையும் சுற்றுச்சூழலையும், அங்குள்ள உயிர்ச்சூழலையும் பேணிப்பாதுகாக்கும் உரிமையும் உண்டு.

சுயநிர்ணய உரிமை:

ஒவ்வொரு புவியியல் பரப்பிலும் வாழும் மக்கள் தங்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூட்டாக இணைந்து தீர்மானிக்கவும். அங்குள்ள வளங்களை சுரண்டலிலிருந்து பாதுகாத்து அடுத்ததலைமுறையினருக்கு கடத்துவதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து செயல்பட உரிமை உள்ளது. ஒத்ததன்மையுடன் பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல் நடவடிக்கைகள் கொண்ட சமுதாயங்களால் மட்டுமே சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்த இயலும்.

கல்விஉரிமை : எந்தஒரு சமுதாயமும், தனது முன்னேற்றத்திற்கான கல்வி பெறுவது அவர்களது அடிப்படை உரிமை. அதற்கான சமுதாயப்பள்ளிகள், படிப்பகங்கள், குழுக்கள், சங்கங்கள் அமைத்து செயல்பட உரிமை உள்ளது. இதன்மூலம், அவர்களின் வரலாறு, சிறப்புத்திறன்கள், பாரம்பரிய தொழில்நுணுக்கங்கள் ஆகியவற்றை வளப்படுத்தி மேம்படுத்திக் கொள்ளமுடியும்.

சிறுபான்மையினா் உரிமைகள்: சமூகத்தில், இனம், மதம், மொழி, பாலினம்(திருநங்கை / திருநம்பி) சாதி மாற்றுத்திறனாளிகள் ஆகிய அடையாளங்களால் வேற்றுமை உள்ள மக்களுக்கான சிறப்பு உரிமைகள் உண்டு. அவர்கள் தங்களது சமுதாயநிறுவனங்களை அமைத்துக்கொள்ளவும், பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து கடைபிடிக்கப்படும் பாகுபாடுகள், ஒடுக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படவும் உரிமையுண்டு.

சுற்றுச்சூழல்உரிமைகள் : சுற்றுச்சூழலைப்பாதுகாக்க, வளங்களை மேம்படுத்த கூட்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த உரிமை உணடு. சமுதாயத்தில் உள்ள சிறார்களை ஈடுபடுத்தி சூழலியல் பணிகளை மேற்கொள்ளவும் சமூகங்களுக்கு கூட்டு உரிமையுள்ளது.

சமுதாயக்காவல் : எந்தவொரு சமூகமும் வெளிப்புறத்தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சமுதாயக்காவல் செய்து கொள்ள கூட்டுஉரிமையுண்டு.

சமூக, பொருளாதாரமுன்னேற்றம் : எந்த ஒரு சமூகமும் / குழுவும் தமது முன்னேற்றத்திற்கு தேவையான சமூக, பொருளாதார முன்னேற்றத்திட்டங்களைத் தீட்டி, நிதிதிரட்டி செயல்படுத்தலாம். புதியதொழில் முயற்சிகள், கூட்டுப்பண்ணைகள், சுயஉதவிக்குழுக்கள் இவற்றில் அடங்கும்.

மேற்கூறியுள்ள கூட்டுஉரிமைகள், நாட்டிற்கு நாடு, பகுதிக்கு பகுதி வேறுபடும். ஜனநாயகத்தன்மையுடன், பாகுபாடில்லாத, சுரண்டலில்லாத, அனைவரையும் உள்ளடக்கி செய்யப்படும் எந்த கூட்டுஉரிமையும் வரவேற்கப்படும்.

செயற்பாடு :

கலந்துரையாடலுக்கான ஒரு ஆய்வுக்கட்டுரை

சேதுசமுத்திரக் கப்பல் கால்வாய் திட்டம்

தமிழ்நாட்டின் தென்பகுதியில் பாக்ஜலசந்திக்கும், மன்னார்வளைகுடாவிற்கும் இடைப்பட்ட சுமார் 10,500 கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட கடற்கரைப்பகுதியே சேதுசமுத்திரம் எனப்படுகிறது.

இயற்ககையான மணற்திட்டுகளைக் கொண்ட இந்தப்பகுதி இந்தியாவையும், இலங்கையையும் இணைக்கும் பாலமாக உள்ளது. இங்குதான் 600 மீன்வகைகள் உள்ளன. தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 138 கடற்கரை கிராமங்களில் மீனவர்களுடைய வாழ்வாதாரம் இந்த சேதுசமுத்திரத்தை சார்ந்துள்ளது.




தமிழ்நாடு அரசு 1999ல் சேதுசமுத்திரத்தில், கப்பல் கால்வாய் அமைக்கும் திட்டத்தினை இறுதிசெய்தது. இந்தக் கால்வாய் அமைப்பதற்கு அரசு கூறிய காரணங்கள்.

சர்வதேச நாடுகளின் வணிக்கப்பல்கள் இந்தியக் கடற்கரையை சரக்கு போக்குவரத்திற்காக பயன்படுத்த முடியும். தற்போது, இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில்தான் அனைத்து கப்பல் சரக்கு போக்குவரத்தும் நடைபெறுகின்ற. இந்தியாவின் வடமேற்கில் உள்ள குஜராத்தின் கண்ட்லா துறைமுகத்திலிருந்து வடகிழக்கே மேற்குவங்கத்தில் உள்ள ஹால்டியா துறைமுகம் வரையுள்ள 13 பெருந்துறைமுகங்களும் 185 சிறிய துறைமுகங்களும் உள்ளன. சேது கப்பல் கால்வாய் அமைத்தால் இந்த துறைமுகங்களில் இருந்துவரும் சரக்கு கப்பல்கள் இலங்கையை சுற்றிவரமால் நேரடியாக இந்திய கடற்கரையைச் சுற்றிவரமுடியும் எனக்கூறப்பட்டது. இதனால் நாட்டிற்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றும் கூறப்பட்டது.

ஆனால், கப்பல்நிபுணர்கள், மீனவர்கள் கூறியது. சேதுகால்வாய் திட்டத்தால் 34,000 கனஅளவு கொண்ட கப்பல்கள் மட்டுமே கையாள முடியும். கடலின் மேல்மட்டத்திலிருந்து அடி ஆழம் வரையுள்ள பகுதியில் 10 மீட்டர் ஆழம் மட்டுமே உள்ள கப்பல்கள் மட்டுமே வரமுடியும். ஆனால், சர்வதேசசரக்கு கப்பல்கள் 60,000 கன அளவு கொள்திறன் கொண்ட கப்பல்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அவை, கொழும்பு துறைமுகத்தையே போக்குவரத்திற்கு பயன்படுத்தமுடியும். உள்நாட்டுக்கப்பல்கள் சேதுகால்வாய்க்குள் வரவேண்டுமானால், அதற்கும் சிறப்பு கட்டணங்கள் செலுத்த வேண்டும். கால்வாய் அமையவுள்ள இடம் உயிரோட்டமுள்ள கடல்பகுதி. இங்கு கால்வாய் தோண்டுவதால் ஏற்படும் மணல் அரிப்பையும், மணல் குவியலையும் தடுப்பதற்கு மணல் தோண்டும் பணி வருடந்தோறும் நடைபெற்றாக வேண்டும். ஏனெனில், இக்கால்வாயைப் பாதுகாக்க இயற்கையான மலைத்தொடர்களோ அல்லது மணற்குன்று போன்ற தடுப்புகளோ கிடையாது. செயற்கையான கான்கிரீட் தடுப்புகளுக்கான திட்டங்களும் இல்லை. 11அடி ஆழமுள்ள கடற்பகுதி 39 அடி ஆழமாக அதிகப்படுத்தப்பட வேண்டிள்ளது. நீரோட்டம் மிகுந்த பகுதியானதால்,கால்வாய் தோண்டப்பட்டாலும் அடிக்கடி மூடி கொண்டே வருகிறது. புயல் ஆபத்து மிகுந்த இந்தப்பகுதியில்தான் 1964ல் புயல்காவு கொண்ட தனுஷ்கோடியும் உள்ளது. இத்தகைய காரணங்களால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனக்கூறி மீனவர்களும், சமூகஆர்வலர்களும் சேதுகப்பல் கால்வாய்த் திட்டத்திற்க்கு கடுமையான எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

அரசியல்கட்சிகளோ, இத்திட்டத்தினை தமிழன் கண்டகனவு என்றும் ராமர் பாலம் கட்டிய

இடம் என்றும் கூறி திட்டத்திற்கு ஆதரவும் எதிர்ப்பும் தெரிவித்துவருவதோடு உண்மையில் இயற்கைக்கும், மக்களின் வாழ்வாதாரத்திற்கு இத்திட்டம் பயன்படுமா என்பது குறித்து சிந்திக்கவில்லை. இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின் தொடர்எதிர்ப்பு போராட்டத்திற்கு பிறகே திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்திலும் இத்திட்டத்திற்கு தடைவிதிக்கப்பட்டது.

குழுகலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. சேதுகப்பல் கால்வாய்த் திட்டம் யாருக்கு பலனளிக்கும், யாருக்கு பாதிப்பினை உண்டாக்கும்?
2. சேதுகப்பல் கால்வாய்த்திட்டம், தமிழக மக்களின் கூட்டுஉரிமையினை பாதிக்கிறதா, (சுற்றுச்சூழல் உரிமைகள்)
3. மீனவமக்கள் தங்களது வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்க என்ன முயற்சி எடுத்தார்கள்?
4. சேதுகால்வாய்த் திட்டம் எதனால் நிறுத்திவைக்கப்பட்டது?

## அமர்வு 12: அரசியல் உரிமைகளும், சமூகப்பங்கேற்பும்

**நோக்கம்** :அரசியல் என்றால் என்ன? அதுஎவ்வாறு நிறுவனமயமாகி அதிகாரத்துடன் செயல்படுகிறது என்ற புரிதலும், சமூகசெயல்பாட்டில் உள்ள உறுப்பினர்கள், தலைவர்கள் எவ்வாறு அரசியலில் பங்கேற்கலாம் என்பது குறித்து விவரிப்பது.

**அரசியல்- ஓர் அறிமுகம் :**

பொதுவாக அரசியல் என்பது மனித உறவுகளிடையே ஒவ்வொரு நிலையிலும் நிகழும் முடிவெடுக்கும் முறையாகும். அது கணவன்-மனைவி, பெரியவர்-சிறியவர், உயர்த்திக் கொண்ட சாதி-தாழ்த்தப்பட்ட சாதி, முதலாளி-தொழிலாளி என மனித உறவுகளிலும் உருவாக்கி வைக்கப்பட்டுள்ள அடையாளங்களுக்குள் ஆகவே, அரசியல் என்ற முடிவெடுக்கும் முறை, குடும்பம், நாம் சார்ந்துள்ள சமுதாயம், ஊர், நகரம், நாடு என பரந்து விரிந்துள்ள சமூகத்தில் ஒவ்வொரு நொடியும் நிகழ்வதாகும். இந்த அரசியல் சமூகத்தின் வாழ்க்கைப் பண்பாட்டை நிர்ணயிக்கிறது.

இங்கு நாம் பொது சமூகத்திற்கான அரசியல் என்பதைக் குறிப்பிடுகிறோம். அதன்படி, அரசியல் என்பது மக்கள் சமூகத்தின் சார்பாக முடிவெடுக்கும் முறை என்பதாகும். எனவே அது ஜனநாயக பூர்வமாக, அனைவரையும் சமமாகக் கருதி சமத்துவத்தை நிலைநாட்டுவதாக இருக்க வேண்டும். இந்த அரசியலே அரசு, அரசாங்கம், ஆட்சி என்ற இயந்திரங்களைத் தீர்மானிக்கிறது. இங்குதான் பொது மக்களின் சார்பாக அரசியல் கட்சிகள் அரசியலை நிகழ்த்தி ஆட்சியைப்பிடித்து ஆளுமை செய்கின்றன. இந்தியாவில் கடைபிடிக்கப்படும் மக்களாட்சி(ஜனநாயகம்) தத்துவத்தின்படி எந்த அரசியல் கட்சி பெரும்பான்மைவாக்குகளைப் பெறுகின்றனவோ அவையே அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்களின் ஆதரவைப் பெறுகின்றன. இந்த அரசாங்கமே, அரசு இயந்திரத்தை இயக்கும் பணியினைச் செய்கிறது.

இங்குதான் உங்களுக்கு அரசு என்றால் என்ன? அரசாங்கம் என்றால் என்று சொல்லியாக வேண்டும்.

அரசு என்பது, ஒரு புவியியல்பரப்பினைச் சார்ந்த மக்களுக்கான அரசியல், நிர்வாகம், வர்த்தகம், மக்கள் நல்வாழ்வு அனைத்து நடைமுறைகளையும் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தும் ஒரு இயந்திரமாகும். இதில் சட்டமியற்றுவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் / பாராளுமன்றமும், சட்டத்தினை நடைமுறைப்படுத்த செயல்படுத்தும் அதிகார அமைப்புத்துறைகளும், நீதி நெறியின்படி மக்கள் ஆளப்படுகிறார்களா என்று பார்த்து தீர்ப்பளிப்பதற்கான நீதித்துறையும் மூன்று முக்கியத்தூண்களாகச் செயல்படுகின்றன.

அரசாங்கம் என்பது ஒரு அரசியல் குழு தனது ஆட்சியதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கான பொதுக்கொள்கைகளை உருவாக்கி நிர்வகிக்கவும், அதன் உறுப்பினர்களின் செயல்பாடுகளை வழிநடத்தி செயல்படும் ஒரு அமைப்பு. அது மேற்சொன்ன அரசு என்பதன் ஒரு அங்கமே. அது சட்டம் இயற்றவும், அதன் செயல்பாட்டைக் கண்காணிக்கவும், நிர்வாகம் செய்யவும் ஆனது.(உதாரணம், பெரும்பான்மைவாக்குகள் பெரும் அரசியல் கட்சி ஆட்சி அமைத்து அமைச்சரவை உருவாக்கி அரசு இயந்திரத்தின் அனைத்து செயல்பாடுகளை நிர்வகிக்கும்போது அது அரசாங்கத்தின் உருபெறுகிறது)

**அரசியல் கட்சிகள்**

இதன் தத்துவார்த்த விளக்கம், மக்கள் இயக்கங்கள்/குழுக்கள் அரசாங்கஅமைப்பில் முடிவெடுக்கும் ஆளுமையில் பங்கேற்பதற்காக உருவாக்கிக் கொள்ளும் ஒரு அமைப்பு முறை. பொதுவாக மக்கள் குழுக்களோ, இயக்கங்களோ தங்களது உறுப்பினர்களின் உரிமைகளுக்காக, தேவைகளுக்காக ஒன்றிணைந்து சங்கமாவதன் மூலம் உருவாகின்றன.

அரசியல் கட்சி உருவாவதன் அடிப்படையே சமூகத்தில் உள்ள தனிநபர்கள் தங்கள் விருப்பப்படி சுதந்திரமாக ஒன்று சேர்ந்து செயல்படுவதன் மூலம் ஒரு அமைப்பு முறையை உருவாக்குவதாகும். பொதுவாக, இந்த அமைப்பின்உறுப்பினர்கள் என்பது அதன் தலைவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதும், அதன் மூலம் கட்சிக்குள் தீவிரமாக இயங்குபவர்களுக்கான பொருள் சார்ந்த நலன்களைப் பெற்றுக் கொடுப்பதையும் இலக்காகக் கொண்டிருப்பார்கள். ஆகவேதான், அரசியல் கட்சிகள் மக்கள் நலனுக்காகச் செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அவற்றின் பரந்த கொள்கைகள் அவசியமாகிறது. அந்தக் கொள்கைகள் பொது மக்கள் நலனுக்கானதாகவும், சமுதாயத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டதாகவும் இருந்ததால் வெகு மக்கள் ஆதரவு கிடைக்கும். தேர்தலில் பங்கேற்பதன் மூலம் கட்சிகளும் தங்களது கொள்கைகளை நடைமுறைப்படுத்த விழைகின்றன. சில சமயங்களில் ஆட்சி அதிகாரத்திற்காகவே முரண்பட்ட கொள்கைகள் கொண்ட பல கட்சிகள் கூட்டணியாகவும் சேருகின்றன.

இவ்வாறு உருவாகும் குழுக்களும், இயக்கங்களும் முறையான உறுப்பினர் சேர்க்கை, தலைமை, நிர்வாகம், எனப் பல விதிமுறைகளுக்கு உட்பட்டு தங்களுக்காக இயங்கும் அமைப்பினை உருவாக்கி செயல்படுகின்றன. இந்தக் குழுக்கள் / இயக்கங்கள் அரசாங்கத்தின் ஆளுகையில்பங்கேற்க தங்கள் பிரதிநிதிகளை தேர்தலில் பங்கேற்கச் செய்வதன்மூலம் ஆட்சி நிர்வாகத்தில் பங்கெடுக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றன. இந்த நடைமுறையில் பங்கேற்கத் தகுதியுள்ள இயக்கங்கள் அரசியல் கட்சிகளாகின்றன.

இந்தியாவில் எந்த ஒரு மக்கள்குழுவும் / இயக்கமும் அரசியல் கட்சியாவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். தேர்தல் ஆணையமானது, அந்த அரசியல் குழு / இயக்கம் இந்திய அரசியல் சட்டத்தின்படி,ஜனநாயகம், மதசார்பின்மை, சோசலிசம் ஆகிய கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனவா என்றும், அந்த அமைப்பு இந்தியாவின் ஒற்றுமை, இறையாண்மை, உறுதிதன்மையைப் பாதுகாக்கும் தன்மை கொண்டதா என்பதையும் பரிசீலிக்கும். அத்துடன், அந்த அமைப்பின் உறுப்பினர்சேர்க்கை, தலைமைக்கான தேர்தல் நடைமுறை, அமைப்பு விதிகள் ஆகியவற்றையும் பரிசீலித்து அரசியல் கட்சிக்கான அந்தஸ்தினை வழங்கும். இதில் அந்த அரசியல் கட்சியின் கடந்த கால அரசியல் செயல்பாடுகளின்வீச்சு, தேர்தல்களில் அடைந்த வெற்றி ஆகியவற்றைப் பொறுத்து தேசிய அல்லது பிராந்திய அரசியல் கட்சி என அங்கீகரிக்கப்படுகிறது. இத்தகைய தன்மை இல்லாத கட்சிகள் கூட அங்கீகரிக்கப்படாத, ஆனால் பதிவுபெற்ற அரசியல் கட்சி எனவும் அறிவிக்கப்படுகின்றன.

இந்தியக் குடிஉரிமையுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் தேர்தலில் நின்று அரசாங்க அமைப்பு முறையில் பங்கேற்கலாம். இருப்பினும், அரசாங்க நிர்வாகத்தை அமைக்க ஒரே அரசியல்குழுவைச் சேர்ந்த அதிகப் பிரதிநிதிகள் தேவை. ஆகவே தேர்தலில் நிற்கும் நபருக்கு

அரசியல் கட்சி என்ற ஒரு மக்கள் அமைப்பின் ஆதரவு தேவையாக உள்ளது. இதுமட்டுமல்லாமல், அரசியல் கட்சிக்கு தனியான சின்னம், வாக்காளர் பட்டியலைப் பெறவும், தேர்தல் நாடகளைத் தீர்மானிப்பதில் பங்கேற்க்கவும், அரசு உடகங்களில் பிரச்சாரங்களை விளம்பரப்படுத்தவுமான சிறப்பு சலுகைகள் உள்ளதால் அரசியல் கட்சி என்ற ஒரு அமைப்பு அவசியமாகிறது.

**இந்தியாவில் அரசியல்**

இந்தியஅரசியல் சட்டத்தில் இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அதாவது மக்களே, மக்களை ஆட்சி செய்து கொள்ளும் நாடு. இங்கு சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய கொள்கையே மக்களின் பொதுக்கொள்கை. மக்களின் சார்பாக அவர்களது தேவைகளையும், உரிமைகளையும், அது தனி மனித உரிமையாக இருந்தாலும், கூட்டு உரிமையாக இருந்தாலும், நிறைவேற்றவே இந்திய அரசாங்கமும், பல்வேறுபட்ட மொழிகளைக் கொண்ட மாநில அரசாங்கங்களும் உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்கங்களை ஆள்பவர்களை மக்களே ஒட்டு போட்டு தேர்ந்தெடுக்கும் முறையும் கொண்டுவரப்பட்டது. 18வயதிற்கு மேற்பட்ட எவரும் ஓட்டு போடத்தகுதி கொண்டவர்கள். யார் வேண்டுமானாலும் தேர்தலில் நிற்கலாம். ஆனால் யார் அதிக ஒட்டுக்கள் பெறுகிறார்களோ அவர்களே மாநில அரசிலும், மத்தியஅரசிலும் பொறுப்பேற்க முடியும். இப்படித்தான் அரசாங்கங்கள் உருவாக்கப்படுகின்றது. இப்படியாக பொறுப்பேற்பவர்களே மக்களின் சார்பாக தலைமைபொறுப்பு ஏற்கிறார்கள்.

அதிக ஒட்டு ஒரு நபர் பெறவேண்டுமானால் அவர் தனி நபராக இருப்பது மட்டும் போதாது. மக்களுக்கு சேவை செய்பவராக இருக்கவேண்டும். பொதுமக்களுக்கு அறிமுகமானவராகவும் இருக்கவேண்டும். இங்குதான் அரசியல் கட்சி என்பது ஒரு தனி நபரை பொதுமக்களின் பிரதிநிதியாக உருவாக்க உதவிபுரிகிறது. இங்கு நாம் முக்கியமாக சொல்வது என்னவென்றால், பொதுமக்களின் தேவைகளுக்காக சேவை செய்ய ஒரு தலைமை வேண்டும். அந்த தலைமை என்பது தன்னலமற்று, பிறர்நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் அவர் எடுக்கும் முடிவுகள் அனைவருக்கும் நல்லது செய்வதாய் அமையும். இங்கு ஆளப்படுபவர்கள் அடிமைகளாக இருக்கமாட்டார்கள். அவர்கள் தலைமையின் மீது நம்பிக்கை கொண்டு முடிவெடுப்பதற்கான அவர்களது அதிகாரத்தை(அரசியலை) தலைமையிடம் கொடுத்திருப்பவராவர்கள். இந்த தலைமை அல்லது மக்களின் பிரதிநிதி சரியாக செயல்படவில்லையென்றால், மக்களே அவருக்கு எதிராக குரல் கொடுப்பார்கள். தலைமையில் இருப்பவர் அதிக பணபலம், ஆட்கள்பலம் கொண்டவராக இருந்தால் தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களை தன்னுடைய பலத்தினைக் கொண்டு அடக்கவும் செய்வர். அதாவது எதிர்க்கமுடியாமல் செய்வார்கள். இங்குதான் ‘‘அடக்குமுறை’’ என்பது நடக்கிறது. அப்போது அதிகாரம் என்பது மக்கள் பலமாக இல்லாமல் பணபலமாகவும், அடியாட்கள் பலமாகவும் மாறிவிடும். இங்கு ஆரோக்கியமான அரசியல் என்பது நடக்காது.

பொதுமக்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுவர்கள், மக்களின் தேவைகளுக்காக மட்டுமே சேவை செய்ய கடமைப்பட்டவர்கள். அவர்கள் மக்களை ஆளும்மன்னர்கள் அல்ல. இங்கு முடிவெடுக்கும் அதிகாரம் அனைவருக்கும் நல்லது செய்வதே. அதிகாரத்தினை தக்கவைத்துக் கொள்ள அடக்கிஆள்வது அல்ல.

இறுதியாக,

மேற்கூறிய கருத்துக்கள் பங்கேற்பாளர்களிடம் பகிர்ந்து கொள்ளும்போது, சமூகத்தில் மாற்றத்தை உண்டாக்க தேவையான சட்டபூர்வமான வழிவகைகள் குறித்தும், மக்களின் நலனுக்காக மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு உருவாகிறார்கள் என்பது குறித்த புரிதலும் ஆழப்படும்.

## செயற்பாடு

பங்கேற்பாளர்களை சிறுகுழுக்களாகப் பிரிக்கலாம். ஓவவொரு குழுவும் அவர்களது பிரதிநிதயாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த தேர்தலுக்கு சோசியோகிரசி தேர்தல் முறையை

பயன்படுத்தலாம். சோசியோகிரசி தேர்தல் முறை என்றால் அனைவரும் சேர்ந்து சமூகமாக முடிவுகளனை எடுப்பது. ஒவ்வொருவர் கருத்துக்கும் மதிப்பளிப்பது.

தயாரிப்பு

3-5 சிறுகுழுக்கள் உருவாக்கவும். ஒவ்வொருகுழுவும் அவர்களுக்கான பிரதிநிதியை அல்லது தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தேர்தல் விதிமுறைகள் :

1. ஒவ்வொருவரும் வாக்கு அளிக்க வேண்டும் (ஒருதுண்டு சீட்டில் தலைவராக தேர்ந்தெடுக்க விரும்பும் நபரின்பெயரும், கீழே வாக்காளர் பெயரும் எழுத வேண்டும்.
2. பயிற்சியாளர் அல்லது வேறு ஒரு வெளிநபர் தேர்தல்ஆணையராக இருக்கலாம்.
3. தேர்தல் ஆணையர், தேர்தலை நடத்துவார்.
4. தலைவராக நிற்கவிரும்பும் வேட்பாளர்கள் தங்களை வெளிப்படையாக அறிவித்து ஏன் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நியாயத்தை குழு உறுப்பினர்களிடம் எடுத்துரைக்கவேண்டும். ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரச்சாரம் செய்ய 2 நிமிடங்கள் ஒதுக்கவேண்டும்.
5. வாக்களிப்பு துவங்கியபிறகு பிரச்சாரம் செய்யக்கூடாது.
6. வாக்களித்த அனைவரின் துண்டுசீட்டுகளை வாங்கி தேர்தல் ஆணையர் ஒவ்வொரு வேட்பாளருக்கும் எவ்வளவு வாக்கு வந்துள்ளது என்று குழுவிற்கு தெரிவிக்கவேண்டும்.
7. குழு மீண்டும் சிந்தித்து வாக்களிக்க ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.
8. மீண்டும் ஒரு சிறுதுண்டு சீட்டில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை செலுத்தவேண்டும்.
9. இவ்வாறு ஒருமித்த கருத்துவரும்வரையில் மீண்டும், மீண்டும் வாக்களிக்க வாய்ப்புகள் வழங்கலாம். இறுதிமுடிவு அனைவரும் ஏற்றுக்கொண்ட முடிவாக இருக்கவேண்டும்.
10. தேர்தல் ஆணையர் வெளிப்படையாக வாக்காளர்களின் பெயர்களைக் சொல்லி அவர் ஏன் குறிப்பிட்ட வாக்காளருக்கு வாக்களித்தார். அதனால் சமூகத்திற்கு ஏற்படும் பலன்கள் என்ன என்று கேட்க வாக்காளர் ஒவ்வொருவரும் அவர்களது எதிர்பார்ப்புகளைத் தெரிவிப்பார்கள்.
11. வேட்பாளர்களும், மனமுவந்து தனது வேட்புமனுவைத் திரும்பபெறலாம். ஆனால் காரணத்தை தெரிவிக்க வேண்டும்.


மேற்கூறிய தேர்தல்முறை, கலந்துரையாடல் மூலம் சிறந்த தலைமையைக் கண்டறியவும் எத்தகையதலைமை ஒரு மக்கள் குழுவிற்கு தேவை என்ற புரிதலும் பங்கேற்பாளருக்கு உண்டாக உதவும். ஒருமித்த கருத்து ஏற்படுத்துவது என்பது மிகவும் எளிதான ஒன்று அல்ல. ஏனெனில் மக்களுக்கு அவர்களின் பின்னணி சார்ந்து அவர்களின் விருப்பங்கள் சார்ந்து இயற்பியல் சூழல் சார்ந்து, உளவியல் தேவைகள் அடிப்படையில் என பலவகையான முன்னுரிமை நிலைப்பாடுகள் இருக்கும்(சோசியோகிரசி என்றால் என்ன? அது குறித்த அடிப்படைத்தகவல்கள் / விவரங்கள் அத்தியாயம் 4,16வது அமர்வில் கொடுக்கப்பட்டுள்ளது.)

# அத்தியாயம் 4 :

# சமூகப்பார்வையுடன்கூடிய ஆளுமைத்திறன் வளர்ச்சியும், தலைமைத்துவமும்.

## அமர்வு 13: ஆளமைத்திறன் வளர்ச்சியும் தலைமைத்துவமும் - ஓர் அறிமுகம்

**நோக்கம் :** சமூகப்பார்வை நமது தனிப்பட்ட வளர்ச்சிக்கும் அவசியமானதோடு, ஆளமைத்திறன் வளர்ப்பு, தலைமைப்பண்பு ஆகியவை சமூகசெயல்பாட்டினை மேம்படுத்தும் என்ற புரிதலை உண்டாக்குதல்.




### ஆளுமைத்திறன் வளர்ப்பு

நமதுதனிப்பட்ட குணங்கள், பண்புகள், நடத்தை மற்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் அடையச்செய்யும் முயற்சியே ஆளுமைத்திறன் வளர்ப்பு. இந்தமுயற்சி, சுயவிழிப்புணர்வு, சுயமேம்பாடு மற்றும் ஒரு நபரின் ஆளுமையை வளர்த்தெடுக்க உதவும் பின்வரும் பல்வேறு திறன்களை உள்ளடக்கியது.

**அ. சுயவிழிப்புணர்வு** : நமது வலிமை, பலவீனம், பண்புகள், நம்பிக்கைகள் ஆகியவை

**ஆ. தன்னம்பிக்கை :** சுயமதிப்பீடையும், சுயஉறுதித்தன்மையையும் வளர்த்துக்கொள்ளுதல்

**இ. தகவல்தொடர்புதிறன் (பேச்சுத்திறன்)**
நாம் பிறருடன் பழகுவது,பேசுவது ஆகியதிறன்களில் மேம்படுதல்.

**ஈ. உணர்ச்சிகளைக் கையாளும் திறனறிவு :** நம்முடைய மற்றும் பிறருடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு மதிப்பளித்தலும், உணர்வுகளை மேலாண்மை செய்தலும்.

**உ. புறமாற்றங்களுக்கு தன்னை மாற்றிக் கொண்டு செயல்படும் திறன்** : பலசூழல்கள், சவால்களை சந்திக்கும் திறனும், அதனை ஏற்றுக்கொள்ளும் தன்மையும்.

**ஊ. பிறருடன் உறவை வளர்த்துக்கொள்ளும் திறன்** : ஆரோக்கியமான உறவுகளைப் பேணுதலும், பிறருடன் ஆக்கபூர்வமான முறையில் உரையாடலும்.

**எ. நேரமேலாண்மை மற்றும் இலக்கு நிர்ணயித்தல் :** நேரத்தை முறையாக ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திறனும், தனிப்பட்ட மற்றும் சமூகவாழ்க்கை சார்ந்த இலக்குளை உருவாக்குதல்.

ஆளுமைத்திறன் வளர்ப்பு என்பது வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொள்வதாகும், இதற்கான முயற்சி எடுப்பதன்மூலம், சுயமரியாதைமேம்படும். மேலும், உலகத்துடன் நேர்மறையான, ஆக்கப்பூர்வமான வழியில் ஈடுபடக்கற்றுக் கொள்ளலாம்.

### தலைமைத்துவம்

ஒருபொதுவான நோக்கத்தினை அடைவதற்கு பிறருடன் இணைந்து வழிநடத்தி செல்வாக்கு மற்றும் உத்வேகத்துடன் செயல்படும் திறனே தலைமைத்துவம். ஆக்கபூர்வமான தலைவர்களிடம், தம்மைச்சேர்ந்தவர்களையும், மக்கள் குழுக்கள் மற்றும் நிறுவனங்களையும் தலைமைதாங்கி வழிநடத்திச்செல்லும் திறன்களும், தகுதியும், பழக்கவழக்கங்களும் இருக்கும்.

**தலைமைத்துவத்தில் இருப்பவை :**

1. **தொலைநோக்குப்பார்வை மற்றும் இலக்கு நிர்ணயித்தல் :** எதிர்காலத்தைக் குறித்த தெளிந்தபார்வையும், அதற்கான இலக்குகளை நிர்ணயிக்கும் திறன்வளர்ப்பு.
2. **தகவல்தொடர்பு :** அறிவுறுத்தல்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை தெளிவுடன் உறுதியாக தெரிவிக்கும்திறன்.
3. **முடிவெடுக்கும் திறன் :** எதிர்நோக்கும் விளைவுகளக்கருத்தில் கொண்டு சரியான நேரத்தில், தெளிந்தமுடிவினை எடுத்தல்.
4. **ஊக்கப்படுத்தல் :** பிறருடைய செயல்களை ஊக்கப்படுத்தி பாராட்டி, அதிகாரமூட்டும் திறன்.
5. **சிக்கல்களைத் தீர்த்துவைத்தல் :** சவால்களைச்சந்தித்து, அதற்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக்கண்டறியும் திறன்.
6. **உணர்ச்சிகளைக் கையாளும்திறன். த**ன்னுடைய சுயஉணர்ச்சிகள் மட்டுமல்லாது, பிறருடைய உணர்ச்சி வெளிப்பாடுகளையும் புரிந்துகொண்டு கையாளும் திறன்.
7. **தகவல்மைத்துக் கொள்ளும்திறன் :**பரந்தமனப்பான்மையுடன், இலகுவாக மாற்றத்திற்கு தயாராகும் மனநிலையுடன் இருத்தல்.
8. **இரக்கம் மற்றும் குழுவாக செயல்படும்திறன் :** வலுவான உறவுகளைக் கட்டமைத்து பிறருடன் இணைந்து செயல்படும்திறன், தலைமைத்துவம் பல வடிவங்களில் இருக்கலாம். நிறுவனங்கள், சமூகம் அல்லது சமூதாயகுழுக்களில் முறையான தலைமைப்பொறுப்பாகவும் இருக்கலாம். அவர்கள் மேலும் ஆக்கபூர்வமாக செயல்படவும், செல்வாக்குமிக்க தலைவர்களாகத் திகழவும் தலைமைத்துவ மேம்பாடு என்பது அவசியம்.

**இறுதியாக**

ஆளுமைத்திறன் வளர்ப்பு என்பது, ஒருதனிநபரின் வளர்ச்சிக்கும், சுயமுன்னேற்றத்திற்கும் பயன்படும் ஒன்றாகும். தலைமைத்துவ மேம்பாடு என்பது அனைவருக்கும் பொதுவான நோக்கத்தினை அடைய தேவைப்படும் திறன்களை அளிப்பதாகும். ஆக்கபூர்வமான தலைமைத்துவம் அமைய, ஆளுமைத்திறன் மேம்பாடும், அதனுடைன் சுயவிழிப்புணர்வு மற்றும் பிறருடன் தொடர்புகொள்ளும் திறனும் அவசியம். இத்தகையதலைமையால் வெற்றியைக் காணமுடியும்.

செயற்பாடு

மேற்கூறப்பட்டுள்ள விவாதக்கருத்துக்கள் பயனுள்ளதாக இருக்கிறதா என்றும் நடைமுறையில் அவை சாத்தியமா அல்லது அவற்றினை நடைமுறைக்கு கொண்டுவர என்ன செய்யலாம் என்றும் கலந்துரையாடலாம்.

பின்வரும் கேள்வித்தாளையும் அளித்து ஒவ்வொரு பங்கேற்பாளரையும் மதிப்பிடச் சொல்லலாம்.

**நம்முடைய தலைமைப் பண்பை நாமே சோதித்து அறிவோமா?**

எங்கள் சமுதாயத்தில் எடுக்கப்படும் முடிவுகளில் எல்லோரும் கருத்து சொன்னபிறகு என் முடிவை கடைசியாகவே தெரிவிப்பேன்.

- ○ முற்றிலும் சரி
- ○ பெரும்பாலான நேரங்களில்
- ○ எப்போது அடுத்தவர்களை மட்டுமே முடிவெடுக்க விட்டுவிடுவேன்.

கேள்வி 2 : குழுவில் மற்றவர்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுகொண்டு பரிசீலிப்பேன்.

- ○ பெரும்பாலான நேரங்களில்
- ○ எப்பொழுதுமே
- ○ எப்போதுமில்லை

கேள்வி 3 : எங்கள் குழுவினரிடம் என்ன செய்யவேண்டும், எப்படி செய்யவேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் என்று விளக்குவேன்.

- மிகவும் அரிதாக
- எப்போதாவது
- எல்லா நேரங்களிலும்

கேள்வி 4 : எங்கள் குழு உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை சரியாகச் செய்கிறார்களா என்பதை கூர்ந்து கவனிப்பேன்.

- முடிந்தவரை கவனிப்பேன். உதவி தேவை என்றால் செய்வேன்.
- எப்போதும் இல்லை. குழு உறுப்பினர்கள் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று நன்றாகத் தெரியும்.
- எப்போதும் கவனித்திருப்பேன்.

கேள்வி 5 : ஏதாவது தவறு நேர்ந்தால், குழு உறுப்பினர்களிடம் கருத்து கேட்பேன்.

- இல்லை
- அடிக்கடி கேட்பேன். பிரச்சனைகளைத் தீர்க்கும் போது குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் எனக்கு அவசியம்.
- ஆமாம். அதோடு குழு உறுப்பினர்களே பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள விட்டுவிடுவேன்.

கேள்வி 6 : உறுப்பினர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த நான் உதவவிரும்புவேன்.

- எப்போதுமே
- எப்போதாவது
- உண்மையில் இல்லை

கேள்வி 7 : என்னுடைய பொறுப்புகளை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பேன்.

- அடிக்கடி
- பெரும்பாலான நேரங்களில்
- எப்போதும் இல்லை

கேள்வி 8 : எங்கள்குழுவில் புதிதாக ஏதாவது செயல்செய்ய வேண்டுமானால் நான்தான் திட்டமிடுவேன்.

- முற்றிலும் சரி
- பெரும்பாலும், ஆனால் மற்றவர்கள் சொல்லும் திட்டங்களையும் ஏற்று செயல்படுத்த தூண்டுவேன்.
- இல்லை. குழுஉறுப்பினர்கள் திட்டமிடச் சொன்னால் மட்டுமே செய்வேன்.

கேள்வி 9: எங்கள் குழு ஒழுக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பேன்.

- எப்போதும்
- அதிகம் இல்லை
- எப்போதும் இல்லை. அவரவர் விரும்பியபடி இருக்க விட்டுவிடுவேன்.

கேள்வி 10: குழுஉறுப்பினர்கள் தவறு ஏதும் செய்தால் தண்டிக்க அல்லது எச்சரிக்க நினைப்பேன்.

- நிச்சயமாக
- மிக அரிதாக நினைப்பேன். தவறுகள் நடந்தால்தான் புதிதாக யோசிக்கமுடியும்.

○ எப்போதும் இல்லை. அவர்களே தவறுகளைத் திருத்திக்கொள்வார்கள்.

மேற்சொன்ன கேள்விகளுக்கு விடையளித்து பின்பு நீங்கள் எந்தவிதமான தலைமைப்பண்பு உள்ளவர் என்று தெரிந்துகொள்ளலாம்.

உதாரணமாக, 1. மிகவும் பொறுப்பான தலைவர், 2. எல்லோரையும் அரவணைக்கும் தாராளமனம் படைத்த தலைவர், 3.அடுத்தவரை ஊக்குவித்து செயல்பட வைக்கும் தலைவர், 4..,5… என நீங்களே உங்களைப்பற்றி மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

## அமர்வு 14: அனைவரையும் உள்ளடக்கும் தலைமைத்துவம்

அனைவரையும் உள்ளடக்கிய தலைமை என்பது ஒரு தலைமைத்துவ வளர்ச்சிக்கான அணுகுமுறையாகும். இது ஒரு இணைந்து செயல்படும் சூழல் உருவாக்குவதை வலியுறுத்துகிறது. அங்கு பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்பு மதிப்பிடப்படுவதோடு, ஊக்குவிக்கவும்,சமூகமதிப்பினையும் ஏற்படுத்துகிறது. அனைத்து தனிநபர்களும், அவர்களின் பின்னணி, அடையாளம் அல்லது வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், பங்கேற்க, பங்களிக்க மற்றும் வெற்றிபெற சமமான வாய்ப்பைப் பெற இந்த அணுகுமுறை வலிந்து உருவாக்குகிறது. அனைவரையும் சமூகத்தில் உள்ளடக்கி பார்க்கும் தலைவர்கள் தங்களது இலக்கினை அடைய, ஆகச்சிறந்த வாய்ப்புகள் என்ன, புதியமுயற்சிகள் என்ன எடுக்கலாம், நேர்மறையான சூழலை சிக்கலில்லாமல் திறமையாக எப்படி உருவாக்கலாம் என்பதை சிந்திப்பதோடு, தனித்திறன் கொண்டவர்களை அவர்கள் எந்த சமுதாயப் பின்னணி கொண்டிருக்கிறார்கள் என்று பாராமல் முன்னுக்கு அழைத்து சிறப்பித்து செயல்படச்செய்வார்கள். அவர்கள் சமூகமுற்போக்கு கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

அனைவரையும் உள்ளடக்கிய தலைமையின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

**பன்முகத்தன்மை பற்றிய விழிப்புணர்வு** : அனைவரையும் உள்ளடக்கும் பண்புகொண்ட தலைவர்கள் இனம், பாலினம், வயது, மதம், திறன் மற்றும் பின்னணி உட்பட பன்முகத்தன்மையின் பல்வேறு பரிமாணங்களை அறிந்திருந்திருப்பதோடு ஏற்றுக்கொள்ளவும் செய்வர்.

**இரக்கம் மற்றும் மரியாதை** : அவர்கள் வெவ்வேறு பின்னணிகள், கருத்துகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட தனிநபர்களிடம் இரக்கம், மரியாதை மற்றும் புரிதலை வெளிப்படுத்துவார்கள்.

**நேர்கொண்ட பார்வை மற்றும் பேச்சு** : இத்தகைய தலைவர்கள் நேரிடையான மற்றும் நேர்மையான உறவுகளை ஊக்குவிப்பார்கள். அவர்கள் அணுகக்கூடிய மக்களின் எண்ணங்களையும் கவலைகளையும் பகிர்ந்து கொள்ள வசதியாக இருக்கும் சூழலை உருவாக்குவார்கள்.

**சமத்துவம் மற்றும் நேர்மை** : அவர்கள் தங்கள் அமைப்பு அல்லது குழுவிற்குள் சார்பு, பாகுபாடு, மற்றும் சமத்துவமின்னையை அகற்ற தீவிரமாக வேலை செய்கிறவர்கள் அனைவருக்கும் நியாயம் மற்றும் சம வாய்ப்புகளை மேம்படுத்தும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உறுதி செய்வார்கள்.

**அனைவருக்குமான முடிவெடுத்தல்** : இத்தலைவர்கள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பலதரப்பட்ட குரல்கள் மற்றும் கண்ணோட்டங்களையும் கவனித்து செயலுக்கு கொண்டுவருபவர்கள். அவர்கள் பல்வேறு பின்னணிகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட நபர்களிடமிருந்து சிறந்த நன்கு அறியப்பட்ட முடிவுகளை எடுப்பதற்கு அவர்களது தலையீட்டினை கோருபவர்கள்.

**மோதல் தீர்வு :** மோதல்கள் மற்றும் வேறுபாடுகளை ஆக்கபூர்வமான மற்றும் நியாயமான முறையில் நிவர்த்தி செய்வார்கள். கருத்து வேறுபாடுகள் வளர்ச்சி மற்றும் கற்றலுக்கான வாய்ப்புகளாகக் கருதப்படும் சூழலை வளர்த்தெடுப்பார்கள்.

**வக்காலத்து :** அனைவரையும் உள்ளடக்கிய தலைவர்கள் குறைவான பிரதிநிதித்துவம் அல்லது ஒடுக்கப்பட்ட குழுக்களின் முன்னேற்றத்திற்காக வாதிடுவதொடு அவர்களை ஆதரிக்கவும் செய்வர். வெற்றிக்கான தடைகளை அகற்றவும், பன்முகத்தன்மை மற்றும் சேர்க்கை முயற்சிகளை வென்றெடுக்கவும் வலுவாக செயல்படும் திறனுடையவாகளாகயிருப்பர்.

**தொடர்ச்சியான கற்றல்:** அனைவரையும் உள்ளடக்கிய தலைமை என்பது ஒரு தொடர் செயல்முறை. இத்தகைய தலைவர்கள் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய சிக்கல்களைப் கையாள்வதால், தங்களைப் பற்றி தாங்களே கற்று மேம்பாடு கொண்டவர்களாக இருப்பார்கள். எப்போதும் சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ள தங்களைப் புதுப்பித்துக்கொள்வதோடு, அவர்களின் தலைமைத்துவபாணியை தேவைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்வர்.

அனைவரையும் உள்ளடக்கிய தலைமை என்பது தார்மீக ரீதியாகவும் பொறுப்புடன் இருப்பது மட்டுமல்ல, பல்வேறு கண்ணோட்டங்கள் மற்றும் திறமைகளின் பலன்களைப் பெறுவதும் ஆகும். இத்தகைய தலைவர்களைக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் குழுக்கள் மிகவும் புதுமையானவை. சிக்கலைத் தீர்ப்பதில் சிறந்தவை மற்றும் அதிக பணியாளர் திருப்தி மற்றும் தக்கவைப்பு ஆகியவற்றைக் கொண்டிருப்பதாக ஆராய்ச்சி காட்டுகிறது. இன்றைய பல்வேறு மற்றும் உலகமயமாக்கப்பட்ட உலகில் அனைவரையும் உள்ளடக்கிய தலைமை மிகவும் அவசியமானது. ஏனெனில் இது அனைத்து தனிநபர்களும் செழித்து வளரக்கூடிய சூழலை உருவாக்க உதவுகிறது மற்றும் அவர்களை திறனுடைன் பங்களிக்க உதவுகிறது.

செயற்பாடு

பங்கேற்பாளர்கள் பெயர்களை ஒரு துண்டுச்சீட்டில் தனித்தனியாக எழுதவும்.

அவற்றை ஒரு பெட்டியில் போட்டு குலுக்கி அனைவரிடமும் காட்டவேண்டும். ஒவ்வொருவரும் ஒரு துண்டுசீட்டினை எடுத்து, அதில் உள்ள பெயரில் உள்ள நபரின் தலைமைத்துவம் குறித்து கீழ்கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை வாசித்து மதிப்பிடலாம்.

அல்லது

கீழுள்ள கேள்விகளை பயிற்சியாளர் ஒவ்வொன்றாக வாசித்து பங்கேற்பாளர் ஒவ்வொருவரையும் கீழுள்ள வாக்கியங்களுக்கு சரி அல்லது தவறு என குறியிட்டு தங்களுடைய தலைமைப் பண்பினை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

பேசும் திறன் பிறர் புரிந்து கொள்ளும்படியும், சொல்வதைக் கடைபிடிக்ககூடிய வகையிலும் இருக்கும்.

- உடனுக்குடன் செயல்படவும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் செய்வார்
- பொது நடைமுறைகளைக் கொண்டு சிறப்பாக செயல்படுத்துவதில் வல்லவர் (கூட்டங்களை ஒருங்கிணைப்பது, அதிகாரிகளிடம், பொதுமக்களிடம் கோரிக்கைகளை முறையிடுவது போன்றவை)
- எல்லோரும் விரும்பும் செயலை நிறைவேற்றுவதில் தன் பொறுப்பு என்ன என்பதை தெளிவாக உணர்ந்தவர்.
- மற்றவர் கூறுவதை கூர்ந்து கவனிக்கக்கூடிய திறன் படைத்தவர்.
- தன்னுடைய பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை அறிந்து திறமையை மேம்படுத்திக் கொள்ள எப்போதும்முயற்சி செய்பவர்.
- பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுப்பவர்.
- முன்னேற்றங்களைக் கண்காணித்து எல்லோரையும் உற்சாகப்படுத்தி ஈடுபடுத்துபவர்.
- அபாயமான தருணங்களிலும், செயல்களிலும் தயங்காமல் பொறுப்புகளை மேற்கொள்பவர்.

- மற்றவர்களிடம் உள்ள திறமைகளையும், சிறப்பான செயல்களையும் மதித்து பாராட்டுபவர்.
- எந்தவித சூழலிலும், கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளை மேலோங்கவிடாமல் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்.
- செய்த தவறுகளிலிருந்து பாடம் கற்று தம்மைத் திருத்திக் கொள்பவர்.
- மற்றவர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, எல்லோருடனும் நட்புவட்டத்தினை உருவாக்கி பழகும் தன்மை கொண்டவர்.
- எல்லோரையும் மதிப்பிடத்தெரிந்தவர் - அவரவருடைய திறனைக் கண்டறிந்து பயிற்றுவிக்க, வளர்த்தெடுக்க தெரிந்தவர்.
- தனக்கும், பிறருக்கும் நேர்மையாக நடந்து கொள்பவர். செயலைச் செய்து முடிப்பதில் ஆர்வம் கொண்டவர்.
- மிகுந்த சகிப்புத்தன்மை கொண்டவராகவும், எந்தவித மனஅழுத்தத்திற்கு ஆளாகாதவராகவும் இருப்பார்.
- சூழ்நிலையை புரிந்துகொண்டு அதற்கு தேவையானதையே செய்பவர் தன்விருப்பத்திற்காக மட்டுமே செயல்படாதவர்.
- தன்னையும், பிறரையும் செய்யும் செயலுக்கு பொறுப்பேற்கச் செய்பவர்.


**11மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் சிறந்த தலைவர்கள் என பட்டம் பெற அதிக வாய்ப்புள்ளவர்கள்**

## அமர்வு 15 – பெண்களின் தலைமைத்துவம் - சிறப்புகவனம் அவசியம்! ஏன்?

நோக்கம் : இன்றைய சமூக சூழலில் பெண் தலைமை அவசியமும், சமூகப்பாகுபாடுகள் பெண்களுக்கு எதிராக கட்டமைக்கப்படும் குறித்தும் விளக்குதல்

### ஆண்-பெண் பாகுபாடு

ஆண்பால்– பெண்பால் என்ற பால்பிரிவினை, ஆண்மை – பெண்மை என்ற பாலின பாகுபாடாக மாற்றப்பட்டு பின்னர் அதுவே மீண்டும் ஆண், பெண் என்ற வேறுபாடாக முன்வைக்கப்படுகிறது. இயற்கையான உடல்ரீதியல் உள்ள வேற்றுமைகள் சமூகநியாயங்களுக்காக, பாகுபாடாக மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சமுதாயவளர்ச்சியில் பெண்கள் அடைந்துள்ள வளர்ச்சி என்பது மிகவும் பின்தங்கியநிலையிலே உள்ளது.




| இயல்பானது | சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது |
|---|---|
| உடல்சார்ந்த வேறுபாடு(இனப்பெருக்க உறுப்புகள் | உள்ளம் சார்ந்த பிரிவினை |
| இயற்கையான வகைப்பாடு | செயற்கையான பாகுபாடு (தீட்டு, குடும்பபராமரிப்புச்சுமை) |
| யதார்த்தமானது (தாய்மை) | கற்பிதப் பாகுபாடு (உம். குழந்தைப்பராமரிப்பனை பெண்கள்மீது சுமத்துதல்) |
| ஆண் - பெண் (உடல் வேற்றுமை மட்டுமே) | ஆண்மை – பெண்மை என்ற கற்பிதங்கள் |

நமது சமுதாயம் தந்தை வழிக்கருத்தியலை அடிப்டையாகக் கொண்டுள்ளது. இச்சமுதாயத்தின் செயல்பாடு ஆண்ஆதிக்க மனோபாவச்செயல்பாடாக உள்ளது. அதன்விளவு, பெண்கள் பல நிலைகளில் பாதிக்கப்படுகின்றனர். குடும்பஅளவில், சமுதாயஅளவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஆணையும் பெண்ணையும் சமமாகப் பாவிக்கும் போக்கு இல்லை. மாறாகத்தீவிரமாகப் பெண்ணை அடிமைப்படுத்தும்போக்கே வெளிப்படுகிறது.

ஒரு குழந்தை பிறக்கின்றது. உடல்உறுப்பின்படி அதாவது பால்சார்ந்து அந்தக்குழந்தை ஆண் குழந்தையாக இருக்கின்றது அல்லது பெண்குழந்தையாக இருக்கின்றது. ஆண்குழந்தையானது, இந்தச்சமூகம் சொல்கின்ற ஆண்மைசார்கருத்துகளை நடத்தைகளைக் கற்று, பயின்று அவற்றின் வழிநடக்கவேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு எல்லோரிடத்திலும் உள்ளது. அதே போன்று, பெண்குழந்தை பெண்மை சார்ந்து நடக்கவேண்டும். சமூகத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாத ஆணும், பெண்ணும் சமூகத்திற்கு வெளியே தள்ளப்படுகின்றனர்.

கற்பு என்ற கற்பிதம் மூலம்தான் பெண்ணின் உடல்கட்டுப்படுத்தப்பட்டு ஆணுக்குப்பயன்படக்கூடியதாக வளர்க்கப்படுகின்றது. கற்பு பெண்ணுக்கு மட்டும்தான் எனவும், கற்புக்கு பெண்தான் அரசி, பெண்மையின் அடையாளம் கற்பு, பாலியல்பெண் தொழிலாளி பெண்ணே அல்லள் போன்ற கற்பிதங்கள் சமூகத்தில் நிலவிவருகின்றன. உரிமைகள், கடமைகள், பொறுப்புகள், வாய்ப்புகள் ஆகியன நமது சமூதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமானதாக இல்லை. ஆனால், அரசியல்சட்டத்தால் இந்த சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்( ஆண்மை) | பெண் (பெண்மை) |
|---|---|
| அறிவு | அழகு |
| கம்பீரம் | அடக்கம் |
| வீரம் | அன்பு |
| தைரியம் | அச்சம் |
| உடல்வலு | பலவீனம் |
| கொடுப்பவன் | பெறுபவள் |
| வீட்டுக்கு வெளியே | வீட்டுக்குள் |

**பாகுபாடுகள் செயல்படும் விதம் :**

இருவரில் ஒருவரை உயர்ந்தவராக்குவதற்குக் கற்பிதமாக அடுத்தவர் தாழ்ந்தவராக்கப்படுகிறார். உண்மையில், இயற்கையில் இருவருக்கும் எந்தஏற்றத்தாழ்வும் இல்லை. இருவரும் சமநிலையில் உள்ளவர்கள்தான். ஆகவேதான், செயற்கையாக, கற்பிதமாக, போலியாக, உயர்வு-தாழ்வு கற்பிக்கப்படுகிறது. வலுக்கட்டாயமாக இந்த வித்தியாசம் சுமத்தப்படுகின்றது.

அதிகாரம், தீண்டாமை, கட்டுப்பாடு, புனிதம் போன்ற கருத்தாக்கங்கள் மூலமாகத்தான் சமுதாயத்தில் பாகுபாடு போற்றப்படுகின்றது. வலுப்படுத்தப்படுகின்றது.

இருவரில், ஒருவருக்கு அதிகாரம் இருக்கும்போது அவர் அந்த அதிகாரத்தை அடுத்தவர் மீது காட்டுகின்றார். அதிகாரம் செலுத்துபவர் - அதிகாரத்துக்கு அடிபணிபவர் என்ற எதிர்ப்பு உருவாக்கப்படுகின்றது. அதிகாரத்துக்கு அடிபணியமறுத்தால் தண்டனை உண்டு. சித்ரவதை உண்டு. எனவே அதிகாரத்துக்கு அடிபணிந்துதான் ஆகவேண்டும் அதிகாரம் செலுத்துபவர் சொல்வதுதான் சட்டம்.

- தீண்டாமை பலவிதங்களில் செயல்படுகின்றது. சாதிஅடிப்படையில் தாழ்ந்தசாதியிரைத் தொடுவதே பாவம் என்று சொல்லப்பட்டது. கட்டுப்பாடுகள்மூலம் உரிமைகள் முடக்கப்பட்டன. மறுக்கப்பட்டன. தாழ்ந்தசாதி எனவே செருப்பு

போடக்கூடாது. கோயிலில் நுழையக்கூடாது. நெஞ்சுநிமிர்த்தி நடக்ககூடாது என உடலைக்கட்டுப்படுத்தினார்கள். உள்ளத்தையும் சிந்தனையையும் கட்டுப்படுத்தினர்.

அதிகாரத்திற்கு ஆட்படுபவர்களை தனக்கானதை ஏற்றுக்கொண்டு திருப்தி அடையும் மனப்பாங்கு வளர்க்கப்படுகின்றது. அதிகாரத்தையும், அடக்குமுறையையும் எதிர்த்துக் குரல் எழுப்பஆட்படுபவர்களின் உணர்வுகள் பதப்படுத்தி தக்கவைக்கப்படுகின்றன.

**பாலினசமத்துவம் என்பது**

எந்தநிலையிலும் எந்தச்செயலிலும் எந்த இடத்திலும் எந்த தருணத்திலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் வித்தியாசத்தை (ஏற்றத்தாழ்வு) சுமத்தாமல் இருப்பதாகும்.

ஆண் - பெண் சமத்துவமும் சமநிலையும் எப்போது உறுதிபடுத்தப்பட வேண்டும்.

பாலினப்பாகுபாடு என்பது நமது நாட்டில் மட்டுமல்லாது உலகளாவிய சமூகப்பிரச்சனையாக இருப்பதால் அரசமைப்புசட்டமும், பிறசட்டங்களும் பாலின சமத்துவத்தை வலியுறுத்துகின்றன. இன்றைய சூழலில் பெண்கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் பங்கேற்பு என்பது முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. நமது நாட்டின் சட்டங்களும் கொள்கைகளும் பின்வருவனவற்றையே வலியுறுத்துகின்றன.

- குடும்பத்தில் குழந்தை வளர்ப்பில் ஆண்-பெண் வித்தியாசம் இருக்கக்கூடாது.
- குடும்பநடவடிக்கைகளில் பெண் புறக்கணிக்கப்படக்கூடாது.
- பெண்ணின் குரலுக்கு மதிப்பளிக்கவேண்டும்.
- கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமவாய்ப்பும், வசதியும் அளிக்கப்படவேண்டும்.
- கூலி, சம்பளத்தில் மற்றும் சலுகைகளில் ஆணுக்கு ஒன்றாகவும், பெண்ணுக்கு வேறு ஒன்றாகவும் இருக்கக்கூடாது.
- சமூகவெளியில், அரசியலில் பெண்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட்டு உறுதி செய்யப்படவேண்டும்.
- சேவைகளைப் பெறுவதில் ஆண் - பெண் பாரபட்சம் இருக்கக்கூடாது.
- ஆணுக்கான அனைத்து உரிமைகளும் மனிதஉரிமைகள் என்றால் அந்த அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும்.
- பெண் சகமனிதராக பாவிக்கப்படவேண்டும். மகள், மனைவி, தாய் என்பதெல்லாம் உறவின்முகங்கள், அடிப்படையில் ஒரு மனுசி. இந்தப்பார்வை நிலவவேண்டும்

ஆண் = பெண்

பெண் = ஆண்



உண்மையான சமத்துவத்திற்கு மதிப்புக்கொடுப்போமானால் உண்மையான அன்பு இருக்குமானால், பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்றுதவிர, மற்றகாரியங்கள் இருபாலருக்கும் ஒன்றுபோலவே இருக்கும் என்பது உறுதி

- தந்தை பெரியார்

(பெரியார் சுயமரியாதை பிரச்சாரநிறுவன வெளியீடான பெண் ஏன் அடிமையானாள்? என்ற நூலின் பக்கம் 20ல் உள்ளது)

செயற்பாடு

பங்கேற்பாளர்கள் 2-3 குழுக்களாகப் பிரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பின்வரும் தலைப்புகளை அவர்களுடன் அளித்து விவாதிக்க சொல்லாம்.

கல்வியிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் பெண்களுக்கு இன்றைய சமூகமும் அரசியல் சட்டங்களும் முக்கியத்துவம் அளிக்கின்றன. இந்த நிலையில், பின்வரும்தளங்களில் பெண்களுக்கு சாதகமாக உள்ள சமூகமாற்றங்கள் எவைஎவை இன்னும் மாற்றப்பட வேண்டிய பெண்ணடிமைத்தனப் போக்குகள் எவை எவை என்பதை கலந்துரையாடி பட்டியலிடவேண்டும்.

1. குடும்பங்களில்
2. சமுதாயத்தில் - சாதி அமைப்பில்
3. அக்கம்பக்கஅளவில்
4. ஊர்அளவில்
5. தமிழ்நாடு /இந்திய அளவில்

## 16. சமத்துவசமூகத்திற்கான ஓர்வழி – சமூக அதிகார ஆட்சிமுறை (Sociocracy)

நோக்கம் : குடிமக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கும் தளம் அமையவும், அங்கு ஏற்றத்தாழ்வு இன்றி அனைவரின் கருத்துக்களும் கேட்கப்படவேண்டும் என்ற சூழலை உருவாக்கவுமான ஒரு மாற்று முயற்சியினை அறிமுகப்படுத்துதல்.

சமூகஅதிகார ஆட்சிமுறை (சோசியோகிரசி)

சமூகஅதிகார ஆட்சிமுறை என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பாரபட்சமில்லாத பங்கேற்பினை வழங்குவதுமான ஒரு முடிவெடுக்கும் அதிகாரமுறை. இந்தநடைமுறை 1940களில் கீஸ் பொக்கே என்பவர் ஜனநாயகத்தின் குறைபாடுகளை குறித்து எழுதினார். அவரும் குவேக்கர் சமூகத்தைச் சார்ந்த அவருடைய துணைவியாருமான பெற்றிகேட்பரி, குவேக்கர் சமூக மதிப்பீடுகள், பழக்கவழக்கங்களினால் தூண்டப்பட்டு ஒரு மதச்சார்பற்ற பள்ளி ஒன்றை ஏற்படுத்தினார். அங்கே குழந்தைகள் சிறு பருவமுதலே சமூக அதிகாரம் என்று அழைக்கப்படுகின்ற கூட்டாக முடிவு எடுக்கக்கூடிய மாற்று வழிகளை அவர்களுக்கு தொடங்கிக் காட்டினார்கள்.

ஜெரார்டு எண்டன்பர்க் என்பவர் அங்கே மாணவராக இருந்தார். பின்னாளில் அவர் ஒரு மின்னணு சாதனநிறுவனம் ஒன்றை பெற்றோரிடமிருந்து பெற்றார். இலாப நோக்கமான இந்த நிறுவனத்தில், அவர் கீஸ் பள்ளியில் தான் கற்றுக்கொண்ட அந்த பழக்கவழக்கங்களை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்தார். அந்தக் கோட்பாட்டுகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம் அங்கே இலாபம் பெருகியது. அங்கே பணியாளர்கள் மனதிருப்தியோடு இருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், இந்த நிறுவனமானது இந்தக்கூட்டு முடிவெடுக்கின்ற தன்மையினால் தப்பி பிழைத்தது. இந்த சாதனையின் வெற்றிக்கு சொந்தக்காரர் ஜெரார்டு எண்டன்பர்க். ஏனெனில் சமூக அதிகாரம் என்கிற ஒரு கோட்பாட்டை நன்றாக மெருகூட்டி அதை ஒரு அறிவியலாகவும் ஒரு ஆளும் அதிகார வழிமுறை அமைப்பாகவும் உருவாக்கினார்

உலகம் முழுவதுமுள்ள ஜனநாயகத்தையும், மக்களாட்சியையும் போற்றும் நிறுவனங்களால் இந்த நடைமுறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுவருகின்றது. சோசியோகிரசி முறையை அறிமுகப்படுத்திய நிறுவனங்களில் மக்கள் மகிழ்ச்சியாகவும் வன்முறை பாகுபாடு எதுவுமற்ற சூழல் நிலவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**சோசியோகிரசி என்ற நடைமுறையின் முக்கிய கோட்பாடுகளானவை :**

- **வட்டவடிவ அமைப்பு :**
  சோசியோசிரசி முறையில் மக்கள் வட்டவடிவ குழுக்களாக அமா்ந்து ஒருவா் முகம் ஒருவா் பாா்க்க கலந்துபேசி முடிவுகள் எடுப்பாா்கள். ஒரு சமூகஅமைப்பில், முடிவுகளை எடுப்பது இந்த வடிவஅமைப்பில் அமா்ந்து பேசும் சிறுகுழுக்களே.
- **சிறுகுழுக்களின் பிரதிநிதிகள் மேல்மட்ட குழுவினை உருவாக்குதல் :**
  ஒரு கிராமத்தில் 5 குழுக்கள் இருக்குமானால் ஒவ்வொரு குழுவின் தலைவரும், ஒரு பிரதிநிதியும் சோ்ந்து ஒரு மேல்மட்ட குழுவினை உருவாக்குவாா்கள். இந்தமேல் மட்ட அளவிலான குழு சிறுகுழுக்களுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தும்.
- **ஒருமித்து முடிவெடுத்தல் :**
  சோசியோகிரசி முறையின் சிறப்பம்சமே ஒப்புதல்முறையில் முடிவெடுத்தல்தான் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் வாக்குசீட்டு முறை இல்லாமல் கலந்துபேசி ஒப்புதல் மூலம் முடிவெடுக்கும்முறையே சோசியோகிரசி. இதன் அா்த்தம், ஒரு குழுவின் அனைத்து நபரும் இணைந்து முடிவெடுத்தால் ஒருவா் எதிா்ப்பு தெரிவித்தாலும், அதற்கான காரணத்தை அவா் குழுவில தெரிவித்து அனைவரும் இணைந்து அதுகுறித்து சிந்தித்து தகுந்த முடிவுஎடுப்பா். இதன் அா்த்தம், பெரும்பான்மை எடுக்கும் முடிவிற்கு சிறுபான்மை ஒப்புதல் அளிப்பது அல்ல. எந்தஒரு நபா் எதிா்ப்பு தெரிவித்தாலும் அந்த எதிா்பிற்கான நிவாரணம் எடுக்கப்படும்முடிவிலும் வெளிப்படும்.

- **கருத்துக்கேட்பு** : சோசியோகிரசி முறையில்,ஒவ்வொரு உறுப்பினரின் கருத்தும் பின்னூட்டமும் கருத்தில் கொள்ளப்படும் முடிவெடுக்கும் முறை, குழுவின் நடத்தை செயல்பாடு ஆகியவை குறித்து வட்டவடிவில் அமா்ந்து ஒவ்வொருவரும் கருத்தினைப்பகிர வாய்ப்பு அளிக்கப்படுவது கட்டாயமாகும்.
- **உறுப்பினா்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் பற்றிய தெளிவு** : ஒவ்வொருவரின் பங்கும் பொறுப்புகளும் தெளிவாக வரையறுக்கப்படுவதால் இங்கு குழப்பத்திற்கோ, பிரச்சனைகளுக்கோ இடமில்லை.
- **தொடா்ந்து மேம்படுத்தும் நடைமுறை** : சோசியோகிரசி முறையில், நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடா்ந்து ஆய்வுக்குட்படுத்தப்படுவதோடு உடனுக்குடன் மதிப்பீடு செய்யப்பட்டு மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- **சமத்துவமும், வெளிப்படைத்தன்மையும்** : சோசியோகிரசி முறையில் அனைத்து உறுப்பினா்களுக்கும் சமவாய்ப்பும், அங்கீகாரமும் வழங்கப்பட்டு அனைத்துமுடிவுகளும், அதன் நடைமுறைகளும் வெளிப்படையாக தெரியவைக்கப்படும்.
- **திரும்பஅழைக்கும் நடைமுறை** : எந்த ஒரு குழுவிலும் தோ்ந்தெடுக்கப்படும் தலைமை அல்லது பிரதிநிதியாக செயல்படவில்லையென்றால் குழுவிற்கு அவரை திரும்ப அழைக்கும் அதிகாரம் உண்டு.
- **ஒருங்கிணைந்த செயல்பாடு** : அனைத்துபிரிவினரும், அனைத்துவளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவருதல்.
- **அந்தந்தமட்டங்களில் அதிகாரம் தக்கவைப்பு** : அக்கம்பக்க அளவில் செயல்படும் சிறுகுழுக்கள் அவா்கள்மட்டத்தில் என்னமுடிவுகள் எடுக்கப்பட வேண்டுமோ அவற்றை எடுக்க அதிகாரம் உண்டு. சிறுகுழுக்களின் பிரதிநிதிகள் தலைவா்கள் மட்டுமே கருத்துகளை மேல்மட்டத்தில்(கிராமஅளவில்) உள்ள குழுக்களுக்கு எடுத்துச்செல்வாா்கள். மேல்மட்ட அளவில் உள்ள குழு அவா்கள் உள்ள பிரச்சனைகள் தீா்வுகள் மட்டுமே முடிவெடுக்க அதிகாரம் உண்டு. கீழுள்ள குழுக்கள் மீது அதிகாரம் செலுத்த இயலாது.

இறுதியாக,

சோசியோகிரசி என்றநடைமுறை பல தன்னார்வ நிறுவனங்களிலும், சுயஉதவிக்குழுக்களிலும் பகுதியளவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, கூட்டமைப்பாக செயல்படும் தன்மை, பொறுப்புகளை பகிர்ந்தளிக்கும் கொள்கை உள்ள அமைப்புகளிலும், அதிகாரம் அடித்தட்டுமக்களிடம் இருக்கவேண்டும் என்ற மதிப்பு உள்ள சமூகங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துப்படுகிறது.

செயற்பாடு

பங்கேற்பாளர்கள் பங்கு பெறும் சமுதாயக்குழுக்களில் எவ்வாறு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. சோசியோகிரசி நடைமுறைக்கோட்பாடுகளுடன் அவை ஒத்துப்போகின்றனவா? என்னென்ன மாற்றங்கள் அவசியமாகிறது என்று கலந்துரையாடலாம்.

- சமுதாயக்குழுக்களின் செயல்பாடுகளில் உள்ள நிறை, குறைகள் என்ன?
- சமுதாயக்குழுக்களால், சமூகமாற்றத்தை ஏற்படுத்தமுடிகிறதா?
- அனைத்துமக்களும் பங்கேற்கவாய்ப்பு உள்ளதா?
- சமுதாயக்குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் முழுமையான பங்கேற்பிற்கு என்ன நடவடிக்கைகள் அவசியம்?

மேலும் வாசிப்பிற்கான புத்தகங்கள்


1. சனாதன தர்மமும் சமூகநீதியும் : G.V. Ravindranath # New Century Book House.
2. Life of Savitribai Phule Mohana Somasundaram Vijaykumar P, Her stories publications.
3. சாதியை அழித்தொழித்தல் : Dr.B.R. Ambadkar, Kalachuvadu Publications
4. டாக்டர் அம்பேத்கரும் இந்திய அரசியல் சட்ட வரலாறும் : M. Neelakandan, New Century BookHouse.
5. தீண்டாமை எப்போது தோன்றியது ? by M. Neelakandan, New Century Bookhouse.
6. பெண் ஏன் அடிமையானாள்? (Tamil Edition). Thanthai Periyar.
7. நமது மக்களாட்சி - இந்திய பாராளுமன்ற வரலாறு. எம்.எஸ். மதிவாணன், ஓவியா பதிப்பகம்.
8. சமயங்களில் அரசியல், தொ.பரமசிவன், 2016 விகடன்டாட்காம்பதிப்பகம்.
9. தென்னிந்திய குலங்களும் குடிகளும் : ந.கந்தையா பிள்ளை.சி 2018 # 87,769 in Kindle Store
10. பெண்ணும் ஆணும் ஒண்ணு : ஓவியா, Kindle Edition
11. சமூக நலமும், மனநலமும். டாக்டர் . எம்.திருநாவுக்கரசர், ஜனவரி 2020 மனநலம் படைப்புகள்.
12. Nationalism without Nzations in India, G. Aloysius (1997) Oxford Publications.
13. “Many Voices, One Song : shared power with sociocracy” is published by the sociocracy for All (SoFA) press.